# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## **2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க,**
## **இலங்கை மத்திய வங்கிச் சட்டம்**

---

[*2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2023, செத்தெம்பர் மாதம் 15 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 216.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க,**
**இலங்கை மத்திய வங்கிச் சட்டம்**

[*2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச. வ.- ஓ. 12/2019*

**இலங்கை மத்திய வங்கியைத் தாபிப்பதற்காகவும்; (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தை நீக்குவதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்பு பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங் களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

*1.* (1) இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறானதும் (இச்சட்டத்தில், "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட தேதியானது, அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி, இச்சட்டம் தொடர்பிலான சான்றிதழ் எத்தேதியன்று புறக்குறிப்பிடப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து ஆறுமாதங்களைக்கொண்ட காலப்பகுதியொன்றுக்குப் பிந்தாதவொரு தேதியாகவிருத்தல் வேண்டும்.

## பாகம் I

### மத்திய வங்கியைத் தாபித்தல்

*மத்திய வங்கியைத் தாபித்தல்*

*2.* (1) இலங்கையின் பணவகையான, நிதிசார் மற்றும் கொடுப்பனவு முறைமைகளின் நிருவாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்துகை என்பவற்றுக்காகப் பொறுப்பாகவுள்ள ஓர் அதிகாரசபையாகவிருப்பதற்கு (இச்சட்டத்தில், ''மத்திய வங்கி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை மத்திய வங்கி என

அழைக்கப்பட்டு அறியப்படும் நிறுவனமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) மத்திய வங்கியானது இடையறாவழியுரிமையையும் பொது இலச்சினையையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக விருத்தல் வேண்டுமென்பதுடன் அதன் கூட்டிணைப்புப் பெயரில் வழக்குத்தொடுக்கலாம் அல்லது அதற்கெதிராக வழக்குத் தொடுக்கப்படலாம்.

*பிரதான தொழிலிடம்*

**3.** மத்திய வங்கியானது அதன் பிரதான தொழிலிடத்தைக் கொழும்பில் கொண்டிருத்தல் வேண்டும்.

*மத்திய வங்கியின் மூலதனம்*

**4.** (1) மத்திய வங்கியின் மூலதனமானது, ஆளும் சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக முழுமையாக ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட தொகையாகவிருத்தல் வேண்டும்.

(2) மத்திய வங்கியின் மூலதனமானது அரசாங்கத்தினால் மட்டுமே வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் கைமாற்றப் படத்தக்கதாகவோ அல்லது ஏதேனும் வில்லங்கத்துக்கு அமைந்த தாகவோ இருத்தலுமாகாது.

(3) மத்திய வங்கியின் மூலதனமானது, அமைச்சரின் ஒருப் பாட்டுடன் ஆளும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகைகளினால் திரட்டு நிதியத்திலிருந்து குறித் தொதுக்கப்பட்ட நிதிகளிலிருந்து அதிகரிக்கப்படலாம்.

(4) மத்திய வங்கியின் மூலதனமானது எந்நேரத்திலும் குறைக்கப் படுதலாகாது.

**5.** (1) மத்திய வங்கியானது நிருவாக மற்றும் நிதிசார் தன்னாட்சியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*மத்திய வங்கியின் தன்னாட்சியும் வகைகூற வேண்டியவையும்*

(2) மத்திய வங்கியானது தன்னாட்சியுடையதாகவும் வகைகூற வேண்டியதாகவும் இருத்தல் வேண்டும்.

(3) மத்திய வங்கியின் தன்னாட்சிக்கு எல்லா நேரங்களிலும் மதிப்புக்கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஆள் எவரும் அல்லது உருவகம் எதுவும், மத்திய வங்கியின் ஆளுநர் அல்லது ஆளும் சபையினதும் பணக் கொள்கைச் சபையினதும் வேறு உறுப்பினர்கள் அல்லது மத்திய வங்கியின் ஊழியர்கள் இச்சட்டத்தின்கீழ் தமது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அவர்களின்மீது ஏதேனும் செல்வாக்கைச் செலுத்துதலோ அல்லது மத்திய வங்கியின் செயற்பாடுகளுடன் தலையிடுதலோ ஆகாது.

(4) இச்சட்டத்தின்கீழான தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் தவிர, மத்திய வங்கியின் ஆளுநர் அல்லது ஆளும் சபையினதும் பணக் கொள்கைச் சபையினதும் வேறு உறுப்பினர்கள், மத்திய வங்கியின் ஊழியர்கள் அல்லது மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள், எவரேனுமாளிடமிருந்து அறிவுறுத்தல்களை நாடுதலாகாது அல்லது எடுத்தலாகாது:

ஆயின், எவ்வாறாயினும் இப்பிரிவிலுள்ளதெதுவும், இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் மத்திய வங்கி அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பயனுறப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு அது உயர்தொழில்சார் அல்லது நிபுணத்துவ மதியுரையை நாடுவதைத் தடுத்தலாகாது.

*மத்திய வங்கியின் குறிக்கோள்கள்*

**6.** (1) மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோளானது, உள்நாட்டு விலை நிலையுறுதியை எய்துதலும் பேணுதலுமாதல் வேண்டும்.

(2) மத்திய வங்கியின் மற்றைய குறிக்கோள் நிதிசார் முறைமையின் நிலையுறுதியை உறுதிப்படுத்துதலாதல் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது, அதன் குறிக்கோள்களை எய்துவதற்குப் பங்கமின்றியும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாகவும், ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக அரசாங்கத்தின் பொதுவான பொருளாதாரக் கொள்கைக் கட்டமைப்பை ஆதரித்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆரம்பக் குறிக்கோளைப் பின்பற்றுவதில், மத்திய வங்கியானது, அதன் இயல்திற மட்டம் தொடர்பில் வெளியீட்டின் நிலையுறுதிப்பாட்டை மற்றவற்றுக்கிடையில், கணக்குக்கெடுத்தல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட குறிக்கோளைப் பின்பற்றுவதில், மத்திய வங்கியானது, நிதிசார் முறைமையின் அபிவிருத்தியையும் வினைத்திறனையும், மற்றவற்றுக்கிடையில், கணக்குக்கெடுத்தல் வேண்டும்.

*மத்திய வங்கியின் தத்தவங்களும், கடமைகளும், பணிகளும்*

**7.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, மத்திய வங்கியின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) பணக் கொள்கையைத் தீர்மானித்தலும் நடைமுறைப் படுத்துதலும்;

(ஆ) செலாவணி வீதக் கொள்கையைத் தீர்மானித்தலும் நடைமுறைப்படுத்துதலும்;

(இ) இலங்கையின் அலுவலகமுறையான சர்வதேச ஒதுக்குகளின் சாதுரியமான மற்றும் பயனுள்ள முகாமையை வைத்திருத்தலும் முகாமைசெய்தலும்;

(ஈ) இலங்கையின் நாணயத்தை வழங்குதலும் முகாமை செய்தலும்;

(உ) கொடுப்பனவு முறைமைகளை நிருவகித்தலும், மேற்பார்வை செய்தலும், ஒழுங்குபடுத்துதலும் அத்தகைய கொடுப்பனவு முறைமைகளின் காப்பையும், பயனுறு தன்மையையும், வினைத்திறனையும் உறுதிப்படுத்து தலும்;

(ஊ) நிதிநிறுவனங்களைப் பதிவுசெய்தலும், அவற்றுக்கு உரிமமளித்தலும், அவற்றை ஒழுங்குபடுத்துதலும், மேற்பார்வை செய்தலும்;

(எ) மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்ட நிதிநிறுவனங்களைத் தீர்மானித்தலும்;

(ஏ) பேரண்ட முன்மதியுடைய கொள்கை வழிமுறைகளைக் கடைப்பிடித்தலும் நடைமுறைப்படுத்தலும்;

(ஐ) புள்ளிவிபரங்களைச் சேகரித்தலும் காண்பித்தலும்;

(ஒ) அரசாங்கத்துக்கான நிதிசார் மதியுரைஞராகவும் வங்கி யாளராகவும் செயலாற்றுதலும்;

(ஓ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத் தின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்ட அளவிற்கு அரசாங்கத்தின் முகவராகச் செயலாற்றுதல்;

(ஔ) அதன் கொள்கைகளும் தொழிற்பாடுகளும் பற்றிப் பாராளுமன்றத்துக்கும், அரசாங்கத்துக்கும், பொதுமக்க ளுக்கும் தெரிவித்தலும்;

(க) பகிரங்கச் சர்வதேச நிதிநிறுவனங்களுட்பட, சர்வதேச ஒழுங்கமைப்புகளுடன் ஒத்துழைத்தலும் அவற்றில் பங்குபற்றுதலும் மற்றும் அதன் குறிக்கோள்களுடன் தொடர்புபட்ட கருமங்கள் சம்பந்தமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பகிரங்க நிறுவனங்களுடன் ஒத்துழைத் தலும்;

(ங) இலங்கையில் நிதிசார் உட்சேர்க்கையை மேம்படுத்தலும்;

(ச) நிதிசார் முறைமையின் நிதியுறுதியை உறுதிப்படுத்தும் வழிவகையாக வைப்புக் காப்புறுதியையும் திரவத்தன்மை ஆதாரத் திட்டங்களையும் தாபித்தலும்;

(ஞ) அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனங்களை வைத்திருத்தலும், விற்பனை செய்தலும், கையுதிர்த்தலும், ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதலும்;

(ட) அது அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய சொத்துக்களை வைத்திருத்தலும் அத்தகைய பொறுப்புக்களை உறுதலும்; அத்துடன்

(ண) பொதுவாக, மத்திய வங்கியின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அல்லது எய்துவதற்கு அவசியமானவாறான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான அல்லது அவற்றுக்கு உகந்தனவான அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

(2) ஆளும் சபை, பணக் கொள்கைச் சபை மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர், மத்திய வங்கியின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் மத்திய வங்கிக்கு அளிக்கப்பட்ட, அல்லது குறித்தளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றதலும், வேண்டும்.

பாகம் II

## ஆளும் சபை, பணக் கொள்கைச் சபை, ஆளுநர் மற்றும் பிரதி ஆளுநர்கள்

*மத்திய வங்கியின் ஆளும் சபை*

**8.** (1) மத்திய வங்கியின் அலுவல்களினது நிருவாகத்தையும் முகாமையையும் மேல்நோக்குகின்ற மற்றும் பணக் கொள்கை தவிர மத்திய வங்கியின் பொதுக்கொள்கையைத் தீர்மானிக்கின்ற

பொறுப்புடைமை பொறுப்பிக்கப்பட்டுள்ளதும் (இச்சட்டத்தில் ‘‘ஆளும் சபை’’ எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) மத்திய வங்கியின் ஆளும் சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆளும் சபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஆளும் சபையின் தவிசாளராக இருக்கவேண்டிய மத்திய வங்கியின் ஆளுநர்; அத்துடன்

(ஆ) பொருளியல், வங்கித்தொழில், நிதி, கணக்கீடு மற்றும் கணக்காய்வு, சட்டம் அல்லது ஆபத்து முகாமை என்பவற்றில் நிபுணத்துவத்தைக் கொண்டிருக்க வேண்டிய ஆறு உறுப்பினர்கள்.

(3) மத்திய வங்கியின் ஊழியரொருவராக இருக்கவேண்டிய ஆளும் சபையின் செயலாளர் மத்திய வங்கியின் ஆளுநரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) தவிசாளர் தவிர ஆளும் சபையின் உறுப்பினர்கள் மத்திய வங்கியின் மேற்பார்வைசார் மற்றும் கொள்கை வகுத்தமைத்தற் பணியை நிறைவேற்றுதல் வேண்டுமென்பதுடன், மத்திய வங்கியின் ஏதேனும் நிறைவேற்றுப் பணிகளை நிறைவேற்றதலுமாகாது.

(5) ஆளும் சபையின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) பணக் கொள்கை தவிர பொதுவான கொள்கை முடிபுகளை எடுத்தல்;

(ஆ) ஏதேனும் நிதிநிறுவனத்துக்கு அறிவுறுத்தல் வழங்குதல், அல்லது கொடுப்பனவு, தீர்த்துவைத்தல் மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைகளை ஒழுங்குபடுத்துதல் உட்பட, வலுவுறுத்தல் வழிமுறைகளை எடுத்தலும்,

அத்தகைய நிறுவனங்களுக்கான பெறுநரொருவரை நியமித்தலும்;

(இ) இச்சட்டத்தினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக, நிருவாக வழிமுறைகளை எடுத்தல்;

(ஈ) மத்திய வங்கியின் கூட்டிணைப்பு மூலோபாயத்தை வகுத்தமைத்தல்;

(உ) மத்திய வங்கியின் வரவுசெலவுத் திட்டத்தை அங்கீகரித்தல்;

(ஊ) மத்திய வங்கியின் வருடாந்தக் கணக்குகளையும் நிதிக் கூற்றுக்களையும் அங்கீகரித்தல்;

(எ) மத்திய வங்கியையும் மத்திய வங்கியின் ஊழியர்களினது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் ஒழுங்குபடுத்துகின்ற பொதுவான கட்டுக்கோப்பையும் ஒழுங்குபடுத்துதல்;

(ஏ) மத்திய வங்கியின் ஊழியர்களுக்கான நியமனங்கள், பதவியுயர்வுகள் என்பவற்றுக்காகவும் அவர்களின்மீது ஒழுக்காற்றுகட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதற்காகவும் திட்டங்களைத் தயாரித்தல்;

(ஐ) மத்திய வங்கியின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரை நியமித்தல்;

(ஒ) மத்திய வங்கியின் நிதிசார் அறிக்கையிடுதல், ஆபத்து முகாமை, இணங்கியொழுகுகை, தகவல் தொழினுட்பவியல், பாதுகாப்பு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை என்பவற்றை மேல்நோக்குதல்;

(ஓ) மத்திய வங்கியின் நிருவாகத்தை மேற்பார்வை செய்தல்;

(ஔ) சர்வதேச ரீதியில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க மத்திய வங்கியின் கணக்கீட்டு கொள்கைகளும் நடவடிக்கைமுறைகளும் உட்பட கொள்கைகளைக் கடைப்பிடித்தல்;

(க) மத்திய வங்கியின் கணக்காய்வுக் குழுவினால் தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வறிக்கையை அங்கீகரித்தலும் உள்ளகக் கணக்காய்வாளரின் விதப்புரைகள் மத்திய வங்கியில் நடைமுறைப்படுத்தப்படுவதனைக் கண்காணித்தலும்; அத்துடன்

(ங) பொதுவாக, மத்திய வங்கியின் நிருவாகத்துக்கும் முகாமைக்கும் அவசியமானவாறான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான அல்லது அவற்றுக்கு உகந்தனவான அத்தகைய எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல் மற்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுத்தல்.

(6) ஆளும் சபையானது, 5 ஆம் உட்பிரிவின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட பணிகளை மத்திய வங்கியின் ஆளுநருக்கு எழுத்தில் கையளிக்கலாம்.

(7) ஆளும் சபையானது, மத்திய வங்கியின் நிருவாகத்தையும் முகாமையையும் மேற்பார்வைசெய்வதில் உதவுவதற்கு விசேட சபைகளையும் உபகுழுக்களையும் தாபிக்கலாம்.

(8) ஆளும் சபையானது, மத்திய வங்கியின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதனை, புரிவதனை மற்றும் நிறைவேற்றுவதனைப் பாதிக்கின்ற அல்லது அது சம்பந்தமான அல்லது அதன் இடைநேர்விளைவான ஏதேனும் கருமம் தொடர்பாக அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய விதிகளை ஆக்கலாம்.

(9) ஆளும் சபையானது, மத்திய வங்கியின் நிருவாகம், முகாமை மற்றும் தொழிற்பாட்டிலும் மத்திய வங்கியின் தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் மத்திய வங்கியினால் உறப்பட்ட எல்லாச் செலவினங்களையும் எதிர்கொள்ளும் நோக்கத்துக்காக மத்திய வங்கியின் நிதிகளைப் பயன்படுத்தலாம்.

ஆளும் சபையின் கூட்டங்கள்.

**9**. (1) ஆளும் சபையின் கூட்டங்கள் ஆகக்குறைந்தது ஒரு மாதத்துக்கு ஒரு தடவையேனும் மற்றும் மத்திய வங்கியின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கும், புரியும் மற்றும் நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமானவாறாக அடிக்கடியாகவும் நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) ஆளும் சபையின் தவிசாளர், சமுகமாயிருப்பின், ஆளும் சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமைதாங்குதல்வேண்டும். தவிசாளர் ஏதேனும் கூட்டத்துக்கு வருகைதராதிருப்பின், அத்தகைய கூட்டத்தில் சமூகமாகவுள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் 8 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(3) ஆளுநர் சபையின் கூட்டங்கள் தவிசாளரினால் அல்லது ஆளும் சபையின் எவரேனும் இரண்டு உறுப்பினர்களின் எழுத்திலான வேண்டுகோளின்பேரில் கூட்டப்படுதல் வேண்டும்.

(4) ஆளும் சபையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) ஆளுநர் சபையின் ஒவ்வோர் உறுப்பினரும் ஒரு வாக்கைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், ஆளும் குழுவின் ஏதேனும் கூட்டத்தில் வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில், அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குகின்ற ஆள், அவரது வாக்குடன் சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(6) ஆளும் சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிவுக்கான எல்லாக் கருமங்களும் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்குகளின்மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும்.

(7) ஆளும் சபையானது, இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங் களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்காகவும், புரிவதற்காகவும், நிறைவேற்றுவதற்காகவும் நடவடிக்கைமுறை பற்றிய விதிகளை ஆக்கலாம் என்பதுடன் ஆளும் சபையின் கூட்டங் கள் எம்முறையில் நடாத்தப்படவேண்டுமோ அம்முறைக்காக அத்தகைய நடவடிக்கைமுறை பற்றிய விதிகளை ஆக்கலாம்.

(8) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, ஆளும் சபை யானது, ஆளும் குழுவின் கூட்டங்களும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்துதலும் தொடர்பான நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(9) ஆளும் சபையின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும், ஆளும் சபையில் வெற்றிடமொன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது ஆளும் சபையின் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் குறைபாடொன்று இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்ற தாகக் கருதப்படுதலாகாது.

ஆளும் சபையின் நடவடிக்கை களினது அந்தரங்கத் தன்மை

**10.** (1) ஆளும் சபையின் கூட்டங்களினது நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அந்தரங்கமானவை யாகவிருத்தல் வேண்டும். ஆளும் சபையானது அவசியமென அது கருதினால், ஏதேனும் கருமத்தின் மீது அதன் முடிபுகளுள் எவற்றுக்கும் பிரசித்தம் கொடுக்கலாம்.

(2) ஆளும் சபையின் ஒவ்வொரு கூட்டத்தினதும் நிகழ்ச்சிக் குறிப்புக்கள் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குகின்ற ஆளினாலும் ஆளும் சபையின் செயலாளரினாலும் கையொப்ப மிடப்படுதலும் வேண்டும்.

(3) ஆளும் சபையின் ஒவ்வொரு கூட்டத்தினதும் நிகழ்ச்சிக் குறிப்புகள் எழுத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஆகக் குறைந்தது பன்னிரண்டு ஆண்டு காலப்பகுதிக்கேனும் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்

பணக் கொள்கைச் சபை

**11.** (1) (இச்சட்டத்தில், "பணக் கொள்கைச் சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மத்திய வங்கியின் பணக் கொள்கைச் சபையொன்று இருத்தல் வேண்டும்; உள்நாட்டு விலையின் நிலையுறுதியை

செய்வதற்கும் பேணுவதற்குமென நெகிழ்வான பணவீக்க இலக்கிடுதற் கட்டுக்கோப்புக்கிணங்க மத்திய வங்கியின் பணக் கொள்கையை வகுத்தமைத்தலும் நெகிழ்வான செலாவணி வீதத் தோற்றப்பாட்டை நடைமுறைப்படுத்தலும் இதற்குப் பொறுப்பிக்கப் பட்டுள்ளது.

(2) பணக் கொள்கைச் சபையானது, இலங்கையின் பேரண்ட பொருளாதார மற்றும் நிதிநிலைமையைக் கணக்கிற்கெடுத்து, பணத்தின் வழங்குகை, பணம் கிடைக்கக்கூடியமை மற்றும் பணத்தின் கொள்விலை என்பவற்றை ஒழுங்குபடுத்துதல் வேண்டும்.

*பணக் கொள்கைச் சபையின் அமைப்பு*

**12.** (1) பணக் கொள்கைச் சபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பணக் கொள்கைச் சபையின் தவிசாளராகவிருக்க வேண்டிய மத்திய வங்கியின் ஆளுநர்;

(ஆ) 8 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியைப் பின்பற்றி நியமிக்கப்பட்ட ஆளும் சபையின் உறுப்பினர்கள்;

(இ) பொருளியலில் அல்லது நிதியில் இரண்டு நிபுணர்கள்;

(ஈ) விலை நிலையுறுதிக்குப் பொறுப்பாகவுள்ள மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்; அத்துடன்

(உ) நிதிசார் முறைமை நிலையுறுதிக்குப் பொறுப்பாகவுள்ள மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்.

(2) மத்திய வங்கியின் ஊழியரொருவராகவிருக்கவேண்டிய பணக்கொள்கைச் சபையின் செயலாளர் மத்திய வங்கியின் ஆளுநரினால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

பணக் கொள்கைச் சபையின் கூட்டங்கள்

**13.** (1) பணக்கொள்கைச் சபையானது ஆகக் குறைந்தது இரண்டு மாதங்களில் ஒரு தடவையேனும் கூடுதல் வேண்டும்.

(2) ஒவ்வோராண்டும், பணக் கொள்கைச் சபையின் கூட்டங்கள் பற்றிய அட்டவணை அவ்வாண்டில் முதலாவது கூட்டத்துக்கு முன்னர் மத்திய வங்கியினால் வெளியிடப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் அவசரநிலைமை காரணமாக மேலதிகக் கூட்டமொன்று அல்லது கூட்டத்தின் மீள் அட்டவணைப்படுத்தல் தேவைப்படுகின்றதெனப் பணக் கொள்கைச் சபையின் தவிசாளர் கருதினால், கூட்டங்களின் அட்டவணை மாற்றப்படலாம். அத்தகைய சூழ்நிலைகளில், கூட்டங்களின் மீளாய்வு செய்யப்பட்ட அட்டவணை செயல்முறைக்குகந்தவரை விரைவாக மத்திய வங்கியினால் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) பணக் கொள்கைச் சபையின் தவிசாளர், சமுகமாயிருப்பின், பணக் கொள்கைச் சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர் ஏதேனும் கூட்டத்திற்கு வருகைதரா திருப்பின், அக்கூட்டத்தில் சமுகமாகவுள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(5) பணக் கொள்கைச் சபையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப் பெண் எட்டு உறுப்பினர்களாதல் வேண்டும்; இவர்களுள் ஒருவர் மத்திய வங்கியின் ஆளுநராக அல்லது அவர் வருகைதராதிருப் பின், விலை நிலையுறுதிக்குப் பொறுப்பாகவுள்ள மத்திய வங்கியின் பிரதி ஆளுநராக இருத்தல் வேண்டும்.

(6) பணக் கொள்கைச் சபையின் ஒவ்வோர் உறுப்பினரும் ஒரு வாக்கைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், பணக் கொள்கைச் சபையின் ஏதேனும் கூட்டத்தில் வாக்குகள் சமமாக விருக்கும் பட்சத்தில், அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்கும் உறுப்பினர், அவரது வாக்குடன் சேர்த்து மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(7) பணக் கொள்கைச் சபையின் ஏதேனும் கூட்டத்தில் முடிபுக்கான எல்லாக் கருமங்களும் சமுகமளித்துள்ள உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் வாக்குகளின்மூலம் முடிபுசெய்யப்படுதல் வேண்டும்.

(8) பணக் கொள்கைச் சபையின் கூட்ட நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு அந்தரங்கமானவையாகவிருத்தல் வேண்டும்.

(9) பணக் கொள்கைச் சபையானது, அதனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தை, அத்தகைய தீர்மானத்துக்கு அடிப்படையாக விருக்கும் அண்மைய பொருளாதார அபிவிருத்திகளும் பொருளாதார வெளிநோக்கம் பற்றிய விளக்கமொன்றுடன் பணக் கொள்கைச் சபையின் ஒவ்வொரு கூட்டமும் நிறைவுசெய்யப்பட்ட பின்னர் வெளியிடுதல் வேண்டும்.

(10) பணக் கொள்கைச் சபையானது, அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் என்பவற்றுக்காக நடவடிக்கைமுறைபற்றிய விதிகளை ஆக்கலாம்.

(11) நடவடிக்கைமுறைபற்றிய விதிகள், பணக் கொள்கைச் சபையின் கூட்டங்கள் எம்முறையில் நடாத்தப்படுதல் வேண்டுமோ அம்முறைக்காக ஏற்பாடுசெய்யலாம்.

(12) பணக் கொள்கைச் சபையின் ஒவ்வொரு கூட்டத்தினதும் நிகழ்ச்சிக்குறிப்புக்கள் எழுத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஆகக்குறைந்தது பன்னிரெண்டு மாதகாலப்பகுதியொன்றுக்காகவேனும் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

(13) பணக் கொள்கைச் சபையின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும், பணக் கொள்கைச் சபையில் ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது பணக் கொள்கைச் சபையின் எவரேனும் உறுப்பினரது நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

*மத்திய வங்கியின் ஆளுநரினதும் பிரதி ஆளுநர் களினதும் தத்துவங்கள்*

**14.** (1) மத்திய வங்கியின் ஆளுநர் மத்திய வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் பிரதான பிரதிநிதியாகவும் இருத்தல் வேண்டும்.

(2) மத்திய வங்கியின் ஆளுநர், பிரதி ஆளுநர்களின் கலந்தாலோசனையுடன், பின்வருவனவற்றுக்குப் பொறுப்பாதல் வேண்டும்:-

(அ) மத்திய வங்கியின் நாளாந்த தொழிற்பாடுகள்;

(ஆ) ஆளும் சபையினதும் பணக் கொள்கைச் சபையினதும் கொள்கை முடிபுகளை நடைமுறைப்படுத்துதல்.

(3) மத்திய வங்கியின் ஆளுநர், ஆளும் சபையினால் அல்லது பணக் கொள்கைச் சபையினால் மத்திய வங்கியின் ஆளுநருக்கு வெளிப்படையாகக் குறித்தளிக்கப்பட்ட மத்திய வங்கியின் அத்தகைய வேறு பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(4) மத்திய வங்கியின் ஆளுநர், மத்திய வங்கியின் சார்பில் ஏதேனும் விதியை, கட்டளையை, பணிப்பை, அறிவித்தலை, ஒப்பந்தத்தை, வாக்குறுதிப்பத்திரத்தை, பிணைப்பொறுப்பை, அறிக்கையை, ஐந்தொகையை, கூற்றை அல்லது அத்தகைய வேறு ஆவணத்தைக் கையொப்பமிடுவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) மத்திய வங்கியின் ஆளுநர், அவரது உயர்தொழிலின் முழு நேரத்தையும் மத்திய வங்கியின் அலுவல்களுக்கு அர்ப்பணித்தல் வேண்டும்.

(6) மத்திய வங்கியின் ஆளுநர், பகிரங்க அல்லது தனிப்பட்டதும் மற்றும் ஊதியமளிக்கப்பட்ட அல்லது ஊதியமளிக்கப்படாத எத்தகையதுமான ஏதேனும் வேறு பதவியை அல்லது தொழிலை ஏற்றுக்கொள்ளுதலோ அல்லது வகித்தலோ ஆகாது.

(7) மத்திய வங்கியின் ஆளுநர், அவரது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுள் எவற்றையும் மத்திய வங்கியின் சிரேட்ட பிரதி ஆளுநருக்கு அல்லது ஆளும் சபையின் ஒருப்பாட்டுடன், மத்திய வங்கியின் எவரேனும் வேறு பிரதி ஆளுநருக்குக் கையளிக்கலாம்.

(8) மத்திய வங்கியின் ஆளுநர் தற்காலிகமாகக் கடமைக்கு வராதவிடத்து அல்லது அவரது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தற்காலிகமாக இயலாதவராகவுள்ளவிடத்து, 15 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பெயர்குறிக்கப்பட்ட மத்திய வங்கியின் சிரேட்ட பிரதி ஆளுநர், மத்திய வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலராகச் செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன், மத்திய வங்கியின் ஆளுநரினது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அதிகாரமுடையவராதலும் வேண்டும்.

(9) மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் மத்திய வங்கியின் சிரேட்ட பிரதி ஆளுநர் ஆகிய இருவரும் தற்காலிகமாகக் கடமைக்கு வராதவிடத்து அல்லது தமது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தற்காலிகமாக இயலாதவராகவுள்ளவிடத்து, ஆளும் சபையானது, மத்திய வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலராகச் செயலாற்றுவதற்கு மத்திய வங்கியின் பிரதி ஆளுநரொருவரை நியமித்தல் வேண்டும்.

(10) ஒன்பதாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மத்திய வங்கியின் பிரதி ஆளுநர், மத்திய வங்கியின் பதில் பிரதான நிறைவேற்று அலுவலராகப் பெயர் குறிக்கப்படுதல் வேண்டும்.

(11) (அ) மத்திய வங்கியின் ஆளுநர் ஏதேனும் காரணத்துக்காகப் பதவியை வறிதாக்குமிடத்து அல்லது பதவிவகிக்காதொழியுமிடத்து, 15 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பெயர் குறிக்கப்பட்ட மத்திய வங்கியின் சிரேட்ட பிரதி ஆளுநர், மத்திய வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலராகச் செயலாற்றுதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) விற் குறிப்பீடுசெய்யப்பட்ட மத்திய வங்கியின் சிரேட்ட பிரதி ஆளுநர், ஏதேனும் காரணத்துக்காகப் பிரதான நிறைவேற்று அலுவலராகச் செயலாற்றுவதற்கு இயலாதவராகவுள்ளவிடத்து, (10) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பெயர் குறிக்கப்பட்ட பதில் பிரதான நிறைவேற்று அலுவலர் மத்திய வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலராகச் செயலாற்றுதல் வேண்டும்.

(12) மத்திய வங்கியின் ஆளுநர் என்ற பதவி நாற்பத்தைந்து நாட்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்கு வறிதாகவிருத்த லாகாது.

மத்திய வங்கியின் ஆளுநர், நியமிக்கப்பட்ட வேறு உறுப்பினர்கள் மற்றும் சிரேட்ட பிரதி ஆளுநரின் நியமனம்

**15.** (1) அமைச்சர், 17 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற் கொண்டு, பின்வருவனவற்றைச் சனாதிபதிக்கு விதந்துரைத்தல் வேண்டும்:-

(அ) மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்படவேண்டிய ஆளொருவரின் பெயர்; அத்துடன்

(ஆ) (இச்சட்டத்தில், "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 8 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப் பட்ட ஆளும் சபையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டிய ஆட்களினதும் 12 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பணக் கொள்கைச் சபையின் நிபுணர்களினதும் பெயர் கள்.

(2) எட்டாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளும் சபையின் உறுப்பினர்களாக நியமிக்கப்படவேண்டிய ஆட்களின் பெயர்களை விதந்துரைப்பதில், அமைச்சர், ஆளும் சபையின் உறுப்பாண்மையில் பல்வகைத் தன்மையை ஊக்குவிப்பதற்கான விருப்பாற்றலைக் கணக்குக் கெடுத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அமைச்சரின் விதப்புரைகளைப் பெற்றதன்மேல், அவ்வாறு விதந்துரைக்கப்பட்ட ஆட்களின் பொருத்தமாந்தன்மைபற்றி சனாதிபதி திருப்திப்படின், சனாதிபதி அத்தகைய ஆட்களின் பெயர்களை அங்கீகாரத்துக்காக அரசியலமைப்புப் பேரவைக்கு விதந்துரைத்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரம் பெறப்பட்டதன்மேல், சனாதிபதி, அத்தகைய ஆட்களை மத்திய வங்கியின் ஆளுநராகவும் ஆளுநர் சபையினதும் பணக் கொள்கைச் சபையினதும் ஏனைய உறுப்பினர்களாகவும் நியமித்தல் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரின் பெயரை அங்கீகரிப்பதற்கு அரசியலமைப்புப் பேரவை மறுக்குமிடத்து, அமைச்சர் புதிய பெயர்நியமனமொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன் (2) ஆம், (3) ஆம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய பெயர்நியமனத்திற்கு அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவின்கீழ் விதந்துரைக்கப்பட்ட எவரேனுமாள் அத்தகைய நியமனத்துக்குப் பொருத்தமானவரல்லாரெனச் சனாதிபதி கருதுமிடத்து, சனாதிபதி, எழுத்தில், அத்தகைய நிகழ்வை அதற்கான காரணங்களுடன் சேர்த்து அமைச்சருக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அமைச்சர் அத்தகைய தொடர்பாடலைப் பாராளுமன்றத்தில் இடுதலும் வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட தொடர்பாடலொன்றை அமைச்சர் பெறுமிடத்து, அவர் வேறோராளைச் சனாதிபதிக்கு விதந்துரைத்தல் வேண்டும். இவ்வுட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விதப்புரைக்கு (2), (3), (4) மற்றும் (6) ஆகிய உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(8) அமைச்சர் ஆளும் சபையின் விதப்புரையின்மீது –

(அ) நியமிக்கப்படவேண்டிய மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எண்ணிக்கையினரான பிரதி ஆளுநர்களை நியமித்தலும் வேண்டும்; அவர்கள், இச்சட்டத்தினால் அல்லது ஆளும் சபையினால் அவர்களுக்குக் குறித்தளிக்கப்பட்ட அத்தகைய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) பந்தி (அ) வின்கீழ் நியமிக்கப்பட்ட மிகச் சிரேட்ட பிரதி ஆளுநரை மத்திய வங்கியின் சிரேட்ட பிரதி ஆளுநராகப் பெயர் குறித்தல் வேண்டும்.

(9) இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு நியமனமும் 17 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும்.

(10) மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்கள் மத்திய வங்கியின் ஊழியர்களாகவிருத்தல் வேண்டும்.

(11) மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்களை நியமித்தலும் மத்திய வங்கியின் சிரேட்ட பிரதி ஆளுநரைப் பெயர்குறித்தலும் ஆளுநர் சபையின் விதிகளினால் விதித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்களுக் கிணங்கச் செய்யப்படுதல் வேண்டும்.

(12) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட நியமனங்கள், முன்னர் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவுறு வதற்கு முன்னர் முப்பது நாட்களைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு மேற்படாமல் இறுதியாக்கப்படுதல் வேண்டும்.

(13) அரசியலமைப்புப் பேரவை அங்கீகாரமளித்த தேதியிலிருந்து முப்பது நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதியினுள் அரசியலமைப்புப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட எவரேனுமாளை (4) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிப்பதற்குச் சனாதிபதி தவறுகின்ற பட்சத்தில், அத்தகைய ஆள், அத்தகைய காலப்பகுதிக்கு முடிவுறும் தேதியிலிருந்து பயனுறுவதாக, விடயத்துக்கேற்ப, மத்திய வங்கியின் ஆளுநராக, ஆளும் சபையின் உறுப்பினரொருராக அல்லது பணக் கொள்கைச் சபையின் நிபுணரொருவராக நியமிக்கப் பட்டுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

*மத்திய வங்கியின் ஆளுநரினதும் நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினரினதும் பதவிக்காலம்*

**16.** (1) மத்திய வங்கியின் ஆளுநரினதும் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரினதும் பதவிக்காலம் அவரது நியமனத் தேதியன்று தொடங்குகின்ற ஆறாண்டுக் காலப்பகுதியொன்றாதல் வேண்டும்.

(2) மத்திய வங்கியின் ஆளுநர் அல்லது நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் அவரது பதவிக்காலம் முடிவுறுமுன்னர் பதவியை வறிதாக்குமிடத்து, பதவியை அவ்வாறு வறிதாக்குகின்ற மத்திய வங்கியின் ஆளுநரின் அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதியின்போது பதவிவகிப்பதற்கு 15 ஆம் பிரிவின் நியதிகளின்படி அவரினிடத்தில் வேறோராள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) காலங்கழிவதன்மூலம் பதவியை வறிதாக்குகின்ற மத்திய வங்கியின் ஆளுநரும் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரும் மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய எவரேனும் உறுப்பினர் களின் கூட்டுமொத்தப் பதவிக்காலப்பகுதி பன்னிரெண்டு ஆண்டுகளை விஞ்சுதலாகாது.

*மத்திய வங்கியின் ஆளுநர், நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் பிரதி ஆளுநர்களின் தகவுடைமையும் தகைமையீனங் களும்*

**17.** (1) பதினைந்தாம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆட்கள், மத்திய வங்கி அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பயணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் என, பகிரங்க மற்றும் உயர்தொழில்சார் வாழ்க்கையில் திறமையெய்தி யுள்ளவர்களும் பொருளியல், பணக் கொள்கை, வங்கித்தொழில், நிதி, கணக்கீடு செய்தல் மற்றும் கணக்காய்வு செய்தல், சட்டம் அல்லது ஆபத்து முகாமை என்ற துறைகளில் உயர்தொழில்சார் அல்லது கல்விசார அனுபவத்தை உடையவர்களும் சிறப்பும் நேர்மையும் கொண்டுள்ளவர்களுமான ஆட்களாகவிருத்தல் வேண் டும்.

(2) ஆளொருவர் பின்வருமாறிருப்பின், மத்திய வங்கியின் ஆளுநராக, அல்லது மத்திய வங்கியின் நியமிக்கப்பட்ட உறுப்பின ரொருவராக அல்லது பிரதி ஆளுநரொருவராக நியமிக்கப்படு வதற்கு அல்லது தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும் :-

(அ) அத்தகைய ஆள் மோசடி, ஏமாற்றுகை, நேர்மையீனம் அல்லது உயர்தொழில்சார் துர்நடத்தையை உட்படுத்து கின்ற ஏதேனும் செயலைப் புரிந்தவராகவிருப்பின் அல்லது அது புரியப்படுவதில் சம்மந்தப்பட்டவராக விருந்திருப்பின்;

(ஆ) அத்தகைய ஆள் மோசடி, ஏமாற்றுகை, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியற் செயற்பாட்டை உட்படுத்துகின்ற ஒரு குற்றச்சாட்டு பற்றிய அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டதன் விளைவாக இலங்கையில் அல்லது

வெளிநாட்டில், ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையினால், மேற்பார்வைசார் அதிகாரசபையினால் உயர்தொழில்சார் கழகத்தினால், விசாரணை ஆணைக் குழுவினால், நியாயசபையினால் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் குழுவினாலான புலனாய் வொன்றுக்கு அல்லது விசாரணையொன்றுக்கு அமைந்த வராகவிருப்பின்;

(இ) அத்தகைய ஆள் நேர்மையீனத்தை உட்படுத்துகின்ற அல்லது நிதிசார் முகாமை சம்பந்தமாகப் புரியப்பட்ட ஒரு குற்றச்செயல் தொடர்பில் அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற ஏதேனும் தவறு தொடர்பில் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(ஈ) அத்தகைய ஆள் இலங்கையில் பொறுப்பு விடுவிக்கப் படாத கடனிறுக்க வகையற்றவராகவிருப்பின் அல்லது இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள தகுதி வாய்ந்த நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதிமன்ற மொன்றினால் வங்கிமுறிந்தவரென வெளிப்படுத்தப் பட்டிருப்பின்;

(உ) அத்தகைய ஆள் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தின் ஏதேனும் தீர்ப்பை அல்லது கட்டளையைத் திருப்திசெய்வதற்கு அல்லது தனிசொன்றை மீளச்செலுத்துவதற்கு தவறியிருப்பின்;

(ஊ) அத்தகைய ஆள் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்தைக் கொண்ட நீதிமன்றமொன்றினால் சித்தசுவாதீனமற்றவராக வெளிப்படுத்தப்பட்டிருப்பின்;

(எ) அத்தகைய ஆள் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள ஏதேனும் நிதிநிறுவனத்தில் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவில் பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது வேறு அலுவலரொருவராகச்

சேவையாற்றுவதிலிருந்து ஓர் ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வைசார் அதிகாரசபையின் கட்டளையொன்றின் மூலம் அகற்றப்பட்டிருப்பின் அல்லது இடைநிறுத்தப் பட்டிருப்பின்;

(ஏ) அத்தகைய ஆள் –

(i) எந்த நிறுவனத்தின் உரிமம் இடை நிறுத்தப் பட்டுள்ளதோ அல்லது இல்லாதாக்கப்பட்டுள் ளதோ அந்த ஏதேனும் நிதிநிறுவனத்தில்; அல் லது

(ii) எந்த நிதிநிறுவனம் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் ஒடுக்கப்பட்டுள்ளதோ அல்லது ஒடுக்கப்படுகின்றதோ அல்லது கட்டாயமான முறையில் ஒழித்துக்கட்டப்படுகின்றதோ அந்த ஏதேனும் நிதிநிறுவனத்தில்,

பிரதான நிறைவேற்று அலுவலரொருவராகவிருந்திருப்பின் அல்லது வேறேதேனும் அதிகாரங்கொண்ட உத்தியோகத்தை வகித்திருப்பின்;

(ஐ) அத்தகைய ஆள் மத்திய வங்கியின் ஊழியரொருவராக இருப்பின்:

ஆயின், எவ்வாறாயினும், இத்தகைமையீனம், மத்திய வங்கியின் ஊழியர்களிடையேயிருந்து மத்திய வங்கியின் பிரதி ஆளுநரொருவரை நியமித்தலின் விடயத்தில் ஏற்புடையற்பாலதாதலாகாது;

(ஒ) அத்தகைய ஆள் பாராளுமன்றத்தின், அல்லது ஒரு மாகாண சபையின் அல்லது ஓர் உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராகவிருப்பின் அல்லது வரின்;

(ஓ) அத்தகைய ஆள் ஒரு பகிரங்க அல்லது நீதித்துறை அலுவலரொருவராகவிருப்பின் அல்லது வரின் அல்லது கல்விசார் உத்தியோகமொன்றல்லாத எந்தப் பதவிக்கான அல்லது உத்தியோகத்துக்கான சம்பளம் அல்லது வேறு ஊதியம் அல்லது அவரது முன்னைய தொழிலிருந்து பெறப்படுகின்ற மூப்போய்வூதிய நன்மைதவிர்ந்த நன்மையானது பகிரங்க நிதிகள், மாகாண நிதிகள் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் நிதிகளி லிருந்து செலுத்தப்படற்பாலதோ அந்த ஏதேனும் பதவியை அல்லது உத்தியோகத்தை ஒன்றில் தேர்தல் மூலம் அல்லது நியமனம்மூலம் வகிக்கின்றவராக விருப்பின் :

ஆயின், எவ்வாறாயினும் இவ்வுட்பிரிவிலுள்ளதெது வும், (3) ஆம் உட்பிரிவின்கீழ் தற்காலிகமாகப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள மத்திய வங்கியின் எவரேனும் பிரதி ஆளுநர் அத்தகைய நிறுவனத்தில் அத்தகைய பதவியை அல்லது உத்தியோகத்தை வகிக்கின் றார் என்ற காரணத்தினால் மட்டும், மத்திய வங்கியின் அத்தகைய பிரதி ஆளுநரை ஆளும் சபையின் ஒருப்பாட்டு டன் பதவியிலிருந்து அகற்றுவதற்கு அமைச்சருக்குத் தத்துவமளிப்பதாகக் கொள்ளப்படுதலாகாது:

ஆயின், மேலும், இவ்வுட்பிரிவிலுள்ளதெதவும், (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்திலுள்ள பதவியொன்றில் அல்லது உத்தியோகமொன்றில் சேவை யாற்றுவதற்குத் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ள மத்திய வங்கியின் பிரதி ஆளுநரொருவர், அவர் ஒரு பகிரங்க அலுவலராகப் பதவி அல்லது உத்தியோகம் வகிக்கையில் மத்திய வங்கியின் பணக் கொள்கைச் சபையினது ஆளும் சபையினது அல்லது கலந்தாராய்வு களில் பங்குபற்றுவதற்கு அவரை இயலச்செய்வதாகப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலாகாது;

(ஔ) ஓர் அரசியற் கட்சியின் அலுவலரொருவராகவிருப்பின்; அல்லது

(க) மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்பட்ட உருவக மொன்றின் அல்லது இலங்கையிலுள்ள அலுவலகங்களி னூடாக தொழிற்படுகின்ற ஒரு நிதிநிறுவனத்தின் பணிப்பாளர், அலுவலர் அல்லது ஊழியர் ஒருவராக, அல்லது ஒரு நிதிநிறுவனத்தின் ஒப்புரவு அக்கறை யொன்றின் பயனுகர் சொந்தக்காரராக இருப்பின் அல்லது வரின்.

(3) ஆளும் சபையானது, அமைச்சரின் ஒருப்பாட்டுடன், ஏதேனும் அமைச்சின், திணைக்களத்தின், பகிரங்கச் சர்வதேச நிதிநிறுவனத் தின் அல்லது இச்சட்டத்தின் கீழ் நிதிநிறுவனமொன்றாக விராதவொரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் பதவியொன்றில் அல்லது உத்தியோகமொன்றில் சேவையாற்றுவதற்கு மத்திய வங்கியின் பிரதி ஆளுநரொருவரைத் தற்காலிகமாக விடுவிக்க லாம்.

பதவியிலிருந்து விலகுதல்

**18**. பதினைந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பதவியில் சேவையாற்றுகின்ற எவரேனு மாள், சனாதிபதிக்கும் அமைச்சருக்கும் மூன்று மாதங்களுக்குக் குறையாத அறிவித்தலை எழுத்தில் கொடுப்பதன்மூலம் அத்தகைய பதவியிலிருந்து விலகலாம்.

தகைமையீனங்களும் பதவியிலிருந்து அகற்றுதலும்

**19**. (1) பதினைந்தாம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனுமாள் பின்வருமாறுள்ளாரென இயைபான நியமிக்கப்பட்ட ஆளின் கேட்பொன்றையடுத்து அமைச்சரின் விதப்புரையின்மீதும் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத் துக்கமையவும் அத்தகைய ஆள் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்:-

(அ) மூன்று மாதங்களுக்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்கு நீடித்துள்ள உடல் அல்லது உள இயலாமை காரணமாக அத்தகைய பதவிக்குரிய தத்துவங்களையும், கடமை

களையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் இயலாதுள்ளாரென்று;

(ஆ) மத்திய வங்கியின் இயைபான நடத்தைக் கோவைக்கு இணங்கியொழுகவில்லையென்று;

(இ) ஆளும் சபையின் அங்கீகாரமின்றி மூன்றுமாதங்களுக்கு மேற்பட்ட தொடர்ச்சியான காலப்பகுதிக்கு அத்தகைய பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தவறியுள்ளாரென்று; அல்லது

(ஈ) 17 பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி தகமையற்றவராகவுள்ளாரென்று.

(2) அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தைப் பெற்ற தன்மேல், சனாதிபதி, 15 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனுமாளை எழுத்தில் அகற்றலாமென்பதுடன் பின்வருவனவற்றை பதவியிலிருந்து அகற்றுதல் கடிதத்தில் கூறுதலும் வேண்டும்:-

(அ) அகற்றுகையானது பயனுக்குவரும் தேதி; இது, பதவியிலிருந்து அகற்றதல் கடிதம் எத்தேதியன்று பெறப்படுகின்றதோ அத்தேதிக்கு முந்தியவொரு தேதியாகவிருத்தலாகாது; அத்துடன்

(ஆ) அகற்றுகைக்கான காரணங்கள்.

(3) பதினைந்தாம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனுமாள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கேட்புத் தொடங்குவதற்கு முன்னர் அல்லது கேட்பின்போது சனாதிபதியினால் பதவியிலிருந்து இடைநிறுத்தப்படலாம்.

(4) பதினைந்தாம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனுமாள் பின்வருமாறுள்ளாரென இயைபான ஆளின் கேட்பொன்றையடுத்து அமைச்சர் திருப்திப்படும் பட்சத்தில், ஆளும் சபையின் மதியுரையொன்றின்மேல் அமைச்சரினால் அத்தகைய ஆள் பதவியிலிருந்து அகற்றப்படலாம்:-

(அ) மூன்று மாதங்களுக்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்கு நீடித்துள்ள உடல் அல்லது உள இயலாமை காரணமாக அத்தகைய பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் இயலாதுள்ளாரென்று;

(ஆ) மத்திய வங்கியின் இயைபான நடத்தைக் கோவைக்கு இணங்கியொழுகவில்லையென்று;

(இ) ஆளும் சபையின் அங்கீகாரமின்றி மூன்றுமாதங்களுக்கு மேற்பட்ட தொடர்ச்சியான காலப்பகுதிக்கு அத்தகைய ஆளின் பதவிக்குரிய தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் தவறியுள்ளாரென்று; அல்லது

(ஈ) 17 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி தகைமையற்றவராகவுள்ளாரென்று.

(5) பதினைந்தாம் பிரிவின் (4) ஆம் மற்றும் (8) ஆம் உட்பிரிவுகளைப் பின்பற்றி நியமிக்கப்பட்ட ஆளெவரும் (1) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதுக்கள் தவிர்ந்த வேறு ஏதேனும் ஏதுவின்மீது பதவியிலிருந்து அகற்றப்படுதலாகாது.

(6) பதினைந்தாம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனுமாள், (4) ஆம் உட்பிரிவின்கீழ் கேட்புத் தொடங்கு முன்னர் அல்லது கேட்பின்போது, ஆளும் சபையின் மதியுரைமீது அமைச்சரினால் பதவியிலிருந்து இடைநிறுத்தப்படலாம்.

**20.** மத்திய வங்கியின் ஆளுநராக, ஆளும் சபையின் அல்லது பணக் கொள்கைச் சபையின் உறுப்பினரொருவராக, பிரதி ஆளுநராக அல்லது மத்திய வங்கியின் ஊழியரொருவராக இல்லாதொழியும் எவரேனுமாள், அத்தகைய இல்லாதொழிகைத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதி முடிவுறும் வரை ஏதேனும் நிதிநிறுவனத்தில் அல்லது அத்தகைய எத்தகையதுமான எந்தப் பதவியிலும் சேவையாற்றுதலாகாது.

*அடுத்துப் பின்னரான நடவடிக்கைகளின் மீதான மட்டுப்பாடு*

**21.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், மத்திய வங்கியின் ஆளுநரினது ஊதியமும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படற்பாலனவான படிகளும் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*ஊதியம்*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட ஊதியத்தொகை மற்றும் படிகளானவை அத்தகைய ஆளுநருக்கும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தில் குறித்துரைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஊதியம் அல்லது படிகள் அத்தகைய ஆளுநரினதும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களினதும் பதவிக்காலங்களின்போது குறைக்கப்படுதலாகாது.

(3) ஊதியம் அல்லது படிகள் எதுவும் மத்திய வங்கியினது இலாபங்களின் அல்லது அதன் அரசிறைகளுள் எவற்றினதும் அடிப்படையின்மீது இருத்தலாகாது.

**22.** ஆளும் சபையானது ஆளும் சபையின் மற்றும் பணக் கொள்கைச் சபை உறுப்பினர்களுக்கு ஏற்புடையற்பாலனவான அத்தகைய நடத்தைக் கோவைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

*நடத்தைக் கோவைகள்*

## பாகம் III

### *மத்திய வங்கியின் ஊழியர்கள்*

**23.** (1) ஆளும் சபையானது, மத்திய வங்கியின் ஊழியர்களை நியமிக்கலாம் மற்றும் பதவியிலிருந்து அகற்றலாம் என்பதுடன், அவர்களின் ஊதியமுட்பட அவர்களின் தொழில் நியதிநிபந்தனைகளைத் தீர்மானிக்கலாம்.

*மத்திய வங்கியின் ஊழியர்களை நியமித்தலும் பதவியிலிருந்து அகற்றுதலும்*

(2) ஊதியமெதுவும் மத்திய வங்கியினது இலாபங்களின் அல்லது அதன் அரசிறையுள் எதனதும் அடிப்படையின்மீது இருத்தலாகாது.

(3) ஆளும் சபையானது, ஊழியர்களினதும் அவர்களின் தங்கிவாழுநர்களினதும் நியமத்தர்களினதும் நன்மைக்காக ஓய்வூதிய அல்லது சகாய நிதியங்களை அல்லது திட்டங்களைத் தாபித்து ஒழுங்குபடுத்தலாமென்பதுடன் அத்தகைய ஏதேனும் நிதியத்தக்கு அல்லது திட்டத்துக்கு உதவுதொகைகளைச் செலுத்தலாம்.

(4) ஆளும் சபையானது, **114** ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆளும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, ஆளும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நோக்கங்களுக்காக மத்திய வங்கியின் ஊழியர்களுக்குக் கடன்களையும் முற்பணங்களையும் வழங்கலாம்.

(5) மத்திய வங்கியின் ஒவ்வோர் ஊழியருக்குமான கட்டாய ஓய்வுபெறும் வயது அறுபதாண்டுகளாதல் வேண்டுமென்பதுடன், மத்திய வங்கியின் ஒவ்வோர் ஊழியருக்குமான விருப்புத் தெரிவு மூலம் ஓய்வுபெறும் வயது ஐம்பத்தைந்தாண்டுகளாதலும் வேண்டும்.

(6) மத்திய வங்கியானது, மத்திய வங்கியின் எல்லா ஊழியர்களுக்குமான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு தொடர்பான விதிகளை ஆக்குதல் வேண்டும்.

*ஊழியர்கள் வேறேதேனும் பதவியை ஏற்றுக்கொள்ளாதிருத்தல்*

**24.** (1) மத்திய வங்கியின் ஊழியர்கள் தமது உயர்தொழில்சார் சேவைகளை மத்திய வங்கிக்கு அர்ப்பணித்தல் வேண்டுமென்பதுடன் மத்திய வங்கியின் நியமத்தரொருவராகத்தவிர அல்லது எவரேனும் ஊழியர் தமது உயர்தொழில்சார் சேவைகளை வங்கிக்கு அர்ப்பணிப்பதற்கான ஆற்றலுடன் முரண்படாதவையும் அல்லது அதனைத் தடுக்காதவையும் மற்றும் அது தொடர்பாக ஆளும் சபையினால் தீர்மானிக்கப்பட்ட வரையறைகளினுள் உள்ளவையுமான கல்வி அல்லது கல்விசார் நோக்கங்களுக்காகத்தவிர, பகிரங்க

அல்லது தனிப்பட்ட, அல்லது ஊதியமளிக்கப்பட்ட அல்லது ஊதியமளிக்கப்படாத வேறேதேனும் பதவியை அல்லது தொழிலை ஏற்றுக்கொள்ளுதலுமாகாது அல்லது வகித்தலுமாகாது.

(2) ஆளும் சபையானது, ஏதேனும் அமைச்சின், திணைக்களத்தின், பகிரங்கச் சர்வதேச நிதிநிறுவனத்தின் அல்லது ஒரு நிதி நிறுவனமாகவிராத பகிரங்கக்கூட்டுத்தாபனத்தின் வேண்டுகோளின் பேரில், ஆளும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கு அமைய, அத்தகைய அமைச்சில், திணைக்களத்தில், பகிரங்கச் சர்வதேச நிதிநிறுவனத்தில் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தில் ஏதேனும் பதவியில் அல்லது உத்தியோகத்தில் சேவையாற்றுவதற்கு, மத்திய வங்கியின் எவரேனும் அலுவலரை, அத்தகைய அலுவலரின் சம்மதத்துடன் தற்காலிகமாக விடுவிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், மத்திய வங்கியின் எவரேனும் அலுவலரின் தற்காலிகமான விடுவிப்பு, அமைச்சரவை அத்தகைய வேறு நீண்ட காலப்பகுதியை அங்கீகரித்தாலொழிய, ஐந்தாண்டு காலப்பகுதியை விஞ்சுதலாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின் நியதிகளின்படி ஏதேனும் பதவியில் அல்லது உத்தியோகத்தில் சேவையாற்றுவதற்கு விடுவிக்கப்படும் மத்திய வங்கியின் எவரேனும் அலுவலர், அத்தகைய அலுவலர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மத்திய வங்கியிலுள்ள அவரது பதவியிலிருந்து அகற்றப்படின், அத்தகைய பதவியிலிருந்து அல்லது உத்தியோகத்திலிருந்து அகற்றப்பட்டவராகக் கருதப்படுதல் வேண்டும்.

நடத்தைக் கோவை

**25**. ஆளும் சபையானது, மத்திய வங்கியின் ஊழியர்களுக்கு ஏற்புடையற்பாலனவான நடத்தைக் கோவைகளைத் தயாரித்தல் வேண்டும்.

## பாகம் IV

## பணவீக்க இலக்கு

பணவீக்க இலக்கு

**26**. (1) அமைச்சரும் மத்திய வங்கியும், மத்திய வங்கியினால் எய்தப்படவேண்டிய பணவீக்க இலக்கை எடுத்துக்காட்டுதல் தொடர்பாகப் பணக் கொள்கைக் கட்டுக்கோப்பு உடன்படிக்கையொன்றைக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்டவாறான பணவீக்க இலக்குத் தொடர்பாக உடன்பாடொன்றை எய்துவதற்கு அமைச்சரும் மத்திய வங்கியும் இயலாதுள்ளபட்சத்தில், அமைச்சர், பண வீக்க இலக்குக்கான தனது முன்மொழிவையும் மத்திய வங்கியின் முன்மொழிவையும் அமைச்சரவைக்குமுன்னர் இடுதல் வேண்டு மென்பதுடன் அமைச்சரவை மத்திய வங்கியினால் எய்தப்பட வேண்டிய பணவீக்க இலக்கைத் தீர்மானித்தலும் வேண்டும்.

(3) அமைச்சர், பணக் கொள்கைக் கட்டுக்கோப்பு உடன் படிக்கையை, அது தொடர்பான பணவீக்க இலக்குகளும் வேறு நிலை அளபுருக்களும் உட்பட, அத்தகைய உடன்படிக்கைத் தேதியிலிருந்து ஒருவாரகாலப்பகுதியினுள் வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்.

(4) அமைச்சரும் மத்திய வங்கியும் பணவீக்க இலக்கையும் அது தொடர்பான வேறெவையேனும் நிலை அளபுருக்களையும், விதிவிலக்கான சூழ்நிலைகளில் அவ்வாறு தேவைப்படுத்தினால் மூன்றாண்டுகளுக்கொரு தடவை அல்லது அத்தகைய வேறு இடங்களில் மீளாய்வு செய்யலாம். அமைச்சர் அத்தகைய மீளாய்வின் மேல், அவ்வாறு மீளாய்வுசெய்யப்பட்டதும் அதுதொடர்பானதுமான பணவீக்க இலக்கையும் நிலை அளபுருக்களையும் அத்தகைய மீளாய்வைத் தேவைப்படுத்திய விதிவிலக்கான சூழ்நிலைகளையும் வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்.

(5) மத்திய வங்கியானது இப்பிரிவின் உட்பிரிவுகள் (1) மற்றும் (4) இன் நியதிகளின்படி தீர்மானிக்கப்பட்ட இடைவெளிக்குள் பணவீக்க இலக்கினை இரண்டு தொடர்ச்சியான காலாண்டுகளுக் காக எதிர்கொள்ளத் தவறினால்–

(அ) பணவீக்க இலக்கினை எய்துவதற்குத் தவறியமைக்கான காரணங்கள்;

(ஆ) மத்திய வங்கியினால் எடுக்கப்படுவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ள பரிகார நடவடிக்கைகள்; அத்துடன்

(இ) பணவீக்க இலக்கு எந்தக் காலவரையினுள் எய்தப்படக் கூடுமோ அந்தக் காலவரையறையின் ஒரு மதிப்பீடு,

என்பவற்றைக் குறித்துக்காட்டி பணக் கொள்கைச் சபை அமைச்சரினூடாகப் பாராளுமன்றத்திற்கு ஓர் அறிக்கையினைச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன், அதனைப் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்தலும் வேண்டும்.

(6) பணக் கொள்கைச் சபை, பணக் கொள்கை மற்றும் மத்திய வங்கியின் பணக் கொள்கையை நிறைவேற்றுவதுடன் தொடர்புபட்ட ஏனைய சாதனங்களினைத் தீர்மானிக்க வேண்டும் என்பதுடன் பணக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துக்காக அத்தகைய சாதனங்களினைச் சீர்செய்யும் அதிகாரத்தினையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

பணவீக்கம்மீதான அறிக்கையினை வெளியிடுதல்

**27**. பணவீக்கத்தின் அண்மைக்கால அசைவுகள் பணவீக்கத் திற்கான மூலங்கள் மற்றும் பணவீக்கத்திற்கான நடுத்தரக்கால எறிவுகள் மற்றும் அத்தகைய எறிவுகளிற்கான முக்கிய ஆபத்து களினை விளக்கும் ஒரு அறிக்கையினை மத்திய வங்கி ஆறு மாதங்களிற்கொரு தடவை வெளியிட வேண்டும்.

விலையின் நிலையுறுதியைப் பேணிக் காப்பதற்கான நடவடிக்கை

**28**. (1) இலங்கையில் உள்நாட்டு விலையின் நிலையுறுதிக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடிய பொருளாதார இடையூறுகளினைப் பணக் கொள்கைச் சபை எதிர்பார்க்குமிடத்து அல்லது அத்தகைய உள்நாட்டு விலையின் நிலையுறுதிக்கு உண்மையில் ஆபத்தாக வுள்ள விலை மட்டத்திலான அசாதாரண அசைவுகள் இருக்கு மாயின்–

(அ) அச்சூழ்நிலைகளில் தோதானவையும் இந்தச் சட்டத்தி னால் அதிகாரமளிக்கப்பட்டவையுமான அத்தகைய கொள்கைகளைக் கடைப்பிடிப்பதும் அத்தகைய பரிகார வழிமுறைகள் எடுக்கப்படுவதனைச் செய்விப்பதும்;

(ஆ) ஆகக் குறைந்தது பின்வரும் பகுப்பாய்வை உள்ளடக்க வேண்டிய விபரமான அறிக்கையினை அமைச்சருக்குச் சமர்ப்பிப்பதும் பொதுமக்களின் நலன்களுக்குப் பங்கமின்றி இருப்பின் அதனை வெளியிடுவதும், பணக் கொள்கைச் சபையின் கடமையாதல் வேண்டும்–

(i) எதிர்பார்க்கப்படுகின்ற பொருளாதார இடையூறுகளிற்கான அல்லது விலைமட்டத்தின் உண்மையான அசாதாரணமான அசைவுகளிற்கான காரணங்கள்;

(ii) இலங்கையில் உற்பத்தி, தொழில் மற்றும் வருமான மட்டம்மீது அத்தகைய இடையூறுகள் மற்றும் அசைவுகளின் சாத்தியமான விளைவுகள்; அத்துடன்

(iii) பணக் கொள்கைச் சபை ஏற்கனவே மேற்கொண்டுள்ள வழிமுறைகள் மற்றும் அது மேற்கோள்வதற்கு உத்தேசிக்கின்ற அல்லது அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்படுவதற்கு விதந்துரைக்கின்ற பணவகையான, அரசிறை அல்லது நிருவாக வழிமுறைகள்.

(2) முதலாவது அறிக்கையினைச் சமர்ப்பித்த சூழ்நிலைகள் உள்நாட்டு விலையின் நிலையுறுதிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவனவாக அமையும்வரை பணக் கொள்கைச் சபை மேலும் அறிக்கைகளை காலத்திற்குக் காலம் தொடர்ந்தும் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) இப்பிரிவிற் குறிப்பீசெய்யப்பட்ட அறிக்கைகளை, அவற்றைக் கவனத்துட்கொள்வதற்கு அமைச்சர், அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகையவோர் இடம்பெறுகையைத் தவிர்ப்பதற்குத் தோதான முடிபுகளை எடுத்தலும் வேண்டும்.

பாகம் V

**பணவகையான மற்றும் ஏனைய தொழிற்பாடுகள்**

கணக்குகளைத் திறத்தல்

**29.** (1) மத்திய வங்கியானது அதன் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதில்-

(அ) நிதிநிறுவனங்கள், வெளிநாட்டு வங்கிகள் மற்றும் அரசாங்க உருவகங்கள்;

(ஆ) மத்திய வங்கிகள், பகிரங்கச் சர்வதேச நிதிநிறுவனங்கள் உட்பட சர்வதேச ஒழுங்கமைப்புகள், வெளிநாட்டு அரசாங் கங்கள் மற்றும் நன்கொடை வழங்குநர் ஒழுங்கமைப்புகள்,

என்பனவற்றிற்காகப் பணம், பெறுமதிமிக்க உலோகங்கள் மற்றும் பிணைக் கணக்குகளைத் திறந்து அதன் புத்தகங்களில் பேணலாம்.

(2) மத்திய வங்கி அதன் புத்தகங்களில் கணக்குகளைத் திறப்பதற் கான நிபந்தனைகளை விதிகள்மூலம் விதந்துரைக்கலாம்.

(3) மத்திய வங்கியானது, பணம், பெறுமதிமிக்க உலோகங்கள் மற்றும் பிணையக் கணக்குகளைத் திறந்து-

(அ) மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்துகை மற்றும் மேற்பார்வைக்கு அமைந்த நிதிநிறுவனங்கள்;

(ஆ) மத்திய வங்கிகள், வைப்பகங்கள், வெளிநாட்டு வங்கிகள் மற்றும் பகிரங்கச் சர்வதேச நிதிநிறுவனங்கள் உள்ளடங்க லாகச் சர்வதேச ஒழுங்கமைப்புகள்,

என்பனவற்றின் புத்தகங்களில் பேணலாம்.

*மத்திய வங்கியின் கட்டுக்காப்புச்சார் சேவைகள்*

**30.** சந்தை வீதங்கள் மற்றும் ஆளும் சபையினால் விதித்துரைக்கப் படக்கூடிய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் ஒத்திசைவான கட்டணங்களின் கொடுப்பனவுக்கமைய, மத்திய வங்கியானது, அது பெயர்குறிக்கக்கூடியவாறான பெயர்குறிக்கப்பட்ட நாணயத்தாள்கள் மற்றும் குற்றிகளுக்காக மற்றும் ஆளும் சபை தீர்மானிக்கக்கூடிய பிணையங்கள், பெறுமதிமிக்க உலோகங்கள் மற்றும் வேறெவை யேனும் பெறுமதிமிக்க சொத்துக்களுக்காக நிதிநிறுவனங்களுக்குக் கட்டுக்காப்புச்சார் வசதிகளை வழங்கலாம்.

*திறந்த சந்தைத் தொழிற்பாடு*

**31.** (1) மத்திய வங்கியின் குறிக்கோள்களை எய்துவதற் கெனவும் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்ப தற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் மத்திய வங்கி-

(அ) நேரடியாக அல்லது மீள்கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் வாங்குதல் மற்றும் விற்றல் மூலமும் கடன்வழங்கல் அல்லது கடன்பெறுதல் உரிமைக்கோரிக்கைகள் மற்றும் சந்தைப்படுத்தத்தக்க சாதனங்கள் அத்துடன் பெறுமதிமிக்க உலோகங்கள் என்பனவற்றின் மூலமும் நிதிச்சந்தைகளில் தொழிற்படலாம்;

(ஆ) போதுமான இணையுறுக்களின் அடிப்படையில் இலங்கையில் தொழிற்படும் உரிமமளிக்கப்பட்ட வங்கிகள் மற்றும் ஏனைய சந்தைப் பங்குபற்றுநர்களுடன் கடன் தொழிற்பாடுகளை நடாத்தலாம்; அல்லது

(இ) பணக் கொள்கைச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான நியதிகள் மற்றும் நிபந்தனைகளின்மீது பிணையங்களை வழங்கலாம்.

(2) பணக் கொள்கைச் சபை பின்வருவனவற்றைக் குறித்துரைத்து விதிகளை ஆக்குதல் வேண்டும்:-

(அ) பணக் கொள்கை நோக்கத்திற்காகத் திறந்த சந்தை மற்றும் கடன் தொழிற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட வேண்டிய சாதனங்கள் மற்றும் இணையுறுக்களின் வகைகள்; அத்துடன்

(ஆ) பந்தி (அ) இன் நோக்கங்களுக்காக மத்திய வங்கி அந்த நிபந்தனைகளின்கீழ் கொடுக்கல்வாங்கல்களைச் செய்து கொள்ளலாமோ அந்த நிபந்தனைகள்.

(3) பின்வருவனவற்றைக் குறித்துரைத்து ஆளும் சபை விதிகளை ஆக்குதல் வேண்டும்:-

(அ) பணக் கொள்கையைத் தவிர்ந்த வேறு கடன் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படவேண்டிய சாதனங்கள் மற்றும் இணையுறுக்களின் வகைகள்; அத்துடன்

(ஆ) பந்தி (அ) இன் நோக்கங்களுக்காக மத்திய வங்கி எந்த நிபந்தனைகளின்கீழ் கொடுக்கல்வாங்கல்களைச் செய்து கொள்ளலாமோ அந்த நிபந்தனைகள்.

நிதி நிறுவனங்களின் ஒதுக்குகளை ஒழுங்குபடுத்தல்

**32.** (1) மத்திய வங்கியானது,-

(அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியும்; அத்துடன்

(ஆ) (இச்சட்டத்தில் இயைபான நிதிநிறுவனங்கள் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பணக் கொள்கைச் சபையினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டளைக்கற்களின்கீழ் அடங்குகின்ற அத்தகைய வேறு நிதிநிறுவனங்களையும்,

அவற்றின் வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராகவும் அவசியமெனப் பணக் கொள்கைச் சபை கருதக்கூடியவாறான அவற்றின் ஏனைய நிதிசார் பொறுப்புக்களுள் அத்தகையவற்றுக்கெதிராகவும் ஒதுக்குகளைப் பேணும்படி தேவைப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அந்த நோக்கத்திற்காக ஒதுக்குகள் எந்த வைப்புப் பொறுப்புக்களின் வகுப்புகளுக்கெதிராக மற்றும் ஏனைய நிதிசார் பொறுப்புக்களின் வகுதிகளுக்கெதிராகப் பேணப்படுவதற்குத் தேவைப்படுத்தப் படுகின்றதோ அந்த வைப்புப் பொறுப்புக்களின் வகுப்புகள் மற்றும் ஏனைய நிதிசார் பொறுப்புக்களின் வகைகளை விதித்துரைத்தல் வேண்டும்.

(2) உட்பந்தி (1) இன்கீழ் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று அல்லது இயைபான நிதிநிறுவனத்தினால் பேணப்பட வேண்டும் எனத் தேவைப்படுத்தப்படும் ஒதுக்குகள் அதன் வைப்புப் பொறுப்புக்களின் ஒவ்வொரு வகுப்பினதும் மற்றும் அதன் ஏனைய நிதி பொறுப்புக்களின் ஒவ்வொரு வகுதியினதும் அளவுகளுடன் விகிதாகாரப்படி இருத்தல் வேண்டுமென்பதுடன், உட்பிரிவு (3) இற்கு அமைய, மத்திய வங்கியில் ரூபாய் வைப்புக்களின் வடிவத்தை எடுத்தலும் வேண்டும்.

(3) இலங்கையின் தேசியப் பொருளாதாரம் மற்றும் வங்கித் தொழில் மற்றும் நிதிசார் முறைமைகளின் நலன் கருதி, மத்திய வங்கியில் ரூபாய் வைப்புக்கள் தவிர்ந்த வேறு சொத்துக்களின் வடிவத்தில் ஒதுக்குகளின் ஏதேனும் பாகம் பேணப்படவேண்டும் எனப் பணக் கொள்கைச் சபை கோரலாம்.

ஒதுக்கு விகிதங்களைப் பணக் கொள்கைச் சபை விரித்துரைத்தல் வேண்டும்

**33.** (1) முப்பத்திரெண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒதுக்குகள் பேணப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் வைப்புப் பொறுப்புக்களின் ஒவ்வொரு வகுப்பும் ஏனைய நிதிப்பொறுப்புககளின் ஒவ்வொரு வகுதிக்கும் ஏற்புடையற்பாலன வான ஒதுக்கு விகிதங்களைப் பணக் கொள்கைச் சபை விரித் துரைக்கவேண்டும் என்பதுடன் அவசியமானது என அது கருதும் போது, காலத்திற்குக்காலம், அத்தகைய விகிதங்களை வேறு படுத்தலாம்.

(2) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது இயைபான நிதிநிறுவனம், வைப்புப் பொறுப்புக்களின் ஏதேனும் வகுப்புக்கு ஏனைய நிதிப்பொறுப்புக்களின் ஏதேனும் வகுதிக் கெதிராக ஏதுக்கொன்றைக் பேணத் தேவைப்படுத்தப்படுமிடத்து, பணக் கொள்கைச் சபை அவ்வாறு தீர்மானிப்பின், நாட்டின் தேசிய பொருளாதாரம் மற்றும் வங்கித்தொழில் மற்றும் நிதிமுறைமைகளின் நலன் கருதி, இத்தகைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது தொடர்புடைய நிதியியல் நிறுவனத்திற்கு, விடயத்தின் அடிப்படையில் ஒதுக்கு எனப் பேணப்படும் தொகை அல்லது அதன் ஒரு பகுதி மீது நாணயக் கொள்கை சபை நிர்ணயிக்கக்கூடிய வீதத்திலான வட்டியை மத்திய வங்கி செலுத்து தல் வேண்டும்.

(3) ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் அல்லது இயைபான நிதிநிறுவனத்தினால் பேணப்பட்ட ஒதுக்குகள், அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் அல்லது இயைபான நிதிநிறுவனத்தினால் பேணப்படுவதற்குத் தேவைப் படுத்தப்பட்ட ஒதுக்குகளுக்குக் குறைவாகவுள்ளவிடத்து, அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது இயைபான நிதிநிறுவனம் பணக் கொள்கைச் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதத்தில் குறைவுபாட்டுத் தொகையின் மீதான வட்டியொன்றை மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

ஒதுக்குக் குறைவுபாடு களின் விளைவுகள்

**34.** உரிமமளிக்கப்பட்ட வர்த்தகவங்கி அல்லது இயைபான நிதிநிறுவனம், 32 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் அல்லது இயைபான நிதிநிறுவனத்தினால் பேணப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்குகளைப் பேணுவதற்குக் கிரமமாகத் தவறுமிடத்து, பணக் கொள்கைச் சபை, தேசிய நலன்கருதி, பின்வருவனவற்றுக்கான கட்டளையை ஆக்கலாம்:-

(அ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் அல்லது இயைபான நிதிநிறுவனத்தினால் கடன்கள் வழங்கப்படுவதனை அல்லது முதலீடுகள் செய்யப்படு வதனைத் தடைசெய்தும் அல்லது மட்டுப்படுத்தியும்;

(ஆ) அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது இயைபான நிதிநிறுவனம் அதன் பங்குதாரர்களுக்கு ஒரு பங்கிலாபத்தைக் கொடுப்பனவுசெய்யும் நோக்கத்துக்காக அதன் தேறிய இலாபங்களின் முழுமையினதும் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பாகத்தினதும் ஏற்புடைமையைத் தடைசெய்தும்.

பணவகையான கட்டுப்பாட்டின் தொழிற்பாடுசார் முறைகள்

**35.** பணக்கொள்கைச் சபை, இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப் படக்கூடியவாறான பணவகையான கட்டுப்பாட்டின் அத்தகைய வேறு முறைகளைக் கடைப்பிடிக்கும்படி ஆளும் சபைக்கு விதித் துரைக்கலாம்.

நிதிநிறுவனங் களுக்கான திரவத்தன்மை உதவி

**36.** (1) விதிவிலக்கான சூழ்நிலைகளில், மத்திய வங்கி, ஆளும் சபை தீர்மானிக்கின்றவாறான அத்தகைய நியதிநிபந்தனை களின்மீது,-

(அ) நிலவுகின்ற சந்தை வீதத்துக்கு மேற்பட இருக்கவேண்டிய தும் ஆளும் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வீதத்தின்கீழும்;

(ஆ) மத்திய வங்கியினாலான முடிபைப் பின்பற்றி புதுப்பிக்கப்படக்கூடிய தொண்ணூற்றொரு நாட்காலப்பகுதியை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்காக தொண்ணூற்றொரு நாட்காலப்பகுதியை விஞ்சாத இன்னுமொரு காலப் பகுதிக்காகவும்,

ஒரு நிதிநிறுவனத்துக்கு, அல்லது அதன் நன்மைக்காகத் திரவத் தன்மை உதவியை வழங்கலாம்.

(2) மத்திய வங்கியானது, அத்தகைய நிதியுதவியை, பரிகரிப்பு வழிமுறைகளைக் குறித்துரைக்கின்றவொரு நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையின்மீது வழங்குதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய நிதிநிறுவனம், ஆளும் சபையின் அபிப்பிராயத்தில், கடனிறுக்கவகையுள்ளதாகவும் கடனை ஆதாரப்படுத்துவதற்குப் போதிய இணையுறுவை வழங்கமுடியுமானதாகவும் நிதியுதவிக்கான கோரிக்கை, திரவத்தன்மையைச் சீராக்குவதற்கான தேவையின் அடிப்படையிலானதாகவும் இருந்தாலொழிய, அத்தகைய பொறுப்பெதுவும் மத்திய வங்கியினால் ஏற்கப்படுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட கடன்வசதிகளின் புதுப்பித்தல், தொடக்கத் தொண்ணூற்றொரு நாட்களுக்குப்பின்னர், அவற்றின் மீள்கொடுப்பனவை உறுதிப்படுத்துகின்ற எழுத்திலான அரசாங்க உத்தரவாதமொன்றைத் தேவைப்படுத்துதல் வேண்டும். அதிகபட்சப் புதுப்பித்தற் காலப்பகுதி தொண்ணூற்றொரு நாட்களாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், அதன்மேல் கடன்தொழிற்பாடுகள் மீளச்செலுத்தப்படுதலும் வேண்டும்.

(4) ஆளும் சபை, இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட கடன்தொழிற்பாடுகளுக்குப் பிணைப்பொறுப்பளிப்பதற்கு வைப்பிலிடப்படவேண்டிய அல்லது வழங்கப்படவேண்டிய இணையுறுவின் வகையையும் குறைந்தபட்சப் பெறுமதியையும் தீர்மானித்தல் வேண்டும்.

(5) உதவியளிக்கப்பட்ட நிதிநிறுவனம் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வழிமுறைகளை நடைமுறைப்படுத்தவில்லை, அல்லது வழிமுறைகள், உட்கருதப்பட்ட பெறுபேறுகளை எய்தவில்லையென மத்திய வங்கி கண்டுபிடித்தால், மத்திய வங்கியானது, 107 ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்ட நிர்வாக வழிமுறைகளுட்பட தோதான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

(6) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், மத்திய வங்கி, நிதிசார் நிலையுறுதிப் பிரச்சினைகள் இடர்நிலையிலுள்ளனவென அது கருதினால் மற்றும் நிதிசார் முறைமையில் குழப்பமொன்றைத் தவிர்ப்பதற்கு, அதன் தனித் தற்றுணிபின்படியும் ஒரு மீளக்கட்டமைத்தல் அல்லது தீர்த்துவைத்தல் திட்டத்தின் சந்தர்ப்பத்தில் நிதிசார் நிறுவனத்தின் ஒப்பேறக்கூடியதன்மையுட்பட, ஆளும் சபை தீர்மானிக்கின்ற வாறான அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீதும், கடனிலிருந்து மத்திய வங்கியினால் உறப்பட்ட எவையேனும் இழப்புகளுக்கான நிபந்தனையற்ற மற்றும் இல்லாதொழிக்கமுடியாத உத்தரவாத மொன்றை அரசாங்கம் பொதுமக்களின் நலன்கருதி மத்திய வங்கிக்கு வழங்கியுள்ள விடயங்களில் நூற்றியெண்பது நாட்களைக் கொண்ட அதிகபட்சக் காலப்பகுதியொன்றுக்கு நிதிநிறுவன மொன்றுக்கு விதிவிலக்கான சூழ்நிலைகளில் திரவத்தன்மையி லான ஆதரவை வழங்கலாம்.

## பாகம் VI

## வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளும் சர்வதேச ஒதுக்குகளும்

*மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள்*

**37.** (1) மத்திய வங்கியானது, பின்வருவனவற்றை நடாத்துவதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளில் ஈடுபடலாம்:-

(அ) வெளிநாட்டுச் செலாவணி ஏலங்கள்;

(ஆ) வழிவந்த கொடுக்கல்வாங்கல்கள்;

(இ) நேரடிக் கையாளுகைகள்; அல்லது

(ஈ) ஆளும் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக வேறெவையேனும் ஏற்றுக்கொள்தகு முறைகள்.

(2) பின்வருவனவற்றுடன் மட்டுமே வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படலாம்:-

(அ) இலங்கையில் தொழிற்படுகின்ற உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள்;

(ஆ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது வேறு வகையாகத் தாபிக்கப்பட்டதாயினுஞ்சரி, அரசாங்கமும் அரசாங்கத்தின் சார்பில் செயலாற்றுகின்ற முகவராண்மைகளும் அல்லது நிறுவனங்களும்;

(இ) வெளிநாட்டு வர்த்தக மற்றும் முதலீட்டு வங்கிகள்;

(ஈ) வெளிநாட்டு மத்திய வங்கிகள்;

(உ) சர்வதேச நிதிநிறுவனங்கள்; அத்துடன்

(ஊ) வெளிநாட்டு அரசாங்கங்கள், வெளிநாட்டு மாகாண அரசாங்கங்கள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களின் சார்பில் செயலாற்றுகின்ற முகவராண்மைகளும் அல்லது நிறுவனங்களும்.

*மத்திய வங்கியானது வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளில் ஏதெனும் தரகை ஏற்றுக் கொள்ளுதலாகாது அல்லது எவையேனும் விதிப்பனவுகளை விதித்தலாகாது*

**38.** மத்திய வங்கியானது, வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு அல்லது விற்பனை தொடர்பில், அத்தகைய கொள்வனவு அல்லது விற்பனை சம்பந்தமாக உண்மையாக உறப்படுகின்ற தந்தி அல்லது வேறு செலவுதொகைகள்தவிர, ஏதேனும் தரகை ஏற்றுக்கொள்ளுதலாகாது அல்லது எவ்விவரணத்தினதுமான ஏதேனும் விதிப்பனவை விதித்தலாகாது.

வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் அவற்றிலிருந்தான கடன்கள்

**39.** (1) மத்திய வங்கியானது, 37 ஆம் பிரிவின் (2) உட்பிரிவின் (இ), (ஈ), (உ) மற்றும் (ஊ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவ்விவரணத்தினதுமான ஏதேனும் நிறுவனத்துக்கு இணையுறுவாக்கப்பட்ட கடன்களை வழங்கலாம் அல்லது அதனிடமிருந்து கடன்களை எடுக்கலாமென்பதுடன் மத்திய வங்கியின் இயல்பைக் கருத்திட்கெடுத்து பொதுமக்கள் நலன்கருதி உசிதமானவையாகவும் அல்லது விரும்பத்தக்கவையாகவும் தோதானவையாகவும் உள்ள அத்தகைய நிறுவனங்களுடன் அத்தகைய வேறு கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக எடுக்கப்பட்ட ஏதேனும் கடன், மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட சொத்துக்களினால் பிணைப்பொறுப்பளிக்கப்படலாம்.

(3) மத்திய வங்கியானது, ஒரு வெளிநாட்டு வர்த்தக வங்கியின் அல்லது ஒரு முதலீட்டு வங்கியின் அல்லது 37 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் பந்திகள் (ஆ), (ஈ), (உ) மற்றும் (ஊ) என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் நிறுவனத்தின் முகவராக அல்லது தொடர்பாளராகச் செயலாற்றலாம்.

சர்வதேச ஒதுக்குகளை முகாமை செய்தல்

**40.** (1) மத்திய வங்கியானது, காப்பு, திரவத்தன்மை மற்றும் திரும்பல் என்பவற்றை அந்த முன்னுரிமை ஒழுங்கில் கருத்திற்கொண்டு, சர்வதேச மிகச்சிறந்த செயல்முறைகளுக்கும் ஆளும் சபையினால் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் ஒத்ததாகவுள்ள அலுவலகமுறையான சர்வதேச ஒதுக்குகளை முகாமை செய்தல் வேண்டும்.

(2) மத்திய வங்கியின் சர்வதேச ஒதுக்குகள் பின்வரும் சொத்துக்களை உள்ளடக்கலாம்:-

(அ) தங்கத்தைக் குறிக்கின்ற வரவுமீதிகளுட்பட அத்தகைய தங்கம்;

(ஆ) பின்வரும் வடிவத்தில் தடையின்றி மாற்றத்தகு வெளிநாட்டு நாணயங்களில் பெயர்குறிக்கப்பட்ட சொத்துக்கள்:-

(i) மத்திய வங்கியினால் அல்லது அதன் வரவுக்கு வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத் தாள்களும் குற்றிகளும்;

(ii) மத்திய வங்கியின் கணக்குகள், வெளிநாட்டு மத்திய மற்றும் வர்த்தக வங்கிகளின் அல்லது சர்வதேச நிதிநிறுவனங்களின் புத்தகங்களில், கோரிக்கையின்மீது அல்லது குறுகிய காலத்தினுள் செலுத்தப்படற்பாலனவான வரவுமீதிகளும் வங்கிகளுக்கிடையேயான வைப்புக்களும்.

(iii) மாகாண அரசாங்கங்கள், வெளிநாட்டு மத்திய வங்கிகள், சர்வதேச நிதிநிறுவனங்களும் முகவராண்மைகளும் உட்பட, வெளிநாட்டு அரசாங்களினால் வழங்கப்பட்ட அல்லது ஆதாரப்படுத்தப்பட்ட உடனடியாக சந்தைப் படுத்தத்தகு தனிசுப் பிணையங்கள்.

(இ) ஆளும் சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப் படக்கூடியவாறாகச் சர்வதேச பணநிதியத்தினை அத்தகைய மீளப்பெறுதல் உரிமைகளின் வைத்திருக்கையினது ஒன்றில் முழுமையும், அல்லது முழுமையின் அத்தகைய அதிகபட்ச நூற்றுவீதமும்; அத்துடன்

(ஈ) ஆளும் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு தடையின்றி மாற்றத்தகு வெளிநாட்டு நாணயங்களில் பெயர்குறிப்பிட்ட வேறெவையேனும் உடனடியாகச் சான்றுப்படுத்தத்தகு நிதிசார் சொத்துக்கள்.

(3) சர்வதேச ஏதுக்களில் வீழ்ச்சியேற்பட்டுள்ளதென அல்லது வீழ்ச்சியேற்படும் சாத்தியமுள்ளதென அல்லது மத்திய வங்கியின் குறிக்கோள்களை இடருக்கு உட்படுத்தக்கூடிய ஒரு மட்டத்தை அத்தகைய ஒதுக்குகள் எய்தலாமெனவும் மத்திய வங்கி அதன் சொந்த வழிமுறைகளின்மூலம் அத்தகைய வீழ்சியைப்

பரிகரிப்பதற்கு இயலாதுள்ளதெனவும் மத்திய வங்கி திருப்திப்படும் பட்சத்தில், மத்திய வங்கியானது, அத்தகைய வீழ்ச்சிக்கான காரணங்களும் அதனைப் பரிகரிப்பதற்கான விதப்புரைகளும் உட்பட, அத்தகைய வீழ்ச்சிபற்றி அமைச்சருக்கு எழுத்தில் அறிக்கையிடுதல் வேண்டும்.

செலாவணித் தொழிற்பாடுகள் பற்றிய தகவல்கள்

**41.** (1) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும், மத்திய வங்கியின் ஆளுநரினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியின் போது வெளிநாட்டுச் செலாவணியின் அதன் கொள்வனவுகள் மற்றும் விற்பனைகளின் தொகையையும் அமைப்பையும் எடுத்துக்கூறி மத்திய வங்கிக்கு அறிக்கையொன்றை அளித்தல் வேண்டுமென்பதுடன் வெளிநாட்டு நாணயங்களில் அத்தகைய கொள்வனவுகளையும் விற்பனைகளையும் அதன் கணக்குகளின் அசைவுகளையும் குறிப்பிட்டு மத்திய வங்கி தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய மேலதிகத் தகவலைக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(2) ஏதேனும் உருவத்திலும் வடிவத்திலும் மற்றும் வெளிநாட்டு செலாவணியிலும் தங்கத்திலான எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் அல்லது தொழிற்பாடுகளும்பற்றிக் குறித்துரைக்கப்பட்ட நேரங்களில் அல்லது கால இடைவெளிகளில் மத்திய வங்கிக்கு அறிக்கைகளை அளிக்கும்படி மத்திய வங்கியின் ஆளுநர் வேறெவரேனும் ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(3) இப்பிரிவின்கீழான ஒவ்வோர் அறிக்கையும், அந்நோக்கத்துக்காக மத்திய வங்கியின் ஆளுநர் விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலிருத்தல் வேண்டும்.

(4) மத்திய வங்கியானது, ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் அல்லது வேறு ஆளினால் அளிக்கப்பட்ட ஏதேனும் அறிக்கையில் தரப்பட்டுள்ள ஏதேனும் கூற்றின் செம்மையைச் சரிபார்க்கும் நோக்கத்துக்காக அவசியமென அது கருதக்கூடியவாறாக அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் அல்லது ஆளினால் வைத்திருக்கப்பட்ட புத்தகங்களும் மற்றும் கணக்குகள் எவற்றினதும் அத்தகைய சோதனையை அல்லது பரிசோதனையைச் செய்யலாம் அல்லது அவற்றைக் கட்டுக்காப்பினுள் எடுக்கலாம்.

*வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் செலாவணி வைத்திருக்கை களைக் கட்டுப் படுத்துதல்*

**42.** (1) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் பொதுவாக வெளிநாட்டு நாணயங்களில் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அல்லது நாணயங்களில் வைத்திருக்கக் கூடிய தொழிற்பாட்டு மீதிகளின் அதிகபட்சத் தொகையை தீர்மானிக்கும் முறையை ஆளும் சபை தீர்மானிக்கலாம் என்பதுடன் அத்தகைய அதிகபட்சத் தொகைக்கு விஞ்சுதலான எல்லா மேன் மிகைகளையும் அல்லது அவற்றின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பாகத்தை மத்திய வங்கிக்கு விற்பனைசெய்யும்படி அத்தகைய வங்கிகளைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஆளும் சபையானது, குறிப்பிட்ட ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தகவங்கியின் விசேட தேவைகளைக் கருத்திட்கொண்டு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய நாணயத்துக்காகத் தீர்மானிக் கப்பட்ட அதிகபட்சத்தொகைக்கு விஞ்சுதலாகக் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் தொழிற்பாட்டு மீதிகளை வைத்திருக்கும்படி அத்தகைய வங்கியை அனுமதிக்கலாம்.

(3) ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தகவங்கியின் தொழிற்பாட்டு மீதிகள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானிக்கப்பட்ட அதிகபட்சத் தொகைக்கு விஞ்சுதலாகவுள்ளனவா என்பதை நிச்சயிப்பதில் முதற்குறிப்பிடப் பட்ட நாணயம் எந்த நாணயங்களில் தடையின்றி மாற்றத்தக்க தாகவுள்ளதோ அந்த நாணயங்களில் அவ்வங்கியின் தேறிய பொறுப்புக்கள் அத்தகைய மீதிகளிலிருந்து கழிக்கப்படலாம்.

## பாகம் VII

## நாணயமும் சட்டரீதியான நாணயமும்

*நாணயம்*

**43.** இலங்கையின் நாணயம் இலங்கை ரூபாவாதல் வேண்டும். இலங்கை ரூபாவானது நூறு அலகுகளாகப் பிரிக்கப்படுதல் வேண்டும்; அவற்றுள் ஒவ்வொன்றும் "சதம்" எனவழைக்கப்படு தல் வேண்டும்.

வழங்குவதற்கான தத்துவம்

**44**. இலங்கையில் நாணயத்தை வழங்குவதற்கான தனியுரிமையையும் அதிகாரத்தையும் மத்திய வங்கி கொண்டிருத்தல் வேண்டும்.

மத்திய வங்கி தவிர்ந்த எவரேனுமாளினால் நாணயத்தாள்கள் வழங்கப்படுவதற்கெதிரான தடை

**45**. (1) மத்திய வங்கி தவிர்ந்த ஆளெவரும், ஏதேனும் நாணய மாற்றுண்டியலை, வாக்குறுதிப் பத்திரத்தை, அல்லது கோரிக்கையின்மீது கொண்டுவருபவருக்குச் செலுத்தப்படற்பாலதான பணக்கொடுப்பனவுக்கான ஈடுபாட்டை வரைதலோ, ஏற்றுக்கொள்ளுதலோ அல்லது வழங்குதலோ ஆகாது அல்லது அத்தகைய எவரேனுமாளின் கோரிக்கையின்மீது கொண்டுவருபவருக்குச் செலுத்தப்படற்பாலதான உண்டியல்களின்மீது அல்லது நாணயத்தாள்களின்மீது ஏதேனும் பணத்தொகையை அல்லது பணத்தொகைகளைக் கடனாகப்பெறுதலோ சேர்மதியாக வைத்திருத்தலோ அல்லது எடுத்துக்கொள்ளுதலோ ஆகாது:

ஆயின், எவ்வாறாயினும், கோரிக்கையின்மீது கொண்டுவருபவருக்குச் செலுத்தப்படற்பாலனவான காசோலைகள் அல்லது வரைவுகள், அத்தகைய காசோலைகளை அல்லது வரைவுகளை வரைகின்ற ஆளின் கையாளுகையின் அவர்களினால் வைத்திருக்கப்பட்ட அத்தகைய வங்கிகளின் முகவர்களின் கையிலுள்ள பணங்கள் தொடர்பில் அவர்களின் வாடிக்கையாளர்களினால் அல்லது திறத்தவர்களினால் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின்மீது அல்லது முகவர்களின்மீது வரையப்படலாம்.

(2) இப்பிரிவின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்ற ஆளொவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றார்.

நாணத்தாள்களுக்கும் குற்றிகளுக்குமான பொறுப்பு

**46**. (1) மத்திய வங்கியினால் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்பட்ட நாணயத்தாள்களும் குற்றிகளும் மத்திய வங்கியின் பொறுப்புக்காளாதல் வேண்டும்.

(2) மத்திய வங்கியின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்பட்ட நாணயத்தாள்களின் அதன் நாணய வழங்குகையின் பாகமாகக் கருதப்படலாகாதென்பதுடன், மத்திய வங்கியின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தீர்மானிப்பதில் கணக்குக்கெடுக்கப்படுதலு மாகாது.

நாணயமானது சட்டரீதியான நாணயமாக விருத்தல்

**47.** (1) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட எல்லா நாணயத் தாள்களும் குற்றிகளும் ஏதேனும் தொகையைக் கொடுப்பனவு செய்வதற்காக இலங்கையில் சட்டரீதியான நாணயமாகவிருத்தல் வேண்டும்.

(2) இலங்கையிலுள்ள வதிவோருக்கிடையே அல்லது அவர்களுள் நிறைவேற்றப்பட்ட அல்லது ஒழித்துக்கட்டப்பட்ட ஏதேனும் கொடுக்கல்வாங்கல் மத்திய வங்கியினால் வேறுவகையாக அதிகாரமளிக்கப்பட்டாலொழிய, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இலங்கை ரூபாக்களில் இருத்தல் வேண்டும்.

ஞாபகார்த்த நாணயத்தாள்களை அல்லது குற்றிகளை வழங்குதல்

**48.** (1) மத்திய வங்கியானது, அமைச்சரின் அங்கீகாரத்துடனும் 49 ஆம் பிரிவுக்கமையவும், ஞாபகார்த்த நாணயத்தாள்களை அல்லது குற்றிகளை வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் ஞாபகார்த்த நாணயத்தாள்கள் அல்லது குற்றிகள் அத்தகைய நாணயத்தாள்களில் அல்லது குற்றிகளில் குறித்துரைக்கப்பட்ட இனப்பகுப்பீட்டிலும் பார்க்க உயர்வானவொரு விலையிலும் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாகவும் விற்பனை செய்யப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஞாபகார்த்த நாணயத் தாள்களில் அல்லது குற்றிகளில் குறித்துரைக்கப்பட்ட இனப்பகுப் பீட்டிலும் பார்க்க உயர்வானவொரு விலையில் அத்தகைய நாணயத்தாள்களில் அல்லது குற்றிகளின் விற்பனை, 55 ஆம் அல்லது 56 ஆம் பிரிவின் மீறுகையாக இராதிருப்பதாகக் கருதப் படுதல் வேண்டும்.

(4) ஞாபகார்த்த நாணயத்தாள்கள் அல்லது குற்றிகள் தவிர்ந்த நாணயத்தாள்களிலிருந்து அல்லது குற்றிகளிலிருந்து தயாரிக்கப் பட்ட காசியல்சார் இனங்கள், ஆளும் சபையின் அங்கீகாரத்துடன் அத்தகைய நாணயத்தாள்களில் அல்லது குற்றிகளில் குறித்துரைக்கப்பட்ட இனப்பகுப்பீட்டிலும் பார்க்க உயர்வானவொரு விலையில் விற்பனைசெய்யப்படலாம் என்பதுடன், அத்தகைய நாணயத்தாள்களில் அல்லது குற்றிகளில் குறித்துரைக்கப்பட்ட இனப்பகுப்பீட்டிலும் பார்க்க உயர்வானவொரு விலையில் அத்தகைய இனங்களை விற்பனைசெய்தல், 55 ஆம் அல்லது 56 ஆம் பிரிவின் மீறுகையொன்றாகக் கருதப்படுதலாகாது.

நாணயத்தின் பண்புகள்

**49.** (1) மத்திய வங்கியானது, அமைச்சரின் அங்கீகாரத்துடன், மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நாணயத்தாள்களினதும் குற்றிகளினதும் இனப்பகுப்பீடுகள், பரிமாணங்கள், வடிவமைப்புகள், பொறிப்புக்கள் மற்றும் வேறு பண்புகளை விதித்துரைத்தல் வேண்டும்.

(2) நாணயத்தாள் ஒவ்வொன்றும், அமைச்சரினதும் மத்திய வங்கியின் ஆளுநரினதும் கையொப்பங்களின் நேர்படியைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வழங்கப்படுவதாக அதன் முகப்பில் குறிப்பிடப்பட்டிருத்தலும் வேண்டும்.

நாணயத் தாள்களை அச்சிடுவதற்கும் குற்றிகளை வார்ப்பதற்குமான ஒப்பந்தங்கள்

**50.** மத்திய வங்கியானது, நாணயத்தாள்களை அச்சிடுவதற்காகவும் குற்றிகளை வார்ப்பதற்காகவும் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள வேறெவரேனுமாளுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்வதற்கு அதிகாரமுடையதாதல் வேண்டும்.

நாணயத்தை மாற்றிக் கொடுத்தல்

**51.** மத்திய வங்கியானது, கோரிக்கையொன்று செய்யப்பட்டதன் பேரிலும் விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும், மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நாணயத்தாள்களையும் குற்றிகளையும் விதிப்பனவோ அல்லது தரகோ இன்றி மாற்றிக்கொடுத்தல் வேண்டும்.

*புழக்கத்தில் விடுவதற்குத் தகுதியற்ற நாணயத்தை மாற்றீடு செய்தல்*

**52.** எத்தகையதுமான எக்காரணத்துக்காகவேனும் புழக்கத்தில் விடுவதற்குத் தகுதியற்றனவாகவுள்ள எல்லா நாணயத்தாள்களையும் குற்றிகளையும் மத்திய வங்கியானது புழக்கத்தில்விடாது மீளப்பெறுதலும் இல்லாதாக்குதலும் வேண்டுமென்பதுடன் செயல்முறைக்குகந்தவரை விரைவாகவும் ஆளும் சபையினால் அதற்கென ஆக்கப்படக்கூடிய அத்தகைய விதிகளுக்கமையவும், தகுதியுள்ள நாணயத்தாள்களையும் குற்றிகளையும் மாற்றிவழங்குதல்மூலம் அவற்றை மாற்றீடுசெய்தலும் வேண்டும்.

*நாணயத்தை மீட்டல்*

**53.** (1) ஆளும் சபை, அதன் தற்றுணிபில், வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம், நாணயத்தாள்களின் அல்லது குற்றிகளின் ஏதேனும் வழங்குகையை அல்லது இனப்பகுப்பீட்டை மாற்றீடுசெய்வதற்காகக் கோரலாம்.

(2) இப்பிரிவிற்கிணங்க மாற்றீடுசெய்வதற்காகக் கோரப்பட்ட எவையேனும் நாணயத்தாள்கள் மற்றும் குற்றிகள், ஆளும் சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறாகக் கோரப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்காகச் சட்டரீதியான நாணயமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் சட்டரீதியான நாணயமாக இல்லாதொழிதலும் வேண்டும்.

(3) மத்திய வங்கி அல்லது அந்நோக்கத்துக்காக ஆளும் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் முகவர், மாற்றீட்டுக்காக அவ்வாறு கோரப்பட்ட எவையேனும் நாணயத்தாள்கள் அல்லது குற்றிகள் ஒப்படைக்கப்படுவதன்மேல், தகுதியான நாணயத்தாள்களை அல்லது குற்றிகளை மாற்றிக்கொடுத்தலில் ஒப்படைப்பதன்மூலம் அத்தகைய நாணயத்தாள்களை அல்லது குற்றிகளைச் சமப்பெறுமதியிலும் விதிப்பனவின்றியும் எக்காலப்பகுதியில் மாற்றீடுசெய்தல் வேண்டுமோ அக்காலப்பகுதி ஓராண்டுக்குக் குறையாத அக்காலப்பகுதியொன்றுக்கு மாற்றிக்கொடுத்தல் வேண்டுமென ஆளும் சபை தீர்மானிக்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மாற்றீட்டுக்காகக் கோரப்பட்ட மற்றும் ஒப்படைக்கப்படாத எல்லா நாணயத்தாள்களும் குற்றிகளும் மத்திய வங்கியின் பொறுப் பொன்றாக இல்லாதொழிதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எவையேனும் நாணயத் தாள்களை அல்லது குற்றிகளைக் கொண்டுவருபவர் ஏதேனும் நட்டஈட்டுக்கு உரித்துடையவராதலு மாகாது.

நாணயக் கையிருப்பு

**54**. நாணயத் தாள்களினதும் குற்றிகளினதும் கிரமமான வழங்குகையொன்று கிடைக்கக்கூடியமையை உறுதிப்படுத்துவதற் கென மத்திய வங்கி நாணயக் கையிருப்பொன்றை உருவாக்குதலும் நிருவகித்தலும் வேண்டும்.

நாணயத் தாள்களின் உருச் சிதைவும் உருமாற்றமும்

**55**. ஆளும் சபையின் அதிகாரமின்றி–

(அ) ஏதேனும் நாணயத்தாளை வெட்டுகின்ற, துளையிடு கின்ற அல்லது எத்தகையதுமான வேறெந்த வழியிலும் உருச்சிதைக்கின்ற;

(ஆ) ஏதேனும் நாணயத்தாளின்மேல் எதனையும் அச்சிடு கின்ற, முத்திரையிடுகின்ற,அல்லது வரைகின்ற அல்லது ஏதேனும் நாணயத்தாளுக்கு அல்லது அதன்மேல் ஏதேனும் இலச்சினையை அல்லது முத்திரையைப் பொறிக்கின்ற;

(இ) ஏதேனும் நாணயத்தாளுக்கு அல்லது அதன்மேல் ஒரு விளம்பரம் என்ற தன்மையிலான அல்லது வடிவத்தி லான எதனையும் இணைக்கின்ற அல்லது பொறிக் கின்ற;

(ஈ) ஏதேனும் நாணயத்தாளை எத்தகையதுமான ஏதேனும் வடிவத்தில் மீளத்தயாரிக்கின்ற; அல்லது அதன் நேர்படியை ஆக்குகின்ற; அல்லது

(உ) ஏதேனும் நாணயத்தாளை, சட்டரீதியான நாணயமாக வல்லாது வேறுவகையாகப் பயன்படுத்துகின்ற,

எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

*சட்டரீதியான நாணயமாக வல்லாது வேறுவகையாக நாணயக் குற்றியைப் பயன்படுத்துதல்*

**56.** (1) ஆளும் சபையின் அதிகாரமின்றி, இலங்கையில் சட்டரீதியான நாணயமாகவுள்ள ஏதேனும் குற்றியை உருக்குகின்ற, உடைக்கின்ற, துளையிடுகின்ற, உருச்சிதைக்கின்ற அல்லது சட்டரீதியான நாணயமாகவல்லாது வேறுவகையாகப் பயன்படுத்துகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

(2) ஓராம் உட்பிரிவுக்கு முரணாகக் கையாளப்பட்டுள்ள ஏதேனும் குற்றியிலிருந்து பெறப்பட்டதென அவர் அறிந்துள்ள அல்லது நம்புவதற்கு நியாயமான காரணங்கொண்டுள்ள ஏதேனும் உலோகத்தை அல்லது பொருளை அறிந்துகொண்டு பயன்படுத்துகின்ற, உடைமையில் வைத்திருக்கின்ற அல்லது கையாளுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார்.

*ஒரு நாணயத் தாளின் போலிப்புனைவு பற்றி முடிவான சான்று*

**57.** (1) ஏதேனும் நீதிமன்றத்திலான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் நாணயத் தாளொன்றாக இருப்பதாகக் கொள்ளப்படுகின்ற ஆவணமொன்று நாணயத்தாளொன்றின் போலிப்புனைவாவெனத் தீர்மானிக்கப்படவேண்டியிருக்குமிடத்து, அத்தகைய ஆவணம் ஒரு நாணயத்தாளின் போலிப்புனைவு மற்றும் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டதாகக் கருதப்பட்ட நாணயத் தாளொன்றல்ல என்ற பொருள்பட மத்திய வங்கியின் ஆளுநரினது கைப்பட்ட சான்றிதழொன்று, அத்தகைய ஆவணம் ஒரு நாணயத்தாளின் போலிப்புனைவென்ற நிகழ்வுபற்றி முடிவான சான்றாக அத்தகைய வழக்குநடவடிக்கைகளில் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

*(2)* இப்பிரிவின்கீழ் சான்றிதழொன்றை வழங்குகின்ற மத்திய வங்கியின் ஆளுநர், அச்சான்றிதழ் தொடர்பில் விசாரணைசெய்யப் படுதலோ அல்லது குறுக்குவிசாரணை செய்யப்படுதலோ ஆகாது.

*(3)* இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு சான்றிதழும் ஆளும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான படிவமொன்றில் இருத்தல் வேண்டும்.

ஒரு குற்றியின் அல்லது நடைமுறையிலுள்ள குற்றியின் போலிப்புனைவு பற்றி முடிவான சான்று

**58.** *(1)* ஏதேனும் நீதிமன்றத்திலான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் ஒரு குற்றியாக அல்லது புழக்கத்திலுள்ள குற்றியாக இருப்பதாகக் கொள்ளப்படுகின்ற பொருளொன்று அத்தகைய குற்றியின் அல்லது புழக்கத்திலுள்ள குற்றியின் போலிப்புனைவாவெனத் தீர்மானிக்கப்படவேண்டியிருக்குமிடத்து, அத்தகைய பொருள், விடயத்துக்கேற்ப, ஒரு குற்றியின் அல்லது புழக்கத்திலுள்ள குற்றியின் போலிப்புனைவு மற்றும் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டதாகக் கருதப்பட்ட குற்றியொன்றல்ல அல்லது புழக்கத்திலுள்ள குற்றியொன்றல்ல என்ற பொருள்பட மத்தியவங்கியின் ஆளுநரினது கைப்பட்ட சான்றிதழொன்று, அத்தகைய பொருள் ஒரு குற்றியின் அல்லது புழக்கத்திலுள்ள குற்றியின் போலிப்புனைவென்ற நிகழ்வு பற்றி முடிவான சான்றாக அத்தகைய வழங்குநடவடிக்கைகளில் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

*(2)* இப்பிரிவின்கீழ் சான்றிதழொன்றை வழங்குகின்ற மத்திய வங்கியின் ஆளுநர் அச்சான்றிதழ் தொடர்பில் விசாரணை செய்யப்படுதலோ அல்லது குறுக்குவிசாரணை செய்யப்படுதலோ ஆகாது.

*(3)* இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு சான்றிதழும் ஆளும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறானவொரு படிவத்தில் இருத்தல் வேண்டும்.

*(4)* இப்பிரிவில், "புழக்கத்திலுள்ள குற்றி" என்பது, *(19 ஆம் அத்தியாயமான)* தண்டனைச் சட்டக்கோவையிலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பாகம் VIII

## கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள்

*நிதிகளைக் கைமாற்று வதற்கும் பங்குச் சான்றிதழ் தொகுதியல்லாத னவான பிணையங்களைக் கைமாற்றுவதற்கும் கொடுத்துத் தீர்ப்பதற்குமான முறைமைகளைத் தாபித்தல்*

**59.** (1) மத்திய வங்கியானது பின்வருவனவற்றுக்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முறைமைகளைத் தாபித்துத் தொழிற் படுத்தலாம்:-

(அ) மத்திய வங்கி, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் மத்திய வங்கியுடன் தீர்வுக்கணக்கொன்றைப் பேணுகின்ற அத்தகைய முறைமைக்கான பங்குபற்று நர்களாக மத்திய வங்கியினால் சேர்த்துக்கொள்ளப் படுகின்ற அத்தகைய வேறு நிறுவனங்கள் அல்லது ஆட்கள் என்போரினாலும் அவர்களுக்கிடையேயும் நிதிகளைக் கைமாற்றுவதற்காகவும்;

(ஆ) மத்திய வங்கியினாலும் நேரடிப் பங்குபற்றுநர்களினாலும் அவர்களுக்கிடையேயும் பங்குச்சான்றிதழ் தொகுதியற்ற பிணையங்களைக் கைமாற்றுவதற்காகவும் தீர்த்துவைப்ப தற்காகவும்;

(இ) பந்தி (ஆ) வின்கீழ் பங்குச்சான்றிதழ் தொகுதியற்ற பிணையங்களைக் கைமாற்றுதலும் கொடுத்துத்தீர்த்தலும் தொடர்பில் கொடுப்பனவுக் கடப்பாடுகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்காகவும்; மற்றும்

(ஈ) மத்திய வங்கியின், பங்குச்சான்றிதழ் தொகுதியற்ற பிணையங்களுக்கானதும் நேரடிப் பங்குபற்றுநர்களின தும், வியாபாரிகளாகவுள்ள நேரடிப் பங்குபற்றுநர்களின் விடயத்தில், அவர்களினது வாடிக்கையாளர்களினதும் உரித்தைப் பதிவதற்காக ஒரு வைப்பகத்தைப் பேணு வதற்காகவும். மத்திய வங்கியானது, வைப்பகம் தொடர்பாக அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட முறைமையொன்று, கொடுப்பனவுக் கடப்பாடுகளை அல்லது பிணையங்களைத் தீர்வுசெய்வதற்காக அல்லது கொடுத்துத்தீர்ப்பதற்காக இலங்கையில் அல்லது வேறெங்கேனும் இன்னுமொரு முறைமையுடன் இணைக்கப்படலாமென்பதுடன் மத்திய வங்கியானது, அத்தகைய முறைமைகளுள் எவற்றினதும் தொழிற்படுத்துநர்களுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளலாம்.

(3) (அ) இலங்கையில் தொழிற்படுகின்ற உரிமமளிக்கப்பட்ட வங்கிகள் அல்லது ஆளும் சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடிய வாறான வேறெவையேனும் நிதிநிறுவனங்களுக்கிடையேயான தீர்வுசெய்யும் கொடுக்கல்வாங்கல்களுக்கான வசதிகளை மத்திய வங்கி வழங்குதல் வேண்டும்.

(ஆ) மத்திய வங்கியில் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினால் பேணப்பட்ட ஒதுக்குகள் அல்லது ஆளும் சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் நிதிநிறுவனத்தினால் மத்திய வங்கியில் பேணப்பட்ட நிதிகள், மத்திய வங்கியினால் அதற்கென ஆக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதிகளுக்கிணங்க அத்தகைய வங்கிகளுள்ளும் மற்றும் நிதிநிறுவனங்களுள்ளும் காசோலைகளைத் தீர்வு செய்வதற்கான மற்றும் மீதிகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்கான அடிப்படையொன்றாக அமைதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட முறைமையொன்றின் பங்குபற்றுநர்களுடன் மத்திய வங்கி உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளலாம் என்பதுடன் முறைமையின் தொழிற்பாட்டுக்கான விதிகளை, முறைமையின் பங்குபற்றுநர்களுக்கு எழுத்தில் வழங்கலாம்.

(5) நான்காம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி, அத்தகைய விதிகள் பின்வருவனவற்றுக்காக ஏற்பாடு செய்யலாம்:-

(அ) பங்குபற்றுநர்களுக்கான பிணையங்களின் இணையுறுக்கெதிராக ஒருநாளுக்குள்ளான கடனை வழங்குதலும்

அத்தகைய கடனை வழங்குவதுடன் இணைந்துள்ள நிபந்தனைகளும்;

(ஆ) இலத்திரனியற் கையொப்பங்கள் தொடர்பில் சான்றுப் படுத்துகை அதிகாரசபைகளின் நியமனத்துக்கு ஏற்புடையற்பாலதான ஏதேனும் சட்டத்தின் கீழ் பங்குபற்றுநர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கும் நோக்கத்துக்காக மத்திய வங்கியை ஒரு சான்றுப் படுத்துகை அதிகாரசபையாக நியமித்தல்;

(இ) பங்குபற்றுநர்களுக்கான நடத்தைக் கோவையொன்றை வகுத்தமைத்தலும் ஏற்றுக்கொள்ளுதலும்;

(ஈ) இலத்திரனியல்ரீதியில் நிறைவேற்றப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை மெய்யென்றுறுதிப்படுத்துதல்;

(உ) மத்திய வங்கி, முறைமையின் நலன்கருதி அது அவசிய மென கருதினால், முறைமையின் தொழிற்பாட்டை இல்லாதொழித்தல் அல்லது இடைநிறுத்துதல் அல்லது எவரேனும் பங்குபற்றுநரின் அல்லது வகுதியினரான பங்குபற்றுநர்களின் சிறப்புரிமைகளை அல்லது உரிமைகளை மீளப்பெறுதல் அல்லது இடைநிறுத்துதல் அல்லது ஒரு பங்குபற்றுநரின் முறைமையிலான உறுப்பாண்மையை இடைநிறுத்துதல் அல்லது ஒழித்தல்;

(ஊ) கொடுத்துத்தீர்த்தல் முறைமை தொடர்பில் பங்கு பற்றுநர்களின் தொழிற்பாட்டு முறைமைகளைக் கணக் காய்வு செய்வதற்காகவும் அல்லது சோதனையிடு வதற்காகவும் கணக்காய்வாளர்களை அல்லது பரிசோதகர்களை நியமித்தல்; அத்துடன்

(எ) பங்குபற்றுநர்களினால் மத்திய வங்கிக்கு விதிப்பனவு களையும் கட்டணங்களையும் கொடுப்பனவு செய்யப் படுதல்.

(6) ஓராம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்டவொரு முறைமை யினூடாகச் செய்யப்பட்ட ஒரு கொடுப்பனவு அல்லது கைமாற்றம் பின்வரும் விடயங்களில் இறுதியானதாகவும் அழிக்கமுடியாத தாகவும் இருக்கும்:-

(அ) நிதிகளின் கைமாற்றத்தை மட்டுமே உட்படுத்துகின்ற வொரு கொடுக்கல்வாங்கலின் விடயத்தில், நிதிகளின் கைமாற்றத்தைக் கோருகின்ற பங்குபற்றுநரின் கொடுத்துத் தீர்த்தல் கணக்குக்குப் பற்றுவைப்பதன்மேல்;

(ஆ) பிணையங்களின் கைமாற்றமொன்றை உட்படுத்துகின்ற வொரு கொடுக்கல்வாங்கலின் விடயத்தில், பிணையங் களின் கைமாற்றத்தைக் கோருகின்ற பங்குபற்றுநரின் பிணையங்கள் கணக்குக்குப் பற்றுவைப்பதன்மேல்; அல்லது

(இ) நிதிகளின் கைமாற்றத்தையும் பிணையங்களின் கைமாற்றத்தையும் உட்படுத்துகின்றவொரு கொடுக்கல் வாங்கலின் விடயத்தில், விடயத்துக்கேற்ப, நிதிகளின் கைமாற்றத்தை அல்லது பிணையங்களின் கைமாற்றத்தைக் கோருகின்ற பங்குபற்றுநரொருவரின் கொடுத்துத் தீர்த்தல் கணக்குக்கு அல்லது பிணையங்கள் கணக்குக்குப் பற்றுவைப்பதன்மேல், இவற்றுள் எது முன்னர் இடம் பெறுகின்றதோ அதன்மேல்;

அத்துடன் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய கொடுப்பனவு அல்லது கைமாற்றுகை, எதிர்மாறாக்கப்படுவதற்கு, மீளச்செலுத்தப்படு வதற்கு அல்லது தள்ளிவைக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப் படுதலாகாதென்பதுடன் அரசிலயமைப்பின் 126 ஆம், 140 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகளுக்கமைய, நீதிமன்றமெதுவும் அத்தகைய கொடுப்பனவு அல்லது கைமாற்றம் நிவர்த்தி செய்யப் படவேண்டுமென அல்லது நிறுத்தப்படவேண்டுமெனக் கட்டளை யிடுதலுமாகாது.

(7) (அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது (417 ஆம் அத்தியாயமான) உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் அல்லது (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பங்குச்சான்றிதழ் தொகுதியற்ற பிணையங்கள், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் அல்லது அவற்றின்கீழ் அல்லது விடயத்துக்கேற்ப, உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் அல்லது பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் அல்லது அவற்றின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு மட்டுமே கைமாற்றப் படுதல், அடைமானம் வைக்கப்படுதல், வில்லங்கத்துக்குட் படுத்தப்படுதல், கடன்கொடுக்கப்படுதல், கடனாகப் பெறப்படுதல் அல்லது கொடுக்கல்வாங்கல் செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) இன்கீழ் பயனுறுத்தப்பட்ட ஒரு கைமாற்றம், அடைமானம், வில்லங்கம், கடன், கடன்பெறுகை அல்லது கொடுக்கல்வாங்கல், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், செல்லுபடியுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன் ஏற்புடையற்பாலனவாக இருக்கக்கூடிய அவ்விதிகளுக்கு அல்லது ஒழுங்குவிதிகளுக்கு இணங்க இணையுறுவாகப் பதியப்பட்ட எவையேனும் பங்குச் சான்றிதழ் தொகுதிபற்ற பிணையங்களின்மீது முறைமையின் பங்குபற்றுநரொருவரின் உரிமைக்கோரிக்கை, முறைமையின் பங்குபற்றுநராகவிராதவோர் ஆளின் அத்தகைய பங்குச்சான்றிதழ் தொகுதியற்ற பிணையங்களின்மீதான உரிமைக்கோரிக்கை களின்மீது முன்னுரிமை கொண்டிருத்தலும் வேண்டும்.

(8) ஐந்தாம், ஆறாம் உட்பிரிவுகளிலுள்ளதெதுவும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்டவொரு முறைமையினூடாகப் பயனுறுத்தப்பட்ட ஒரு கொடுப்பனவு, கைமாற்றம் அல்லது கொடுத்துத்தீர்த்தலினால் ஏதேனும் இறப்பை அல்லது சேதத்தை உற்றுள்ள ஆளொருவருக்குக் கிடைக்கக்கூடிய வேறேதேனும் சட்டவுரிமையை அல்லது பரிகாரத்தைப் பாதித்தலாகாது.

(9) கம்பெனிகளை ஒடுக்குதல் தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஒரு முறைமையின் பங்குபற்றுநரை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருப்பின் –

(அ) நடவடிக்கைகள் தொடங்கிய நாளன்று அல்லது அதற்குமுன்னர் உறப்பட்ட கடப்பாடுகளை உள்ளடக்குவதற்கென முறைமையின் விதிகளினால் அனுமதிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எதனையும் மத்தியவங்கி செய்யலாம்;

(ஆ) முறைமையின் விதிகளின் கீழ் உள்ளடக்கப்பட்ட கடப்பாடுகள், நடவடிக்கைகளில் புறக்கணிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) மத்திய வங்கியினால் செய்யப்பட்ட உள்ளடக்குகையும் முறைமையின் விதிகளின் கீழ் பங்குபற்றுநரினால் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவும் நடவடிக்கைகளில் வறிதாகத்தக்கனவாதலாகாது.

(10) ஒரு பங்குபற்றுநரை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு (6) ஆம் அல்லது (9) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக அத்தகைய பங்குபற்றுநரினால் சேர்மதியாகவுள்ள ஒரு கொடுப்பனவு அல்லது கொடுத்துத்தீர்த்தல் செய்யப்பட்டிருப்பின் மற்றும் அத்தகைய நிதிகளின் அல்லது பிணையங்களின் கொடுப்பனவொன்று அல்லது கொடுத்துத் தீர்த்தலொன்று முறைமைக்கு வெளியே செய்யப்பட்டிருப்பின் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் வறிதானதாக அல்லது வறிதாகத்தக்கதாக இருந்திருப்பின், அத்தகைய பங்குபற்றுநரின் ஒழித்துக்கட்டுநர், அத்தகைய கொடுப்பனவு அல்லது கொடுத்துத்தீர்த்தல் எந்த ஆளின் நன்மைக்காகச் செய்யப்பட்டதோ அந்த ஆளிடமிருந்து, அத்தகைய கொடுப்பனவு அல்லது கொடுத்துத்தீர்த்தல் முறைமைக்கு வெளியே செய்யப்பட்டிருப்பின், அறவிடற்பாலதாகவிருந்திருக்கும் அத்தகைய தொகையை அறவிடலாம்.

(11) ஓராம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட முறைமையொன்றினூடாகப் பயனுறுத்தப்பட்ட ஏதேனும் கொடுக்கல்வாங்கல் இலத்திரனியல் ரீதியில் நிறைவேற்றப்படுமிடத்து, அத்தகைய கொடுக்கல்வாங்கல் இலத்திரனியல் ரீதியில் நிறைவேற்றப்படுகின்றது அல்லது அத்தகைய கொடுக்கல்வாங்கல் பற்றிய தகவல் ஓர் இலத்திரனியற் பதிவேடு என்ற வடிவத்தில் பேணப்படுகின்றது என்ற ஏதுவின்மீது மட்டுமே அத்தகைய கொடுக்கல் வாங்கலுக்குச் சட்டப்பயனோ, செல்லுபடியான தன்மையோ அல்லது வலுவுறுத்தப்படற்பாலதான தன்மையோ மறுக்கப்படுதலாகாது என்பதுடன் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய பதிவேடு ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் முன்னரான வழக்குநடவடிக்கைகளில் சான்றாக முன்வைக்கவும்படலாம்.

(12) உட்பிரிவு (1) அல்லது (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் அல்லது எல்லாப் பணிகளும், ஆளும் சபையினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, ஆளும் சபையினால் அந்நோக்கத்துக்காக அதிகாரமளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் நிறைவேற்றப்படலாம்.

(13) மத்திய வங்கி பின்வருவனவற்றுக்காக வசதிகளை வழங்குதல் வேண்டும்:-

(அ) பிணையங்களின் கொடுக்கல்வாங்கல்களைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துக்காக மத்திய வங்கியில் கணக்குகளைப் பேணுவதற்கு, ஆளும் சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் தவிர்ந்த நிதிநிறுவனங்கள்;

(ஆ) பங்குச்சான்றிதழ் தொகுதியற்ற பிணையங்களை வைத்திருக்கின்ற அல்லது நேரடிப் பங்குபற்றுநர்களுள் பங்குச்சான்றிதழ் தொகுதியற்ற பிணையங்களிலான கொடுக்கல்வாங்கல்களைத் தீர்வுசெய்கின்ற மற்றும் கொடுத்துத்தீர்க்கின்ற நோக்கத்துக்காக மத்திய வங்கியில்

கணக்குகளைப் பேணுவதற்கு ஆளும் சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக, உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் தவிர்ந்த வேறு நிதிநிறுவனங்கள்.

(14) (அ) ஓராம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் மற்றும் (13) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவையேனும் அல்லது எல்லாப் பணிகளும் ஆளும் சபையினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, ஆளும் சபையினால் அந்நோக்கத்துக்காக அதிகாரமளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் நிறைவேற்றப்படலாம்.

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழு, அத்தகைய பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக மத்திய வங்கியுடன் கணக்கொன்றைப் பேணலாம்.

உரிமமளித்தலும் மேல்நோக்கும்

**60.** (1) மத்திய வங்கியானது, 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டத்தில் அல்லது கொடுப்பனவு, தீர்வு செய்தல் மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகளை ஒழுங்குபடுத்துதல், அவற்றுக்கு உரிமமளித்தல், அவற்றைப் பதிவுசெய்தல் மற்றும் மேல்நோக்குதல் தொடர்பான வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் மேலும் குறித்துரைக்கப்பட்டவாறு கொடுப்பனவு, தீர்வுசெய்தல் மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகளை ஒழுங்குபடுத்துதல், அவற்றுக்கு உரிமமளித்தல், அவற்றைப் பதிவுசெய்தல் மற்றும் மேல்நோக்குதல் என்பனவற்றுக்காகப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(2) மத்திய வங்கியானது, விதிகளின்மூலம்-

(அ) ஏதேனும் கொடுப்பனவு, தீர்வுசெய்தல் மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமை அல்லது அத்தகைய முறைமையின் தொழிற்படுத்துநர் பதிவுசெய்யப்படுவதனை அல்லது உரிமமளிக்கப்படுவதனைத் தேவைப்படுத்தலாம்;

(ஆ) மத்திய வங்கியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளையும் தேவைப்பாடுகளையும் அவதானிக்கும்படி ஏதேனும் கொடுப்பனவு, தீர்வு செய்தல் மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமையை அல்லது அத்தகைய முறைமையின் தொழிற்படுத்துநரைத் தேவைப்படுத்தலாம்; அத்துடன்

(இ) கொடுப்பனவுச் சாதனங்களின் வழங்குகையை ஒழுங்குபடுத்தலாம் மற்றும் மேல்நோக்கலாம்.

(3) மத்திய வங்கியின் எவரேனும் ஊழியர் அல்லது மத்திய வங்கியினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட வேறெவரேனும் தகைமைபெற்ற ஆள், அத்தகைய கணக்குகளை, புத்தகங்களை, ஆவணங்களை மற்றும் வேறு பதிவேடுகளைப் பரிசோதனை செய்வதற்கு, அல்லது அத்தகைய முறைமைகளும் பங்குபற்றுநர்களும்பற்றிய அத்தகைய தகவல்களை அல்லது பதிவேடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது மத்திய வங்கி பணிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு நடவடிக்கையை எடுப்பதற்கு, கொடுப்பனவு, தீர்வுசெய்தல் மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள்மீதும் அத்தகைய முறைமைகளின் பங்குபற்றுநர்கள்மீதும் காலாகாலப் பரிசோதனைகளை நடாத்தலாம்.

(4) கொடுப்பனவு, தீர்வுசெய்தல் மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள், மற்றும் அவற்றின் தொழிற்படுத்துநர்களும் பங்குபற்றுநர்களும், மத்திய வங்கி தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய தகவல்களையும் பதிவேடுகளையும் மத்திய வங்கிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(5) மத்திய வங்கியானது, முழுமையாக அல்லது பகுதியளவில் (3) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழ் கூட்டுமொத்த வடிவத்தில் அல்லது 79 ஆம் பிரிவுக்கிணங்க, பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களையும் தரவுகளையும் வெளிவிடலாம்.

பாகம் IX

***நிதிநிறுவனங்களை மேற்பார்வைசெய்தலும் தீர்மானித்தலும்***

*மத்திய வங்கியின் மேற்பார்வைசார் அதிகாரம்*

**61.** (1) மத்திய வங்கியானது, நிதிநிறுவனங்களை ஒழுங்கு படுத்துதல், அவற்றுக்கு உரிமமளித்தல், அவற்றைப் பதிவுசெய்தல் மற்றும் மேற்பார்வைசெய்தல் என்பவற்றுக்காகப் புறநீங்கலாகப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும். அத்தகைய பொறுப்பானது, 107 ஆம் பிரிவின் கருத்துக்குட்பட நிருவாக வழிமுறைகளை விதித்தலை உள்ளடக்குதல் வேண்டும்.

(2) மத்திய வங்கியின் எவரேனும் ஊழியர் அல்லது மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் தகைமை பெற்ற ஆள், ஒவ்வொரு பரிசோதனைக் காலப்பகுதியிலும் ஆகக்குறைந்தது ஒருதடவையேனும், நிதிநிறுவனங்களின் புத்தகங்களையும் கணக்குகளையும் பரிசோதனைசெய்தல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் நிதிநிறுவனம் தொடர்பில் அத்தகைய மேலதிகப் பரிசோதனைகளைச் செய்யும்படி மத்திய வங்கியின் ஆளுநரினால் தேவைப்படுத்தப்படும் போதெல்லாம் அவ்வாறு செய்தலும் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழான ஒவ்வொரு பரிசோதனையினதும் பெறுபேறுகள் பற்றிய அறிக்கையொன்று ஆளும் சபைக்குக் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

(4) மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள்-

(அ) (17 ஆம் அத்தியாயமான) சத்தியங்கள் மற்றும் உறுதியுரைகள் கட்டளைச்சட்டத்திற்கிணங்க, ஏதேனும் நிதிநிறுவனத்தின் எவரேனும் பணிப்பாளருக்கு, அலுவலருக்கு அல்லது ஊழியருக்குச் சத்தியங்களை அல்லது உறுதியுரைகளை எடுத்தோதலாம்;

(ஆ) ஏதேனும் நிதிநிறுவனத்தின் அலுவலல்களினது உண்மையான நிலைமையை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய

தகவல்களைக் கொடுத்துதவும்படி அத்தகைய எவரேனும் பணிப்பாளரை, அலுவலரை அல்லது ஊழியரைத் தேவைப்படுத்தலாம்; அல்லது

(இ) எவரேனும் பணிப்பாளரை, அலுவலரை அல்லது ஊழியரை, எவையேனும் தகவல்களைக் கொண்டுள்ளதும் அல்லது கொண்டிருக்கக்கூடியதும் அவரது உடைமையிலுள்ளதுமான ஏதேனும் புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்தலாம்.

(5) ஏதேனும் நிதிநிறுவனத்தில் புத்தகங்களையும், பதிவேடுகளையும் மற்றும் அதன் பணத்தையும், சொத்துக்களையும், பொதுவான நிலைமையையும் பரிசோதனை செய்வதற்கு மத்திய வங்கியினால் கோரப்படும்போதெல்லாம் அதற்கான சந்தர்ப்பமொன்றை மத்திய வங்கிக்கு அல்லது மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு அவ்வாறு அளித்தல் அந்நிறுவனத்தின் ஒவ்வொரு பணிப்பாளரினதும், அலுவலரினதும் அல்லது ஊழியரினதும் கடமையாதல் வேண்டும்.

(6) மத்திய வங்கியானது, நிதிநிறுவனங்களின் தொடர்ச்சியான மேற்பார்வையின் நோக்கதுக்காக –

(அ) அத்தகைய ஏதேனும் நிதிநிறுவனத்தின் அலுவல்களினது உண்மையான நிலைமையை நிச்சயிக்கும் நோக்கத்துக்காகப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமென அது கருதக்கூடியவாறாக, அத்தகைய நிதிநிறுவனத்தின் தொழில் அல்லது அலுவல்கள் தொடர்பான அத்தகைய கூற்றையும் தகவல்களையும் காலத்துக்காலமும் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதியினுள்ளும் கொடுத்துதவும்படி அத்தகைய நிதிநிறுவனத்தைத் தேவைப்படுத்தலாம்;

(ஆ) பந்தி (அ)வில் குறிப்பீடுசெய்யப்பட்ட நோக்கத்துக்காகப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமென அது கருதக்கூடியவாறாக, அத்தகைய ஏதேனும் நிதிநிறுவனத்தின்

அத்தகைய கணக்காய்வாளரினால் நிறைவேற்றப்பட்ட கணக்காய்வொன்று தொடர்பான எவையேனும் தகவல் களை, குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அதற்குக் கொடுத்துதவும்படி, அத்தகைய நிதிநிறுவனத்தின் கணக்காய்வாளரைத் தேவைப்படுத்தலாம்; அத்துடன்

(இ) அவ்வாறு கொடுத்துதவப்பட்ட ஏதேனும் கூற்றின் அல்லது தகவலின் செம்மையைச் சரிபார்க்கும் நோக்கத் துக்கு அவசியமென அது கருதக்கூடியவாறாக அத்தகைய ஏதேனும் நிதிநிறுவனத்தினால் வைத்திருக்கப்பட்ட புத்தகங்களையும் கணக்குகளையும் பரிசோதனை செய்யலாம்.

(7) மத்திய வங்கியின் எவரேனும் ஊழியர் அல்லது மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் தகைமை பெற்ற ஆள், ஏதேனும் நிதி நிறுவனத்தின் கடல்கடந்த தொழிற் பாடுகளுட்பட, மத்திய வங்கியினால் அதற்கெனப் பணிப்புகள் விடுக்கப்படின், அத்தகைய நிதிநிறுவனத்தின் ஏதேனும் துணைநிலைக்கம்பெனியின் அல்லது முகவராண்மையின் புத்தகங் களையும் கணக்குகளையும் பரிசோதனைசெய்தல் வேண்டும்.

(8) பின்வருவன பொறுப்பிக்கப்பட்டவையும் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே உள்ளவையுமான தகுதிவாய்ந்த அதிகாரசபைகளுடன், அவற்றின் தொழிலினது தன்மைக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்ட நிதிநிறுவனங்களின் வகுப்புகளிலிருந்து முழுமையாக அல்லது பகுதியளவில் அல்லது கூட்டுமொத்த வடிவத்தில் (4) ஆம் அல்லது (6) ஆம் உட்பிரிவின்கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களையும் தரவுகளையும் மத்தியவங்கி பரிமாற்றலாம்:-

(அ) ஏனைய நிதிநிறுனங்களை மேற்பார்வைசெய்தல்;

(ஆ) நிதிச் சந்தைகளை மேற்பார்வை செய்தல்;

(இ) பேரண்ட முன்மதியுடைய கொள்கையைப் பயன்படுத்து வதனூடாக நிதி முறைமையின் நிலையுறுதியைப் பேணு தல்; அத்துடன்

(ஈ) நிதிநிறுவனங்களை மீள ஒழுங்குபடுத்துதல் அல்லது தீர்மானித்தல்;

அத்துடன் தகவல்களையும் தரவுகளையும் பரிமாற்றுவதற்கான நடவடிக்கைமுறையைத் தீர்மானிப்பதற்காகவும் அவற்றின் முறையான வகிபங்குகளையும் கடமைகளையும் குறித்துரைத்தும், அத்தகைய அதிகாரசபைகளுள் எவற்றுடனும் உடன்படிக்கையைச் செய்துகொள்ளலாம்.

(9) எழுபத்தொன்பதாம் பிரிவிற்கிணங்க நிதிநிறுவனங்களின் தொழிலினது தன்மைக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்ட அவற்றின் வகுப்புகளிலிருந்து முழுமையாக அல்லது பகுதியளவில் அல்லது கூட்டுமொத்த வடிவத்தில் (4) ஆம் அல்லது (6) ஆம் உட்பிரிவின்கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களையும் தரவுகளையும் மத்திய வங்கி வெளிவிடலாம்.

(10) இப்பிரிவில் -

"பரிசோதனைக் காலப்பகுதி" என்பது, மத்திய வங்கி யினால் அந்நோக்கத்திற்கென குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய காலநீட்சியைக் கொண்ட காலப்பகுதியொன்று என்று பொருள் படும்; அத்துடன்

"தகைமைபெற்ற ஆள்" என்பது, கல்விசார் அல்லது உயர்தொழில் தகைமையையும் வங்கித்தொழில், நிதி, கணக்கியல், கணக்காய்வு, சட்டம், ஆபத்து முகாமைத்துவம் அல்லது வேறேதேனும் அதை யொத்த துறைகளில் விசாலமான அறிவையும் அனுபவத்தையும் கொண்டுள்ள ஆளொருவர் எனப் பொருள்படும்.

*மத்திய வங்கியின் தீர்மான அதிகாரம்*

**62.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், மத்திய வங்கியானது, நிதிநிறுவனங்களைத் தீர்மானிப்பதற்காகப் புறநீங்கலாகப் பொறுப்புடைய அதிகாரசபை யாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், தீர்மானமானது பகிரங்க நிதிகளை உட்படுத்துமிடத்து, அத்தகைய தீர்மான முடிபுகள், ஏற்புடையற் பாலனவான சட்டங்களுக்கமைய, அமைச்சரின் கலந்தாலோசனை யுடன் எடுக்கப்படுதல் வேண்டும்.

(2) தகவல்களைப் பரிமாற்றுவதற்காகவும் தீர்மானத் திட்ட மிடுதலிலான ஒத்துழைப்புக்காகவும் தீர்மான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதிலும் மத்திய வங்கியானது வெளிநாட்டு மேற்பார்வையாளர்களுடனும் தீர்மான அதிகாரசபைகளுடனும் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளலாம்.

(3) மத்திய வங்கியானது இச்சட்டத்தினதும் வேறு ஏற்புடையற் பாலனவான சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்கிணங்க நிதிநிறுவனங் களின்மீது தீர்மானத் திட்டமிடுதலை நிறைவேற்றுதலும் தீர்மான வழிமுறைகளை நடைமுறைப்படுத்துதலும் வேண்டும்.

## பாகம் X

## பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபை

*மத்திய வங்கியின் பேரண்ட முன்மதியுடைய குறிக்கோள்கள்*

**63.** (1) மத்திய வங்கியானது, இலங்கையில் பேரண்ட முன்மதி யுடைய அதிகாரசபையாகவிருத்தல் வேண்டும்.

(2) மத்திய வங்கியானது, பெரும் பட்டறிவுச் சாதனங்களின் பாவனைக்கான ஒட்டுமொத்த அணுகுகையை அபிவிருத்திசெய்த லும் காலத்துக்குக்காலம் நாளதுவரையாக்குதலும் வேண்டுமென்பது டன் ஒரு பெரும் பட்டறிவுக் கொள்கையில் மத்திய வங்கியின் வகிபங்கைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் நோக்குடன் இந்த அணுகுகைகளை வெளியிடுதலும் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது, நிதிசார் நிலையுறுதியை எய்துவதற்கென, பின்வரும் இடைநிலைப் பேரண்ட முன்மதியுடைய குறிக்கோள்களைப் பின்தொடர்தல் வேண்டும்:-

(அ) பாதகமான பொருளாதார மற்றும் நிதிநிலைமைகளின் கீழும் கூட நிதிச்சேவைகளின் வழங்குகையை ஆதாரப்படுத்தும் ஒரு முறையில், நிதிசார் முறைமையின் தாக்குப்பிடிக்கும் தன்மையைப் பேணுதல்;

(ஆ) கடன் மட்டும் முடுக்கிகளிலான நிலைபெறுதகாதனவான அதிகரிப்புகளிருந்து ஏற்படுகின்ற ஆபத்துக்களை மட்டுப்படுத்துதல்; அத்துடன்

(இ) நிதிசார் முறையைமினுள்ளான இடைத்தொடர்பிலிருந்தான ஆபத்துக்களை மட்டுப்படுத்துதலும் தனிப்பட்ட முறைமைரீதியில் முக்கியமான நிறுவனங்களின் முறிவுக்கான ஆபத்தைக் கட்டுப்படுத்துதலும்.

(4) (அ) ஐந்தாம், ஆறாம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, மத்திய வங்கியானது, அமைச்சரின் கோரிக்கையின் மீது, மத்திய வங்கியின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பான தகவல்களை அமைச்சருக்கு வழங்குதல் வேண்டும்.

(ஆ) மேற்பார்வைசெய்யப்பட்ட அல்லது மேல்நோக்கப்பட்ட உருவகங்கள் தொடர்பான எவையேனும் குறிப்பிட்ட தகவல்கள், நெருக்கடித் தடுப்பு மற்றும் நெருக்கடி முகாமையுட்பட, நிதிசார் நிலையுறுதி தொடர்பில் அரசாங்கத்தின் நோக்கத்துக்காக மட்டுமே வழங்கப்படலாம்.

(இ) இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட அந்தரங்கத்தன்மைசார் தேவைப்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய தகவல்களின் வழங்குகை, அந்தரங்கத்தன்மையைப் பேணிக்காப்பதற்குத் தோதானவையென மத்திய வங்கி கருதக்கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

(5) மத்திய வங்கியானது, (3) ஆம் உட்பிரிவின்கீழ் நிதிசார் நிலையுறுதியை எய்துவதில், வைப்பாளர்களின் நலன்களைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

*மத்திய வங்கியின் பேரண்ட முன்மதியுடைய தத்துவங்கள்*

**64.** (1) மத்திய வங்கியானது, பேரண்ட முன்மதியுடைய அதிகார சபையென்ற தலைமையில்-

(அ) நிதிசார் முறைமையில் ஆபத்துக்களும் பாதிப்புக்குட்படத் தக்கதன்மைகளும் கட்டியெழுப்பப்படுவதனைக் கண்காணிக்கலாம், அடையாளங்காணலாம் அல்லது மதிப்பிடலாம்;

(ஆ) பேரண்ட முன்மதியுடைய குறிக்கோள்களை எய்துவதற்கெனத் தரவுகளையும், தகவல்களையும், புள்ளிவிபரங்களையும் கோரலாம், சேகரிக்கலாம், தொகுக்கலாம், பகுப்பாய்வுசெய்யலாம் அல்லது வெளியிடலாம்;

(இ) அழுத்தப் பரீட்சிப்பு மற்றும் மாதிரிப் பயிற்சிகளை நடாத்தலாம்;

(ஈ) 68 ஆம் பிரிவின்கீழ் முறைமைரீதியில் முக்கியமான நிதிசார் துறைப் பங்குபற்றுநர்களைப் பெயர் குறிக்கலாம்;

(உ) 66 ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்ட பேரண்ட முன்மதியுடைய சாதனங்கள் ஏற்றுக்கொண்டு மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்ட நிதி நிறுவனங்களுக்கு ஏற்புடையனவாக்கலாம்;

(ஊ) அதிகரித்த பேரண்ட முன்மதிமேல் நோக்கை ஏற்றுக்கொண்டு முறைமைரீதியில் முக்கியமான நிதிசார் துறைப் பங்குபற்றுநர்களுக்கு ஏற்புடையதாக்கலாம்.

(எ) முறைமைரீதியான ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய ஒழுங்குவிதியிலான இடைவெளிகளை அடையாளங்காணலாம்;

(ஏ) அடையாளங்காணப்பட்ட முறைமைரீதியிலான ஆபத்துக்களைத் தணிப்பதற்கு அல்லது எதிர்நோக்கு வதற்கு மூலோபாயங்களையும் கொள்கைகளையும் வகுத்தமைக்கலாம்;

(ஐ) உள்நாட்டு மற்றும் சர்வதேச நிதிசார் ஒழுங்குபடுத்தும் அபிவிருத்திகளைக் கண்காணிக்கலாம் நிதிசார் நிலையுறுதியை அதிகரிக்கும் சட்டவாக்க அல்லது ஒழுங்கு படுத்தும் வழிமுறைகள் பற்றி மதியுறையளிக்கலாம்;

(ஒ) இயைபான நிதிசார்துறை அதிகாரசபைகளினால் ஒழுங்குபடுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்ட நிதிசார் துறைப் பங்குபற்றுநர்கள் தொடர்பில் பிரயோகிக்கப் படவேண்டிய பெரும் பட்டறிவு நியமங்களை அபிவிருத்தி செய்யலாம் மற்றும் முன்மொழியலாம்;

(ஓ) இயைபான நிதிசார் துறை அதிகாரசபைகளுள் தகவற்பகிர்வையும் ஒத்துழைப்பையும் வசதிப்படுத்த லாம்; அத்துடன்

(ஔ) பகிரங்க அல்லது நிதிசார் துறை அதிகாரசபைகளுக்கு வழங்கப்படவுள்ள விதப்புரைகளை நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவுக்கு முன்மொழியலாம்.

(2) ஆளும் சபையானது, இப்பிரிவின்கீழ் பேரண்ட முன்மதி யுடைய அதிகாரம் தொடர்பான ஏதேனும் கருமத்தை முடிபுசெய்யும் நோக்கத்துக்காக ஆகக்குறைந்தது காலாண்டுக்கொருதடவையேனும் கூடுதல் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது, அதன் தன்னாட்சிக்குப் பங்கமின்றி, இப்பிரிவின்கீழான தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளை யும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அவசியமாக்ககூடியவாறான அத்தகைய தகவல்களை நிதிசார் முறைமை மேல்நோக்குக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டும்.

*ஆபத்துக்களைக் கண் காணித்தலும், பகுப்பாய்வு செய்தலும், மதிப்பீடு செய்தலும்*

**65.** (1) மத்திய வங்கியானது, பின்வருவனவற்றைக் கண்காணித்தலும், பகுப்பாய்வுசெய்தலும், மதிப்பீடுசெய்தலும் வேண்டும்:-

(அ) நிதிசார்துறையிலான அபிவிருத்திகளிலிருந்து எழுகின்ற ஆபத்துக்களுட்பட, நிதிசார் துறையின் பாதிப்புக்குட் படத்தக்க தன்மைகள்;

(ஆ) வீட்டுத்துறை மற்றும் நிதிசாராக் கூட்டிணைப்புத் துறைகளில் நிதிசார் அபிவிருத்திகளிலிருந்து எழுகின்ற வையுட்பட, நிதிசார் முறைமைக்கான ஆபத்துக்கள்;

(இ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே, கூடுதல் பரந்தளவினதான பொருளாதாரச் சூழ்நிலைகளிலிருந்து எழுகின்ற நிதிசார் முறைமைக்கான ஆபத்துக்கள்; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின் நியதிகளின்படி நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவின் உறுப்பினர்களினால் எழுதப் பட்ட அல்லது நிதிசார் துறை அதிகாரசபையொன்றினால் அறிக்கையிடப்பட்ட அல்லது ஒரு பகிரங்க அதிகார சபையினால் அறிவிக்கப்பட்ட ஏதேனும் கருமத்தில் உத்தேசிக்கப்பட்ட ஏதெனும் ஆபத்து உட்பட, நிதிசார் முறைமையின் நிலையுறுதிக்கான ஏதேனும் ஆபத்தும், அத்தகைய ஆபத்துக்களின் தன்மையும் அளவும்.

(2) மத்திய வங்கியானது, முந்திய கட்டமொன்றில், முறைமைசார் ஆபத்துக்களை மதிப்பிடுவதில் பயன்படுத்தப்படவேண்டிய முறைமையினையும் சுட்டிகளையும் தீர்மானித்தல் வேண்டும்.

*பேரண்ட முன்மதியுடைய சாதனங்கள்*

**66.** (1) அடையாளங்காணப்பட்ட முறைமைசார் ஆபத்துக்களைத் தணிப்பதற்கென அல்லது ஒழிப்பதற்கென, மத்திய வங்கி, தரம்சார் மற்றும் கணியம்சார் பேரண்ட முன்மதியுடைய சாதனங்களை வழங்குதல் வேண்டும்; அவை பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) இணைச்சுழற்சிமுறை மூலதனத் தாங்கியிருப்பு;

(ஆ) மூலதனப் பேணல் தாங்கியிருப்பு;

(இ) இயக்கவாற்றச்சார்ந்த ஏற்பாடுகள்;

(ஈ) முடுக்கி விகிதங்கள்மீதான உச்ச எல்லை;

(உ) வட்டிவீதங்கள் மற்றும் கடன் வளர்ச்சிமீதான உச்ச எல்லைகள்;

(ஊ) துறைசார் மூலதனத் தேவைப்பாடுகள்;

(எ) பெறுமதிக்கான கடன் விகிதத்தின்மீதான உச்ச எல்லைகள்;

(ஏ) வருமான விகிதத்திற்கான தனிசுத் தீர்ப்பனவுமீதான உச்ச எல்லைகள்;

(ஐ) வருமானத்திற்கான கடன் மற்றும் வருமான விகிதங்களுக்கான தனிசுமீதான உச்ச எல்லைகள்;

(ஒ) வெளிக்காட்டுகைமீதான உச்ச எல்லைகள்;

(ஓ) திரவத்தன்மைச் சாதனங்கள்;

(ஔ) மூலதன மிகைக்கட்டணங்கள்;

(க) திரவத்தன்மை மிகைக்கட்டணங்கள்;

(ங) நிதியளித்தல் அல்லது பெறுமதிகள் சந்தைகளில் இடைத்தொடர்புகளைக் கட்டுப்படுத்துதல்; அத்துடன்

(ச) அளவு வைப்புத் தேவைப்பாடுகள்.

(2) மத்திய வங்கியினால் ஒழுங்கப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்பட்ட எவரேனும் நிதிசார் துறைப்பங்குபற்றுநர் தொடர்பில் அல்லது அத்தகைய நிதிசார்துறைப் பங்குபற்றுநர்களின் வகுப்பு தொடர்பில் மத்திய வங்கி பேரண்ட முன்மதியுடைய சாதனங்களை ஏற்புடையனவாக்கலாம்.

*நிதிநிறுவனங்களின் மேல் மத்திய வங்கியின் தத்துவங்கள்*

**67.** (1) மத்தியவங்கியானது நிதிநிறுவனங்களின்மேல் பின்வரும் தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்:-

(அ) இயைபான தரவுகளை அல்லது தகவல்களை நேரடியாகச் சேகரித்தல்;

(ஆ) 66 ஆம் பிரிவின்கிணங்க ஒரு பேரண்ட முன்மதியுடைய சாதனத்தை ஏற்புடையதாக்குதல்;

(இ) பந்தி (அ) வின்கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகளையும் தகவல்களையும் சரிபார்ப்பதற்கும், இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கு இணங்கியொழுகுவதனைச் சரிபார்ப்பதற்கும் ஸ்தலத்திலான சோதனைகளை நடாத்துதல்; அத்துடன்

(ஈ) இணங்கியொழுகாதுள்ள ஏதேனும் நிதிசார் துறைப் பங்குபற்றுநருக்கு இச்சட்டத்தின் 107 ஆம் பிரிவிற் கூட்டிக்காட்டப்பட்ட நிருவாக வழிமுறைகளை ஏற்புடையதாக்குவதன்மூலம் அத்தகைய விதிகளை வலுவுறுத்துதல்; அத்துடன் இணங்கியொழுகையை மீட்டுப்பெறுவதற்கு அவசியமானவாறான நடவடிக்கைகளை எடுக்கும்படி அல்லது எடுக்காது தவிர்க்கும்படி கட்டளையிடுதல்.

(2) மத்திய வங்கியானது அதன் பேரண்ட முன்மதியுடைய குறிக்கோள்களை எய்துவதற்கென எவரேனுமாளிடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து நேரடியாக இயைபான தரவுகளை அல்லது தகவல்களைச் சேகரிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

*முறைமை ரீதியில் முக்கியமான நிதிசார் துறைப் பங்குபற்றுநர்களைப் பெயர்குறித்தல்*

**68.** (1) முறைமைரீதியில் முக்கியமானவராக நிதிசார் துறைப் பங்குபற்றுநரைப் பெயர்குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கட்டளைகற்களை மத்திய வங்கி விதித்துரைத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்ட எதுவும், முறைமைரீதியில் முக்கியமானவையாகப் பெயர்குறிக்கப்பட்ட எவரேனும் நிதிசார் துறைப் பங்குபற்றுநரொருவர் ஏதேனும்

பகிரங்க அதிகாரசபையிடமிருந்து எவ்வடிவத்தினதுமான உத்தரவாதத்தை அல்லது கடனை அல்லது வேறு ஆதரவை உரிமைகோருவதற்கு உரித்துடையவராக்கும் வகையில் பொருளமைத்துக்கொள்ளப் படுதலாகாது.

*நிதிசார் மேல்நோக்குக் குழுவுக்கு மத்திய வங்கி விதப்புரைகளை முன்மொழிதல்*

**69.** மத்திய வங்கியானது, 66 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பேரண்ட முன்மதியுடைய சாதனங்கள் தவிர்ந்த வேறு தத்துவங்களுடன் முறைமைரீதியிலான ஆபத்தொன்றை தடுப்பதற்கு அல்லது தணிப்பதற்கு அவசியமென அது கருதினால், அல்லது அத்தகைய ஆபத்து மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வைசார் அதிகாரத்துக்கு வெளியேயான ஏதேனும் வகுப்பினதான நிதிசார் துறைப் பங்கு பற்றுநர்களின் நடத்தையிலிருந்து எழக்கூடியதாகவிருந்தால், 75 ஆம் பிரிவின்கீழ் இயைபான பகிரங்க அதிகரசபைக்கு அல்லது நிதிசார் துறை அதிகாரசபைகளுக்கு வழங்கப்படவேண்டிய விதப்புரைகளை நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவுக்கு முன் மொழிதல் வேண்டும்.

*நிதிசார் நிலையுறுதி மீளாய்வு*

**70.** (1) மத்திய வங்கியானது ஒவ்வோராண்டும் ஒற்றோபர் மாதத்தில் முப்பத்தோராம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் (இச்சட்டத்தில், "நிதிசார் நிலையுறுதி மீளாய்வு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிதிசார் முறைமையின் நிலையுறுதிபற்றிய மதிப்பீ டொன்றைத் தயாரித்து வெளியிடுதல் வேண்டும்.

(2) நிதிசார் நிலையுறுதி மீளாய்வு பின்வருவனவற்றை உள்ளடக்கு தல் வேண்டும்:-

(அ) மத்திய வங்கியின் நிதிசார் முறைமை நிலையுறுதிபற்றிய மதிப்பீடு;

(ஆ) நிதிசார் முறைமையின் ஆபத்துக்களையும் பாதிப்புக்குட் படத்தக்கதன்மைகளையும் அடையாளங்காணுதலும் மதிப்பீடுசெய்தலும்;

(இ) நிதிசார் முறைமையிலான ஆபத்துக்கள், பாதிப்புக்குட் படத்தக்கதன்மைகள் அல்லது குழப்பங்களை அடையாளங்காண்பதற்கும் முகாமைசெய்வதற்கும்

மத்திய வங்கியினாலும் ஏனைய நிதிசார் துறை அதிகாரசபைகளினாலும் எடுக்கப்பட்ட வழிமுறைகள் பற்றியவொரு மேல்நோக்கு; அத்துடன்

(ஈ) மீளாய்வின்கீழுள்ள காலப்பகுதியின்போது நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவிருந்து செய்யப்பட்ட விதப்புரைகளும் அந்த விதப்புரைகளை நடைமுறைப் படுத்துவதில் எய்தப்பட்ட முன்னேற்றமும் பற்றியவொரு மேல்நோக்கு.

பாகம் XI

**நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழு**

*நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவைத் தாபித்தல்*

**71.** (1) நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவொன்றிருத்தல் வேண்டும்.

(2) நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவின் குறிக்கோள் பேரண்ட முன்மதியுடைய கொள்கைக்கிணங்க நிதிசார் முறைமையின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குப் பங்களிப்பதாகவிருத்தல் வேண்டும்.

*நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்*

**72.** நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவானது –

(அ) நிதிசார் முறைமையைப் பாதிக்கின்ற முறைமைரீதியிலான ஆபத்துக்களின் அடையாளங்காணப்பட்ட கட்டியெழுப்புதலைத் தணிப்பதற்குப் பேரண்ட முன்மதியுடைய கொள்கையைப் பரிசோதனை செய்தல் வேண்டும்;

(ஆ) பேரண்ட முன்மதியுடைய கொள்கையை நடைமுறைப் படுத்துவதனை ஒருங்கிணைத்தல் வேண்டும்;

(இ) 69 ஆம் பிரிவின்கீழ் மத்திய வங்கியின் முன்மொழிவொன்றன்மேல், அடையாளங்காணப்பட்ட ஆபத்துக்குப் பதிலிறுத்து திருத்த நடவடிக்கை பற்றி இயைபான

பகிரங்க அதிகாரசபைகளுக்கும் நிதிசார் துறை அதிகாரசபைகளுக்கும் விதப்புரைகளை வழங்குதல் வேண்டுமென்பதுடன் அவசியமெனக் கருதினால் அந்த விதப்புரைகளைப் பகிரங்கப்படுத்துதலும் வேண்டும்; அத்துடன்

(ஈ) அதன் விதப்புரைகளுடன் இணங்கியொழுகுதலைக் கண்காணித்தல் வேண்டும்.

*நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவின் அமைப்பு*

**73.** (1) நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) தவிசாளராகவிருக்கவேண்டிய மத்திய வங்கியின் ஆளுநர்;

(ஆ) பேரண்ட முன்மதியுடைய கொள்கைக்குப் பொறுப்பாக வுள்ள மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்;

(இ) ஒழுங்குபடுத்துகைக்கும் மேற்பார்வைக்கும் பொறுப்பாக வுள்ள மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்;

(ஈ) திறைசோரிச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப் பட்ட திறைசேரிப் பிரதிச் செயலாளர்;

(உ) இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு வின் பிரதான நிறைவேற்ற அலுவலர்;

(ஊ) இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலர்; அத்துடன்

(எ) ஆளும் சபையினால் நியமிக்கப்படக்கூடிய இன்னுமோர் ஆள்.

(2) நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவானது, வேறேதேனும் பகிரங்க அதிகாரசபையிலிருந்தான பிரதிநிதிகளை, அவர்களின் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்கு, குழுவின் கூட்டங்களுக்கு வரவழைக்கலாம்.

(3) மத்திய வங்கியின் ஊழியரொருவராக இருக்கவேண்டிய நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவின் செயலாளர் மத்திய வங்கியின் ஆளுநரால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவின் கூட்ட மொன்றுக்கான கூட்டநடப்பெண், (1)ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) அல்லது (இ) என்னும் பந்திகளிற் குறிப்பீடுசெய்யப்பட்ட உறுப்பினர்களுட்பட, நான்கு வாக்களிக்கும் உறுப்பினர்களாதல் வேண்டும்.

(5) நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவின் ஒவ்வொரு வாக்களிக்கும் உறுப்பினரும் ஒரு வாக்கைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், வாக்குகள் சமமாகவிருக்கும் பட்சத்தில், தவிசாளர் இரண்டாவது அல்லது அறுதியிடும் வாக்கொன்றுக்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

(6) நிதிசார் முறைமை மேல்நோக்கு குழு, 72 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியின் விடயத்தில், சாதாரணத் தீர்மானத்தின்மூலம் வாக்களித்தல் வேண்டும்.

(7) நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவின் கூட்டமொன்று, ஆகக்குறைந்தது காலாண்டுக்கொருதடவையேனும் கூட்டப்படுதல் வேண்டும். ஏதேனும் அதிவிசேட கூட்டம், தவிசாளரினால் அவரது தற்றுணிபின்பேரில் அல்லது ஆகக்குறைந்தது இரு வாக்களிக்கும் உறுப்பினர்களின் எழுத்திலான கோரிக்கையின் பேரில் கூட்டப் படலாம்.

(8) நிதிசார் முறைமை மேல்நோக்குக்குழு, அதன் கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் தொடர்பான விதிகளை ஆக்கலாம்.

(9) நிதிசார் முறைமை மேல்நோக்கு குழுவின் செயலாளர், நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவின் ஒவ்வொரு கூட்டத்தினதும் நிகழ்ச்சிக்குறிப்புகளை ஆகக்குறைந்தது பன்னிரெண்டு ஆண்டுக் காலப்பகுதிக்கேனும் வைத்திருத்தல் வேண்டும்.

*நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவின் செயலகம்*

**74.** மத்திய வங்கியானது நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவின் செயலகமொன்றைத் தாபித்தல் வேண்டுமென்பதுடன் அது, நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுத் தவிசாளரின் பணிப்பின்கீழ், நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவுக்கான உயர்தரப் பகுப்பாய்வுசார், புள்ளி விபரஞ்சார், நிருவாகஞ்சார், ஏற்பாட்டியல்சார் மற்றும் நிதிசார் ஆதரவுக்குப் பொறுப்பாக விருத்தலும் வேண்டும்.

*பகிரங்க அதிகாரசபை களுக்கும் நிதிசார் துறை அதிகாரசபை களுக்குமான விதப்புரைகள்*

**75.** (1) எழுபத்திரெண்டாம் பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழான ஏதேனும் விதப்புரை, ஒன்றில் பொதுவான அல்லது குறிப்பிட்ட தன்மையினதாகவிருக்கலாமென்பதுடன், விதப்புரையைப் பெறுகின்ற அதிகாரசபையின் பணிப்பாணைக்கிணங்க, எல்லா அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகிரங்க அதிகாரசபைகளுக்கு அனுப்பப்படலாம்.

(2) விதப்புரையானது, கொள்கைப் பதிலிறுத்தற்கான குறித்துரைக்கப்பட்டவொரு கால எல்லையை உள்ளடக்குதல் வேண்டும்.

(3) விதப்புரையானது, நிதிசார் துறை அதிகாரசபைகளுக்கு, விதப்புரையைப் பெறுகின்ற அதிகாரசபையின் பணிப்பாணைக் கிணங்க, அதன் ஒழுங்குபடுத்தும், மேற்பார்வைசார், வலுயுறுத்தல் அல்லது தீர்மானத் தத்துவங்களைப் பிரயோகிப்பதன்மூலம் குறிப்பிட்ட நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்படுவதனைக் கோருவதற்கென அனுப்பப்படலாம்.

(4) விதப்புரையானது, அதனைப் பெறுகின்ற அதிகாரசபை அவ்விதப்புரையில் குறித்துரைக்கப்பட்ட கால எல்லையினுள் எல்லா நடவடிக்கைகளையும் கடைப்பிடிக்கும்போது, முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டதெனக் கருதப்படுதல் வேண்டும்.

(5) (அ) பெறுகின்ற அதிகாரசபை விதப்புரையை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு உட்கருதாதவிடத்து, அதற்கான காரணங்களை, அது, நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவின் செயலகத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) பெறுகின்ற அதிகாரசபை குறித்துரைக்கப்பட்ட கால எல்லையினுள் விதப்புரையின் ஒரு பாகத்தை மட்டுமே நடைமுறைப் படுத்துமிடத்து, விதப்புரையின் எஞ்சிய பாகத்தை நடைமுறைப் படுத்தாமைக்கான காரணங்களை, அது, நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவின் செயலகத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

(6) நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவானது விதப்புரையை முழுமையாக நடைமுறைப்படுத்தாதிருப்பதற்கு முடிபுசெய்யுமிடத்து, அத்தகைய முடிபை அது பகிரங்கப்படுத்துதல் வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், முறைமைரீதியில் முக்கியமாகவுள்ளரெனப் பெயர்குறிக்கப்பட்ட நிதிசார்துறைப் பங்குபற்றுநரொருவருக்கு விதப்புரையொன்று வழங்கப்படுமிடத்து, நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழு உடனடியாகக் கூட்டப்பட்டு விபரமானவொரு விளக்கத்துக்கமைய விதப்புரையை மீளவழங்குவதாதென்பதைத் தீர்மானித்தல் வேண்டும். ஏதேனும் விதப்புரை மீளவழங்கப்பட்டு அது நிதிசார் துறைப் பங்குபற்றுநரினால் முழுமையாக நடைமுறைப்படுத்தப் படாவிடின், நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழு எடுக்கப்பட்ட முடிபை வெளியிடுதல் வேண்டும்.

(8) (அ) நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவானது, தோதான சூழ்நிலைகளில், விதப்புரையொன்று வெளியிடப்படுதல் வேண்டுமாவென்பதை முடிபுசெய்தல் வேண்டும்.

(ஆ) நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவானது, ஒரு விதப்புரையைப் பகிரங்கப்படுத்துவதற்கு முடிபு செய்தல், பெறுகின்ற அதிகாரசபைக்கு அது முற்கூட்டியே தெரிவித்தல் வேண்டும்.

(இ) நிதிசார் முறைமை மேல்நோக்குக் குழுவினால் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள விதப்புரையொன்றைப் பெறுகின்ற அதிகாரசபை, அதற்குப் பதிலிறுப்பதில் அதன் கருத்துக்களையும் நியாயப்படுத்துகையையும் பகிரங்கப்படுத்தலாம்.

## பாகம் XII

### நிதிசார்துறைச் அதிகாரசபைகளுடன் தகவற் பரிமாற்றம்

**76.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், நிதிசார் துறை அதிகாரசபைகள் அவற்றின் பேரண்ட முன்மதியுடைய அதிகாரம் தொடர்பாக மத்திய வங்கியுடன் ஒத்துழைத்தல் வேண்டுமென்பதுடன், அவற்றின் பேரண்ட முன்மதியுடைய அதிகாரத்தைப் பிரயோகிப்பதில் அவசியமான எல்லாத் தரவுகளையும் தகவல்களையும் மத்திய வங்கிக்கு வழங்குதலும் வேண்டும்.

*பேரண்ட முன்மதியுடைய பிரச்சினைகள் தொடர்பான தகவற் பரிமாற்றம்*

(2) இப்பாகத்தின் கீழ் மத்தியவங்கியினால் செய்யப்படும், தரவுகளுக்கான அல்லது தகவல்களுக்கான அல்லது புள்ளி விபரங்களுக்கான கோரிக்கையொன்றின்மேல் நிதிசார் துறை அதிகாரசபையொன்று, அத்தகைய கோரிக்கையில் குறித்துரைக் கப்பட்டவொரு காலப்பகுதியினுள் அத்தகைய எவையேனும் தரவுகளை, தகவல்களை அல்லது புள்ளிவிபரங்களை மத்திய வங்கிக்கு வழங்குதல் வேண்டும்.

உடன்படிக்கை

**77.** (1) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்காக, மத்திய வங்கியானது, செயல்முறைக்குகந்தவரை விரைவாக, அத்தகைய நடைமுறைப்படுத்துகைக்கான நடவடிக்கை முறையைத் தீர்மானிப்பதற்காகவும் அவற்றின் முறையான வகிபங்குகளையும் கடமைகளையும் குறித்துரைத்தும், ஒவ்வொரு நிதிசார்துறை அதிகாரசபையுடனும் உடன்படிக்கையைச் செய்து கொள்ளுதல் வேண்டும்.

(2) உடன்படிக்கையானது, குறைந்தபட்சத்தில், பின்வருவன வற்றின்மீதான ஏற்பாடுகளை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) தகவலைச் சேகரித்தலும் பகிர்தலும்; அத்துடன்

(ஆ) நிதிசார் துறை அதிகாரசபைகளினால் எடுக்கப்பட வேண்டிய பேரண்ட முன்மதியுடைய கொள்கை வழி முறைகள்பற்றிய அறிவிப்பும் கலந்தாலோசனையும்.

(3) மத்திய வங்கியானது, இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஏதேனும் பகிரங்க அதிகாரசபையுடன் உடன்படிக்கையைச் செய்துகொள்ளலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை, ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகளில் ஒருதடவையேனும் தோதான வாறாக மீளாய்வு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்படலாம்.

## பாகம் XIII

## புள்ளிவிபரங்களும் தகவல்களும்

புள்ளிவிபரங் களையும் தகவல்களையும் சேகரித்தல்

**78.** மத்திய வங்கியானது இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறே தேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கெனவும் அதன் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் பயனுள்ள பிரயோகத்துக்காகவும், புரிகைக்காகவும், நிறைவேற்றுகைக்காகவும்-

(அ) இயைபான புள்ளிவிபரங்களையும் தகவல்களையும் கோரலாம், சேகரிக்கலாம், தொகுக்கலாம், பகுப்பாய்வு செய்யலாம், பிரித்தெடுத்தல்களை எடுக்கலாம் மற்றும் வெளியிடலாம்;

(ஆ) அவ்வாறு தேவைப்படுத்தப்பட்ட புள்ளிவிபரஞ்சார் தகவல்களையும் அத்தகைய தகவல்கள் எந்தப் படிவத்தில் மத்திய வங்கிக்கு வழங்கப்படவேண்டுமோ அந்தப் படிவத்தையும், அறிக்கையிடுதல் தேவைப்பாடு களுக்கு அமைந்தோராகவுள்ள ஆட்களையும், ஏற்புடையற் பாலதான அந்தரங்கத்தன்மையின் தோற்றப்பாட்டையும், அத்தகைய தேவைப்பாடுகள் மீறப்படும் விடயத்தில் விதிக்கப்படக்கூடிய நிருவாக வழிமுறைகளையும் விதித் துரைக்கலாம்; அத்துடன்

(இ) புள்ளிவிபரங்களையும் தகவல்களையும் ஒழுங்குபடுத்து வதில் ஒத்திருத்தலையும் வினைத்திறனையும் எய்தும் நோக்குடன் சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிவிபரஞ்சார் முறைமைகளையும் தரவுகளைப் பரப்பும் நியமங்களையும் கடைப்பிடிப்பதில் இருபுடை மற்றும் பல்புடை முகவராண்மைகளுடன் ஒருங்கிணைய லாம்.

*புள்ளிவிபரங் களையும் தகவல்களையும் பரப்புதல்*

**79**. மத்திய வங்கியானது, 119 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக் கமைய, புள்ளிவிபரங்களையும், தகவல்களையும் புள்ளிவிபரங்களை யும் தகவல்களையும் தொகுப்பதில் ஏற்புடையதாக்கப்பட்ட முறைமை யியலையும் வெளியிடலாம்.

பாகம் XIV

## பாராளுமன்றம், அரசாங்கம் மற்றும் பொதுமக்களுடனான தொடர்புமுறை

*வகைகூற வேண்டியமை*

**80**. (1) மத்திய வங்கியானது, ஒவ்வோர் ஆறு மாதங்களிலும் ஒருதடவையும் மற்றும் அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய மேலதிக நேரங்களிலும், அதன் பணக் கொள்கையை நடைமுறைப்படுத்துதலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும் தொடர்பாகப் பொதுமக்களுக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(2) (அ) மத்திய வங்கியின் ஆளுநர், ஆளும் சபையினதும் பணக் கொள்கைச் சபையினதும் உறுப்பினர்கள், மத்திய வங்கியின் ஒவ்வொரு பிரதி ஆளுநர் என்போர், பாராளுமன்றத்தின் கோரிக்கையின்பேரில், மத்திய வங்கியின் பணிகள் தொடர்பாக, பாராளுமன்றத்தினால் அல்லது அதன் குழுக்களுள் எவற்றினாலும் ஒவ்வொரு நான்கு மாதங்களிலும் ஒரு தடவை கேட்கப்படுதல் வேண்டும்.

(ஆ) மத்திய வங்கியின் ஆளுநர், ஆளும் சபையினதும் பணக் கொள்கைச் சபையினதும் உறுப்பினர்கள், மத்திய வங்கியின் ஒவ்வொரு பிரதி ஆளுநர் என்போர், அவர்களின் சொந்த முயற்சியின்மீது, மத்திய வங்கியின் பணிகள்பற்றிப் பாராளுமன்றத்துக்குத் தெரிவிப்பதற்கான அல்லது மத்திய வங்கியின் ஏதேனும் ஆவணத்தை அல்லது அறிக்கையைப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பதற்கான சந்தர்ப்பமொன்றை நாடலாம்.

(3) மத்திய வங்கியானது, ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் நான்குமாதகாலப்பகுதியினுள், அதன் கொள்கைக் குறிக்கோள்களையும் நிதிசார் முறைமையின் நிலைமையையும் அழுத்திக்கூறி, அத்தகைய நிதியாண்டின்போது பொருளாதாரத்தின் நிலைமை பற்றி ஆளும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அறிக்கையொன்று வெளியிடப்பட்டு அமைச்சரினூடாகப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுவதனை மத்திய வங்கியின் ஆளுநர் உறுதிப்படுத்ததுல் வேண்டும். அத்தகைய நிதியாண்டின்போது பின்பற்றப்பட்ட மத்திய வங்கியின் கொள்கைகளின் மீளாய்வையும் மதிப்பீட்டையும் அவ்வறிக்கை உள்ளடக்குதல் வேண்டும்.

*அரசாங்கத்துக்கான நிதிசார் மதியுரைநர், அரசிறை முகவர் மற்றும் வங்கியாளர்*

**81.** (1) மத்திய வங்கியானது அரசாங்கத்துக்கான நிதிசார் ஆலோசகராகச் செயலாற்றுதல் வேண்டும்.

(2) மத்திய வங்கியானது, அரசாங்கத்துடன் அது உடன்பட வேண்டியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது, எழுத்திலான சட்டத்தினாலும் எழுத்திலான சட்டத்தின்கீழும் ஏற்பாடுசெய்யப்பட்ட அளவிற்கு அரசாங்கத்தின் அரசிறை முகவராகவும் அதற்கான வங்கியாளராகவும் செயலாற்றுதல் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது, அரசாங்கத்தின் அரசிறை முகவராக வும் அதற்கான வங்கியாளராகவும் அதன் பணிகளை நிறைவேற்று வதில், அத்தகைய பணிகளைப் புரிவதற்கு மத்திய வங்கி போதியமுறையில் சாதனமிடப்பட்ட அலுவலகங்களை அல்லது முகவராண்மைகளைக் கொண்டிராதவிடத்து, இலங்கையிலான அல்லது இலங்கைக்கு வெளியேயான இடங்களில் உள்ள வங்கி களின் அல்லது வேறு நிறுவனங்களின் சேவைகளை ஈடுபடுத்த லாம்.

(4) மத்திய வங்கியானது, அரசாங்கத்தின் கோரிக்கையின்மீது, அரசாங்கத்தின் அரசிறை முகவரென்ற தன்மையில் செயலாற்று கையில் மத்திய வங்கியினாற் பெறப்பட்ட நிதிகளின்மீதான தரவுகளை அரசாங்கத்துக்கு வழங்குதல் வேண்டும்.

(5) அரசாங்கமானது, மத்திய வங்கியின் கோரிக்கையின்மீது, மத்திய வங்கியின் பணிகளை அரசாங்கத்தின் அரசிறைக் கொள்கையுடன் ஒருங்கிணைக்கும் நோக்கத்துக்காக மத்திய வங்கி கோரக்கூடிய அத்தகைய தகல்களையும் ஆவணங்களையும் வழங்குதல் வேண்டும்.

(6) மத்திய வங்கியானது, சர்வதேசப் பண நிதியம், புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி அல்லது இலங்கை ஓர் உறுப்பினராகவுள்ள வேறேதேனும் சர்வதேச நிதிநிறுவனம் என்பவற்றுடனான ஏதேனும் கையாளுகையில், பேச்சுவார்தையில் அல்லது கொடுக்கல் வாங்கலில் இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய சர்வதேச நாணய நிதியம், புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி அல்லது அத்தகைய வேறு சர்வதேச நிதிநிறுவனத்தில் இலங்கையின் உறுப்பாண்மை யிலிருந்து அல்லது அவற்றுடனான தொழிற்பாடுகளிலிருந்து விளையக்கூடிய அத்தகைய கணக்குகளைப் பேணுதலும் வேண்டும். வெளிநாட்டு அரசாங்கங்கள், நிறுவனங்கள் அல்லது முகவராண்மைகளுடனான ஏதேனும் கையாளுகையில் பேச்சு வார்த்தையில் அல்லது கொடுக்கல்வாங்கல்களில் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு மத்திய வங்கி அரசாங்கத்தால் அதிகாரமளிக்கப்படலாம்.

(7) அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பிணையங்களுக்காக மத்திய வங்கி ஒரு பதிவகத்தைத் தொழிற்படுத்தலாம்.

அரசாங்கத்துக்கான வைப்பகம்

**82.** (1) மத்திய வங்கியானது அலுவலகமுறையான வைப்பகமாக விருத்தல் வேண்டுமென்பதுடன் அரசாங்கத்திடமிருந்து அல்லது அதன்சார்பில் ஏதேனும் நாணயத்தில் வைப்புக்களை ஏற்றுக் கொள்ளலாம்:

ஆயின், எவ்வாறாயினும், ஆளும் சபை விதித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய விதிகளுக்கமைய, அரசாங்க வைப்புக் களை ஏற்றுக்கொள்ளும்படி இலங்கையில் தொழிற்படுகின்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கு அதிகாரமளிக்கலாம்.

(2) மத்திய வங்கியானது, வைப்பகமென்ற தன்மையில், பணங்களைப் பெற்று செலவீடுசெய்தலும், அவைபற்றிய பதிவேடுகளை வைத்திருத்தலும், அவைதொடர்பான ஏனைய நிதிசார் சேவைகளை அரசாங்கத்துக்கு வழங்குதலும் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது, இலங்கை ரூபாக்களில் அரசாங்கத் தினால் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் வைப்பின்மீது ஏதேனும் வட்டியைச் செலுத்துதலாகாது.

ஒருங்கிணைப்புப் பேரவை

**83.** (1) (இச்சட்டத்தில், ''ஒருங்கிணைப்புப் பேரவை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மத்திய வங்கியின் அரசிறை, பண மற்றும் நிதிசார் நிலையுறுதிக் கொள்கைகளை ஒருங்கிணைப்பதற்கான பேரவையொன்றிருத்தல் வேண்டும்; அது பின்வரும் உறுப்பினர் களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) தவிசாளராகவிருக்கவேண்டிய மத்திய வங்கியின் ஆளுநர்;

(ஆ) திறைசேரிச் செயலாளர்; அத்துடன்

(இ) பொருளாதாரக் கொள்கை என்னும் விடயம் நிதி அமைச்சர் தவிர்ந்த அமைச்சர்களுக்குக் குறித்தொதுக்கப் படும் பட்சத்தில் அத்தகைய விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்.

(2) ஒருங்கிணைப்புப் பேரவையானது, அண்மைய பேரண்ட முன்மதியுடைய பொருளாதார அபிவிருத்திகள், வெளிநோக்கு மற்றும் ஆபத்துக்கள் பற்றி தகவல்களைப் பகிர்வதற்கும் கருத்துக்களை பரிமாற்றுவதற்குமென அதன் கூட்டங்களை ஒவ்வொரு காலாண்டும் நடாத்துதல் வேண்டும்.

(3) ஒருங்கிணைப்புப் பேரவையின் தவிசாளர் நிதிசார் துறைப் பங்குபற்றுநர்களிடையே பரம்பல் விளைவுகளுடன் இலங்கையில் நிதிசார் நிலையுறுதிக்குக் குறிப்பிடத்தக்க ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய அல்லது பொருளாதாரச் செயற்பாட்டின்மீது கணிசமானளவு பாதகமான விளைவைக் கொண்டிருப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட ஏதேனும் நிகழ்வு அல்லது சூழ்நிலைபற்றி தகவல்களை பகிர்வதற்கும் கருத்துக்களை பரிமாறுவதற்கும் அவசரகாலக் கூட்டமொன்றுக்காக அழைப்புவிடுத்தல் வேண்டும்.

(4) மத்திய வங்கியானது –

(அ) (2)ஆம் உட்பிரிவின் நோக்கத்துக்கு இயைபான தரவு களையும்; அத்துடன்

(ஆ) பணவீக்கம், பணவகையான நிலைமைகள் மற்றும் அரசிறைத் தொழிற்பாடுகள்மீது அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளின் தாக்கம் தொடர்பாக மத்திய வங்கியின் மதிப்பீட்டையும்,

ஒருங்கிணைப்புப் பேரவையின்முன்னர் இடுதல் வேண்டும்.

(5) ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, ஒருங்கிணைப்புப் பேரவையானது, அரசிறை, பண மற்றும் நிதிசார் நிலையுறுதிக் கொள்கை மீதான முடிபுகளைச் செய்வதற்கு அதிகாரமெதனையும் கொண்டிருத்தலாகாது.

**84.** (1) ஐந்தாம், 6 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, மத்திய வங்கியானது- அரசாங்கத்துடன் ஒத்துழைத்தல்

(அ) அரசாங்கத்துடனும் வேறேதேனும் பகிரங்க அதிகாரசபையுடனும் ஒத்துழைத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பணவகையான வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள், நிதிசார் முறைமை நிலையுறுதி, நெருக்கடித் தடுப்பு மற்றும் நெருக்கடி முகாமையும் அரசிறைக் கருமங்களும் என்பன தொடர்பான கொள்கைகளின்மீது அரசாங்கத்துடனும் வேறேதேனும் பகிரங்க அதிகார சபையுடனும் கருத்துக்களைப் பரிமாறலாம்.

(2) மத்திய வங்கியும் அமைச்சரும் மத்திய வங்கியினதும் அமைச்சினதும் பணிகளைப் பாதிக்கின்ற எல்லாக் கருமங்கள் பற்றியும் ஒருவருக்கொருவர் முழுமையாகத் தெரிவித்துக் கொள்ளுதல் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது, அதன் அபிப்பிராயத்தில் இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியானது குறிக்கோள்களின் எய்துகையைப் பாதிக்கக்கூடிய ஏதேனும் கருமம்பற்றி அரசாங்கத்துக்கு மதியுரையளிக்கலாம்.

நிறுவனங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு

**85**. ஐந்தாம், 6 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, மத்திய வங்கியானது, அதன் குறிக்கோள்களை எய்துவதற்கெனவும் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும், தகவல்களைப் பகிரும், செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் அல்லது அவசியமென அது கருதக்கூடியவாறாக வேறேதேனும் வடிவத்தினதான ஒத்துழைப்பை ஒழுங்கேற்பாடு செய்யும் நோக்குடன், உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஒழுங்குபடுத்தும், மேற்பார்வைசார் அல்லது பண அதிகாரசபைகளுடன் அல்லது பகிரங்கச் சர்வதேச நிதிநிறுவனங்களுடன் ஒத்துழைக்கலாம்.

பணவகையான நிதியளிப்பின் மீதானதடை

**86**. (1) மத்திய வங்கியானது, நேரடியாக அல்லது நேரடியாக வல்லாமல், அரசாங்கத்துக்கு அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான ஏதேனும் பகிரங்க அதிகாரசபைக்கு அல்லது வேறேதேனும் பகிரங்க உருவாக்கத்துக்குக் கடன்களை வழங்குதலாகாது.

(2) மத்திய வங்கியானது, இச்சட்டத்தின் 113 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் மத்திய வங்கியின் பணிகளுடன் தொடர்பட்ட செலவுகளுக்காகத்தவிர, அரசாங்கத்தின் சார்பில் ஏதேனும் செலவுதொகையை உறுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவில் விதிக்கப்பட்ட தடை, அத்தகைய அரசாங்கத்துக்குச் சொந்தமான அல்லது பகிரங்கமுறையில் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட வங்கிகளுக்கு மற்றும் ஆளும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான வேறு நிதிநிறுவனங் களுக்கு ஏற்புடையதாதலாகாது.

(4) மத்திய வங்கியானது, அரசாங்கத்தினால், அரசாங்கத்துக்குச் சொந்தமான ஏதேனும் உருவகத்தினால், அல்லது முதனிலைச் சந்தையிலுள்ள வேறேதேனும் பகிரங்க உருவகத்தினால் வழங்கப் பட்ட பிணையங்களைக் கொள்வனவு செய்தலாகாது. மத்திய வங்கியானது. இரண்டாம்நிலைச் சந்தையிலுள்ள அத்தகைய பிணைங்களை கொள்வனவுசெய்யலாம்; ஆயின், அத்தகைய கொள்வனவுகள், (1)ஆம் உட்பிரிவில் விதிக்கப்பட்ட தடையைச் சூழ்ந்து செயலாற்றுவனவாதலாகாது.

(5) ஓராம், (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அரசாங்கத்தினால் சந்தை நிதியளிப்பை அணுகுவதைக் கணிசமானளவிலும் முக்கியமானவகையிலும் குழப்புகின்ற அல்லது தடைசெய்கின்ற, பொதுமக்கள் பாதுகாப்பினதும் பொது ஒழுங்கமைப்பின் பேணிக்காப்பினதும் நலன்கருதி, (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின்கீழ் பிரகடனமொன்று செய்யப்படுவதன்மேல் அல்லது உலகளாவிய சுகாதார அவசர நிலைமையினதும் நலன் கருதி மத்திய வங்கியானது, பின்வருமிடத்து, ஆரம்பச் சந்தையில் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யலாம்:-

(அ) மத்திய வங்கி, அமைச்சரின் கலந்தாலோசனையுடனும் இச்சட்டத்தின்கீழ் அதன் பணக் கொள்கைக் குறிக்கோள் களுக்கு அமையவும், இவ்வுட்பிரிவின்கீழ் கொள்வனவு செய்யப்படவேண்டிய அத்தகைய திறைசேரி உண்டியல் களின் தொகையையும் நியதிகளையும் விதந்துரைக்கு மிடத்து;

(ஆ) பாராளுமன்றம் அத்தகைய ஒவ்வொரு விதப்புரையும் அங்கீகரிக்குமிடத்து; அத்துடன்

(இ) பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தின்மேல், மத்திய வங்கி அத்தகைய திறைசேரி உண்டியல்களுக்கான காரணங் களையும் அதன் தொகையும் நியதிகளையும் வெளியிடப் படுகின்றவிடத்து:

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவின்கீழ் திறை சேரி உண்டியல்களின் கொள்வனவின் மொத்த தொகை–

(i) முறையான நிதியாண்டுக்காக ஏற்புடையற் பாலவையும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக் கப்பட்டவையுமான திறைசேரி உண்டியல் களின் எல்லையினது ஐந்து சதவீதத்தை விஞ்சுதலாகாது;

(ii) நிலவுகின்ற சந்தை வட்டிவீதங்களில் இருத்தல் வேண்டும்;

(iii) ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலப் பகுதிக்காகத் தற்காலிக அடிப்படையொன் றின்மீது இருத்தல் வேண்டும்;

(iv) முதிர்வின்மீது காசாக மட்டுமே உடனடியாகத் திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும்;

(v) ஆறுமாதங்களை விஞ்சாத முதிர்வுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(vi) மீண்டும் முதலீடு செய்யப்படுதலோ அல்லது புதுப்பிக்கப்படுதலோ ஆகாது.

பாகம் XV

## கடன் வழங்கு தொழிற்பாடுகள்

**87.** (1) மத்திய வங்கியானது, அரசாங்கத்தின் முகவர் என்ற தன்மையில், அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளின்கீழ் மீள்நிதிக் கடன் திட்டங்களையும் மற்றும் வட்டி மானியக் கடன் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தும் நோக்குடன் அரசாங்கத்தின் நிதிகளிலிருந்து- கடன் வழங்கு நிறுவனங்களுடன் கடன் தொழிற்பாடுகள்

(அ) ஏதேனும் கடனை அல்லது முற்பணத்தைச் செலுத்தீடு செய்து அறவிடலாம்;

(ஆ) உத்தரவாதங்களை வழங்கலாம், நட்டோத்தரவாதக் கொடுப்பனவுகளைச் செலுத்தலாம், உரிமைக் கோரிக்கைக்குப்பின்னரான எவையேனும் அறவீடுகளை அறவிடலாம் மற்றும் ஏதேனும் அறவிடமுடியாத மீதியைப் பதிவழிக்கலாம்; அல்லது

(இ) மானியக்கொடைகளையும் வட்டி மானியத்தையும் செலுத்தீடுசெய்யலாம்.

(2) அத்தகைய நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட ஏதேனும் கடன் அல்லது முற்பணம், ஒரு வாக்குறுதிப்பத்திரத்துக்கெதிராக அல்லது பின்வரும் நிபந்தனைகளுக்கமைய அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பிணைப்பொறுப்புக்கெதிராகச் செய்யப்படுதல் வேண்டும்:-

(அ) அக்கடன் அல்லது முற்பணம், அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாகப் பதினைந்தாண்டுகளை விஞ்சாத அத்தகைய காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படற்பாலதென்றும்;

(ஆ) கடன் அல்லது முற்பணம் மத்திய வங்கிக்கு மீளச்செலுத்தப்படுதலானது, மத்திய வங்கிக்கு அதன் கடன்பெறுநர்களினால் அத்தகைய நோக்கம் தொடர்பில் அத்தகைய நிறுவனத்துக்குச் சேர்மதியாகவுள்ள தனிசுகளின் அடைமானம் என்றவகையாக அதற்குச் சாட்டுதல் செய்யப்படுவதன்மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றதென்றும்; அத்துடன்

(இ) அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு அத்தகைய கடன் அல்லது முற்பணத்தின்மீதான வட்டிவீதமுட்பட்ட அத்தகைய வேறு நிபந்தனைகள்.

(3) மத்திய வங்கி, அமைச்சரின் கலந்தாலோசனையுடன், கடன் நிறுவனங்களின் கடன்கள் எந்த நோக்கங்களுக்காகப் பொதுவாக ஒதுக்கப்படுகின்றனவோ அந்த நோக்கங்களுக்காக, அல்லது அத்தகைய நிறுவனங்களின் கடன்கொள்கையைப் பாதிக்கின்ற அல்லது அதனுடன் சம்மந்தப்பட்ட வேறெவையேனும் கருமங்கள் தொடர்பாக, அரசாங்கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட நிதிகளிலிருந்து கடன்கள் அல்லது முற்பணங்கள் எந்த நியதிநிபந்தனைகளுக்கமைய இவற்றுக்குக் கிடைக்கக்கூடியனவாக்கப்படுமோ அந்த நியதிநிபந்தனைகளை விதித்துரைத்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் மத்திய வங்கிக்குத் தனிசுகளின் ஒரு சாட்டுதலானது, ஆளும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இருக்கவேண்டியவொரு சாதனத்தின்மூலம் பயனுறுத்தப்படுதல் வேண்டும்.

(5) மத்திய வங்கியானது, ஒரு சாட்டுதல் நிறைவேற்றப்பட்டதன்மீது, அவ்வாறு சாட்டுதல் செய்யப்பட்ட தனிசுகளின்மீது, முதற்பொறுப்பொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பயனுறுதல் வேண்டும்.

முத்திரைத் தீர்வை

**88.** இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் மத்திய வங்கிக்கு அடைமானம் என்றவகையாகத் தனிசின் சாட்டுதல்பற்றிய ஏதேனும் சாதனத்தின்மீது அல்லது அது தொடர்பில் முத்திரைத் தீர்வையெதுவும் விதிக்கப்படற்பாலதாதலாகாது அல்லது செலுத்தப்படற்பாலதாதலாகாது.

சாட்டுதல்பற்றிய சாதனத்தைப் பதிவுசெய்தல்

**89.** இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் மத்திய வங்கிக்கான சாட்டுதல்பற்றிய சாதனமெதுவும், (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்களைப் பதிவுசெய்தல் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுவதற்குத் தேவைப்படுதலாகாது.

மோசடிகளைத் தடுத்தற் கட்டளைச் சட்டத்தின் ஏற்புடைமை

**90.** சாட்டுதலெதுவும், (70 ஆம் அத்தியாயமான) மோசடிகளைத் தடுத்தற் கட்டளைச்சட்டத்தின் 2ஆம் பிரிவினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக உரிமமளிக்கப்பட்ட பிரசித்த நொத்தாரிசு மற்றும் சாட்சிகளின் முன்னர் நிறைவேற்றப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

பொருள் கோடல்

**91.** இச்சட்டத்தின் இப்பாகத்தில் –

"சாட்டுதல்" என்பது, அடைமானம் என்ற வகையிலானவொரு சாட்டுதல் என்று பொருளாகும்; அத்துடன்

"கடன் வழங்கு நிறுவனம்" என்பது, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வங்கி என்று பொருளாகும்.

## பாகம் XVI

## நிதியேற்பாடுகள்

கணக்கீட்டு நியமங்கள்

**92.** நிதிசார் அறிக்கையிடுதற் கட்டுக்கோப்பும், கணக்கீட்டுக் கொள்கைகளும் நடவடிக்கைமுறைகளும், ஆளும் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, சர்வதேசரீதியில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிதிசார் அறிக்கையிடுதற் கட்டுக்கோப்புக்கு இணங்கவிருத்தல் வேண்டும்.

நிதியாண்டு

**93.** மத்திய வங்கியின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

ஒதுக்குக் கணக்குகள்

**94.** (1) மத்திய வங்கியானது ஒரு பொது ஒதுக்குக் கணக்கைத் தாபித்தலும் பேணுதலும் வேண்டும்.

(2) வைத்திருக்கப்பட்ட உழைப்புக்கள் எதிர்மறையாக வந்தால் அதற்குக் கைமாற்றுவதற்கான நோக்கங்களுக்காகத் தவிர, பொது ஒதுக்குக் கணக்கு வேறெவையேனும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாகாது.

(3) மத்திய வங்கியானது, இலாபங்களைப் பகிர்ந்தளிக்குமுன்னர், ஆளும் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு சர்வதேசரீதியில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட நிதிசார் அறிக்கையிடுதற் கட்டுக்கோப்புக் கிணங்க வருமானக்கூற்றில் பதியப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள், தங்கம், நிதிசார் சாதனங்கள் மற்றும் வேறு நிதிசார் சொத்துக்களில் அதன் நிலைமைகள் காரணமாகச் செலாவணி வீதங்களிலிருந்து எழுகின்ற தேறிப்பெறப்படாத ஈட்டுகைகளையும் இழப்புக்களையும் சந்தைவிலை மீள்பெறுமானமதிப்பீட்டிலிருந்து எழுகின்ற தேறிப் பெறப்படாத ஈட்டுகைகளையும் பதிவதற்கு விசேட ஒதுக்குக் கணக்குகளைத் தாபித்தல் வேண்டும்.

இலாபங்கள், நட்டங்கள் மற்றும் பகிர்ந்தளிக்கத்தகு உழைப்புக்கள்

**95.** (1) ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவுக்குப்பின்னர் நாற்பத்தைந்து நாட்கள் முடிவுறுமுன்னர், மத்திய வங்கியானது அதன் தேறிய இலாபங்களை அல்லது நட்டங்களை மற்றும் பகிர்ந்தளிக்கத்தகு உழைப்புக்களைத் தீர்மானித்தல் வேண்டும்.

(2) (அ) பகிர்ந்தளிப்புக்காகக் கிடைக்கக்கூடியனவான உழைப்புக்கள், விலை மீள்பெறுமானமதிப்பீடுகளிலிருந்து எழுகின்ற தேறிப்பெறப்படாத மீள்பெறுமானமதிப்பீட்டு ஈட்டுகைகளினதும் செலாவணி வீதங்களிலிருந்து எழுகின்ற தேறிப்பெறப்படாத மீள்பெறுமானமதிப்பீட்டு ஈட்டுகைகளினதும் இழப்புக்களினதும் மொத்தத் தொகையை வரிக்குப்பின்னர் தேறிய இலாபங்களிலிருந்து கழிப்பதன்மூலமும், முறையான தேறிப்பெறப்படாத மீள்பெறுமானமதிப்பீட்டு ஒதுக்குக் கணக்குகளுக்குச் சமமானவொரு தொகையைக் குறித்தொதுக்குவதன்மூலமும் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) செலாவணி வீதங்களிலிருந்து எழுகின்ற தேறிப்பெறப்படாத மீள்பெறுமான மதிப்பீட்டு இழப்புக்கள், அத்தகைய மீள்பெறுமான மதிப்பீடு ஒதுக்குக் கணக்கில் பூச்சியம் மீதி இருக்கும்வரை முறையான தேறிப்பெறப்படாத மீள்பெறுமான மதிப்பீட்டு ஒதுக்குக் கணக்குக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும்; அதன்பின்னர் இந்த இழப்புக்கள் வைத்திருக்கப்பட்ட உழைப்புக்களினால் மேவப் படுதல் வேண்டும்.

*பகிர்ந்தளிக்கத் தகு உழைப்புக்களை குறித்தொதுக்குதல்*

**96.** (1) ஒவ்வொரு நிதியாண்டிலும் முடிவுக்குப்பின்னர் அறுபது நாட்கள் முடிவுறுவதற்குமுன்னர், ஆளும் சபை, அத்தகைய நிதியாண்டின் வருமானக் கூற்று, நிதிநிலைமைக் கூற்று, பண ஓட்டங்கள் பற்றிய கூற்று மற்றும் ஒப்புரவிலான மாற்றங்கள் பற்றிய கூற்று என்பவற்றின் அடிப்படையில், பின்வரும் ஏற்பாடுகளுக் கிணங்க பகிர்ந்தளிக்கத்தகு உழைப்புக்களைக் குறித்தொதுக்குதல் வேண்டும் :-

(அ) முதலாவதாக – தகுதியானவையென ஆளும் சபை கருதக்கூடியவாறான அத்தகைய நோக்கங்களுக்காக விசேட ஒதுக்குகளைத் தாபிக்கலாம்;

(ஆ) இரண்டாவதாக – முன்னைய ஏற்பாட்டைப் பின்பற்றி விசேட ஒதுக்குகளுக்குக் குறித்தொதுக்கப்பட்டபின்னர் எஞ்சியுள்ள பகிர்ந்தளிக்கத்தகு உழைப்புக்களின் நூறு சதவீதத்துக்குச் சமமானவொரு தொகை, செலுத்தப்பட்ட மூலத்தினதும் பொது ஒதுக்கினதும் பணத்தொகை மத்திய வங்கியின் மொத்தப் பணவகையான பொறுப்புக்களின் ஆகக்குறைந்தது ஆறு சதவீதமாகவே னும் இருக்கும்வரை பொது ஒதுக்குக் கணக்குக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) மூன்றாவதாக – முற்போந்த ஏற்பாடுகளுக்கு இணங்கி யொழுகியபின்னர் எஞ்சியுள்ள எவையேனும் பகிர்ந்தளிக் கத்தகு உழைப்புக்கள், அமைச்சரின் கலந்தாலோசனை யுடன், ஆளும் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு, ஒன்றில் நிதியாண்டின் முடிவிலுள்ளவாறாக வருமதி

யான மத்திய வங்கிக்கான எவையேனும் நிலுவையாக வுள்ள அரசாங்க கடப்பாடுகளை ஒழித்துக்கட்டுவதில் பயன்படுத்தப்படுதல் வேண்டும் அல்லது திரட்டு நிதியத்துக்குச் செலுத்தப்பட்டு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகத்தவிர, பகிர்ந்தளிப்பெதுவும் செய்யப்படுதலாகாது.

மூலதனத்திலான பற்றாக் குறையை மேவுதல்

**97**. மத்திய வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த நிதிக்கூற்றுக்கள், அதன் சொத்துக்களின் பெறுமதி அதன் பணவகையான பொறுப்புக்களினதும் செலுத்தப்பட்ட மூலதனத் தினதும் பணத்தொகைக்குக் குறைவாகவுள்ளதெனப் பிரதிபலிக்கும் பட்சத்தில் -

(அ) மத்திய வங்கியானது, முப்பது நாட்களை விஞ்சாதவொரு காலப்பகுதியினுள் நிலைமையை மதிப்பீடு செய்து பற்றாக்குறைக்கான காரணங்களையும் அளவையும்பற்றி அறிக்கையொன்றைத் தயாரித்து நிலைமையை மதிப்பீடு செய்தல் வேண்டும்;

(ஆ) பந்தி (அ) வின்கீழ் தயாரிக்கப்பட்ட அறிக்கையை ஆளும் சபை அங்கீகரிக்கும் பட்சத்தில், மத்திய வங்கியானது, மூலதனத்தை சீர்குலையாத மட்டத்துக்கு மீட்டெடுக்கும் நோக்குடன் பற்றாக்குறையைப் பரிகரிப்பதற்கு அரசாங்கத்தினால் மூலதன உதவுதொகையொன்று அளிக்கப்படுவதற்காக அமைச்சரைக் கோருதல் வேண்டும்; அத்துடன்

(இ) அமைச்சர், (ஆ) என்னும் பந்தியின்கீழ் விடுக்கப்பட்ட கோரிக்கையின்மேல், அமைச்சரானவர், அவசியமான தொகையை நாணயமாக அல்லது சந்தையுடன் தொடர்புபட்ட நிலவுகின்ற வட்டிவீதங்களில் வழங்கப் பட்ட குறித்துரைக்கப்பட்ட முதிர்ச்சியுடனான கைமாற்றத் தகு தனிசுச் சாதனங்களில் மத்திய வங்கிக்குக் கைமாற்று வதற்குப் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை நாடலாம்.

**98.** மத்திய வங்கியானது, அடுத்தவரும் மாதத்தின் கடைசி நாளுக்கு முன்னர் ஒவ்வொரு மாதத்திலும் கடைசி நாளன்றுள்ள வாறான அதன் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் அளவையும் அமைப்பையும் காட்டுகின்ற பொது ஐந்தொகை யொன்றை வெளியிடுதல் வேண்டும். மத்திய வங்கியின் ஐந்தொகை

**99.** (1) மத்திய வங்கியானது, ஒரு நிதியாண்டுக்கான நிதிசார் கூற்றுக்களைத் தயாரித்தல் வேண்டும். வருடாந்த நிதிக் கூற்றுக்கள்

(2) ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்தபின்னர் நான்கு மாதங்களினுள், மத்திய வங்கியானது, ஆளும் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவையும், மத்திய வங்கியின் ஆளுநரினாலும் பிரதான கணக்காளரினாலும் கையொப்பமிடப்பட்டவையும், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப் பட்டவையுமான நிதிசார் கூற்றுக்களை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) நிதிசார் கூற்றுக்களானவை, பாரளுமன்றம் அப்போது அமர்விருப்பின் அமைச்சரினால் அவை பெறப்பட்ட பின்னர் பதினான்கு நாட்களினுள் அல்லது பாராளுமன்றம் அமர்வில் இராதிருப்பின், அடுத்துப்பின்னர் அமர்வு தொடங்கியபின்னர் பதினான்கு நாட்களினுள், பாராளுமன்றத்தின்முன்னர் இடப் படுதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழான தேவைப்பாடுகள் பூர்த்திசெய் யப்பட்டதன்மேல், மத்திய வங்கியின் நிதிசார் கூற்றுக்களை வெளியிடுதல் வேண்டும்.

**100.** (1) ஒவ்வொரு நிதியாண்டும் தொடங்குமுன்னர், ஆளும் சபை, மத்திய வங்கியின் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தை அங்கீகரித்தல் வேண்டும். வரவுசெலவுத் திட்டம்

(2) மத்திய வங்கியினால் தோற்றுவிக்கப்படுவதற்கு புறத்தெறியப் பட்ட அல்லது ஏதேனும் மூலத்திலிருந்து மத்திய வங்கிக்கு அளிக்கப்பட்ட எல்லா அரசிறைகளும் வருமானமும் தேய்மானமும் இழப்புகளுக்கான ஏற்பாடுகளுமுட்பட, புறத்தெறியப்பட்ட செலவினங்களுடன்சேர்த்து, வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(3) ஆளும் சபை, வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தை நடை முறைப்படுத்துவதற்காக விதிகளை ஆக்குதல் வேண்டும்.

பாகம் XVII

**உள்ளக மற்றும் வெளியகக் கணக்காய்வுகள்**

*மத்திய வங்கியின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல்*

**101.** (1) மத்திய வங்கியின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வுசெய்யப்படுதல் வேண்டும்.

(2) கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசியக் கணக்காய்வு அலுவலகத்தின் எவரேனும் அலுவலர் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட வேறெவரேனும் கணக்காய்வாளர், எல்லா நேரங்களிலும், மத்திய வங்கியின் கணக்குகளையும் அத்தகைய கணக்குகளுடன் சம்பந்தப்பட்ட கருமங்கள் தொடர்பிலான தகவல்களைக் கொண்டுள்ள எல்லாப் புத்தகங்களையும் பார்வையிடுவதற்கும் பரிசோதனைசெய்வதற்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) கணக்காய்வாளர் தலைமையதிபதி, கணக்காய்விலிருந்து எழுகின்ற பிரதான அக்கறைகள் பற்றியும் குறிப்பாக நிதிசார் அறிக்கையிடுதல் நடைமுறை தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடுகளிலான முக்கிய பலவீனங்கள் பற்றியும் மத்திய வங்கியின் ஆளுநருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(4) கணக்காய்வாளர் தலைமையதிபதி மத்திய வங்கியின் கணக்குகள்மீதான அபிப்பிராயமொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், அவர் அத்தகைய அபிப்பிராயத்தைப் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதலும் வேண்டும். கண்காய்வாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயம், மத்திய வங்கியின் வருடாந்தக் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்களுடன் சேர்த்து வெளியிடப்படுதல் வேண்டும்.

*பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் நியமனம்*

**102.** (1) (இச்சட்டத்தில் "பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மத்திய வங்கியின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் ஆளும் சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், கணக்கியல் அல்லது கணக்காய்வுத் துறையில் கணிசமானளவு உயர்தொழில்சார் தகைமைகளை மற்றும் அனுபவத்தைக்கொண்ட ஆளொருவராக இருத்தல் வேண்டும்.

(3) பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், ஐந்தாண்டு காலத்துக்கு நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், ஆளும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், ஆளெவரும், பத்தாண்டுகளுக்கு மேற்பட பிரதான உள்ளகக் கணக்காய்வாளராகச் சேவையாற்றுதலாகாது.

(4) பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் 17 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் பந்தி (ஐ) தவிர, (அ) முதல் (க) வரையிலான பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தகைமையீனத்துக்கு அமைந்தவராகவுள்ளாரென ஆளும் சபை திருப்திப்படின், அத்தகைய பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், ஆளும் சபையின் முடிபொன்றின்மூலம் அகற்றப்படுதல் வேண்டும்.

(5) ஆளும் சபையானது, சர்வதேச உயர்தொழில்சார் செயல்முறைகள் கட்டுக்கோப்புக்கிணங்க மத்திய வங்கியின் கணக்காய்வுப் பட்டயத்திலுள்ள உள்ளகக் கணக்காய்வின் நோக்கெல்லையையும், நியதிகளையும், நிபந்தனைகளையும் வரையறுத்துக்கூறுதல் வேண்டும்.

(6) பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் அல்லது அது தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் அலுவலரொருவர், இச்சட்டத்தின்கீழ் அல்லது ஆளும் சபையினால் குறிப்பாகப் பணிக்கப்படக்கூடியவாறாக அவரது தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும், எவரேனும் வெளிவாரித் திறத்தவரிடமிருந்து அல்லது உருவகத்திடமிருந்து மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் ஆவணம், தகவல் அல்லது பதிவேடு உட்பட, மத்திய வங்கியினாற் பொறுப்பேற்கப்பட்ட ஏதேனும் செயற்பாடு அல்லது கொடுக்கல் வாங்கல் பற்றிய ஏதேனும் ஆவணம், தகவல் அல்லது பதிவேட்டைப் பார்வையிடுவதற்கும், கட்டுக்காப்பினுள் எடுப்பதற்கும் அல்லது பெற்றுக்கொள்வதற்கும் உரித்துடையவராதல் வேண்டுமென்பதுடன் ஆளும் சபையினால் வேறுவகையாக முடிபுசெய்யப்பட்டாலொழிய,

பிரதான உள்ளகக் கணக்காய்வாளரினால் அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் அறிவிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவது மத்திய வங்கியின் எல்லா அலுவலர்களினதும் ஊழியர்களினதும் கடமையாதலும் வேண்டும்.

(7) மத்திய வங்கியின் உள்ளக கண்காய்வறிக்கைகள் கணக்காய் வாளர் தலைமையதிபதி அல்லது ஆளும் சபையினால் அதிகார மளிக்கப்பட்ட ஆளொருவர் தவிர்ந்த எவரேனுமாளுடன் பகிரப்படு தலாகாது.

கணக்காய்வுக்குழு

**103.** (1) ஆளும் சபையினால் பெயர்குறித்துநியமிக்கப்படக் கூடியவாறான 8 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியைப் பின்பற்றி நியமிக்கப்பட்ட ஆளும் சபையின் உறுப்பினர் களில் அத்தகைய எண்ணிக்கையான ஆளும் சபையின் உறுப்பினர்களைக் கொண்டுள்ளதும் (இச்சட்டத்தில் "கணக்காய்வுக் குழு" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) மத்திய வங்கியின் கணக்காய்வுக் குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) (அ) கணக்கியல் அல்லது கணக்காய்வுசெய்தல் என்ற துறையில் பரந்த அனுபவமுடைய ஆளும் சபையின் ஆகக்குறைந்தது ஓர் உறுப்பினரேனும் இல்லாதபோது, அத்தகைய துறையில் பரந்த அனுபவமுடைய நிபுணரொருவர் ஆளும் சபையினால் கணக்காய்வுக் குழுவின் மேலதிக உறுப்பினரொருவராக நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிபுணரானவர், கணக்காய்வுக் குழுவின் உறுப்பினரொருவ ரென்ற தன்மையில் நியமிக்கப்படும் தேதிக்கு நேர்முற்போந்த மூன்றாண்டு காலப்பகுதியின்போது ஆளும் சபையின் உறுப்பினரொருவராகவோ அல்லது மத்திய வங்கியின் ஊழிய ரொருவராகவோ இருந்திருத்தலாகாது.

(3) உட்பிரிவு (2) இன் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட நிபுணரொருவர், அத்தகைய நிபுணர் 17 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமையீனங்களுள்

எவற்றுக்கும் அமைந்தவராகவுள்ளாரென ஆளும் சபை திருப்திப் படின், ஆளும் சபையின் முடிபொன்றின்மூலம் அகற்றப்படுதல் வேண்டும்.

(4) கணக்காய்வுக் குழுவின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) உள்ளகக் கணக்காய்வுப் பணியை மேல்நோக்குதல்;

(ஆ) பிரதான உள்ளகக் கணக்காய்வாளரினால் வழங்கப்பட்ட முடிவெடுப்புக்களுடனும் விதப்புரைகளுடனும் இணங்கியொழுகுவதனைக் கண்காணித்தல்;

(இ) கணக்காய்வாளர்களின் முடிவெடுப்புக்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு அவர்களைச் சந்தித்தல்; அத்துடன்

(ஈ) வருடாந்த நிதிசார் கூற்றுக்களைக் கணக்காய்வாளர்களுடன் மீளாய்வுசெய்தல்.

(5) கணக்காய்வுக் குழு ஆளும் சபைக்கு நான்கு மாதங்களுக்கொரு தடவை அறிக்கையிடுதல் வேண்டும்.

(6) இரண்டாம் உட்பிரிவிற்கமைய, ஆளும் சபை, மத்திய வங்கியின் கணக்காய்வுப் பட்டயத்தில் கணக்காய்வுக் குழுவின் அமைப்பையும் மற்றும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் வரையறுத்துக்கூறுதல் வேண்டும்.

## பாகம் XVIII

## பொது ஏற்பாடுகள்

*அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையை ஆதரிப்பதற்கு மத்திய வங்கியின் கடமை*

**104.** மத்திய வங்கியானது, 6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, இலங்கையின் உற்பத்தித்திறன்சார் மூலவளங்களின் அபிவிருத்தியை ஊக்குவிக்கும் மற்றும் மேம்படுத்தும் நோக்குடன் ஏதேனும் சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக அரசாங்கத்தின் பொதுவான பொருளாதாரக் கொள்கைக் கட்டுக்கோப்பை ஆதரித்தல் வேண்டும்.

ஒழுங்குபடுத்தும் சாதனங்கள்

**105.** (1) இச்சட்டத்தினால் அல்லது இதன் கீழ் அல்லது வேறேதேனும் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் மத்திய வங்கிக்குப் பொறுப்பிக்கப்பட்ட தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய விதிகளை ஆக்குவதற்கு அல்லது அத்தகைய பணிப்புகளை வழங்குவதற்கு மத்திய வங்கி தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) மத்திய வங்கியினால் ஆக்கப்பட்டவொரு விதி பொது ஏற்புடைமையைக் கொண்டிருத்தல் வேண்டும். அது முழுமையாகக் பிணிப்பதாதலும் நேரடியாக ஏற்புடையற்பாலதுமாதல் வேண்டும்.

(3) மத்திய வங்கியினால் வழங்கப்பட்டவொரு பணிப்பானது அதன் பெறுநரை மட்டுமே பிணிப்பதாதல் வேண்டும்.

விதிகள் மற்றும் பணிப்புக்களை வெளியிடுதல்

**106.** (1) இச்சட்டத்தின் மத்திய வங்கியினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் அல்லது கட்டளையும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் விதி அல்லது கட்டளைதவிர, அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய விதி அல்லது கட்டளை குறித்துரைக்கவேண்டிய அத்தகைய பிந்திய தேதியன்று வலுவுக்குவருதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான வெளியீட்டின்மேல், எந்த விதியின் அல்லது கட்டளையின் மீறுகை அல்லது அதனோடு இணங்கியொழுகத் தவறுகின்றமை குற்றவியல் தடைவிதிப்பை உட்படுத்துகின்றதோ அந்த ஒவ்வொரு விதியும் அல்லது கட்டளையும், வெளியீட்டுத்தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும். அத்தகைய விதி அல்லது கட்டளை எத்தேதியன்று பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுகின்றதோ அத்தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது அதன் வெளியிடப்பட்ட விதிகளும் பணிப்புக்களும் பற்றிய பொது இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்.

நிருவாக வழிமுறைகள்

**107.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் விதியை, பணிப்பை அல்லது முடிபை மீறுகின்ற எவரேனுமாளின்மீது மத்திய வங்கி நிருவாக வழிமுறைகளை எடுக்கலாம்.

(2) மத்திய வங்கியானது, ஆளொருவருக்கெதிராக எவையேனும் நிருவாக வழிமுறைகளை எடுக்குமுன்னர், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட மீறுகை தொடர்பான முக்கிய எல்லா நிகழ்வுகளையும் வழங்கி, கேட்கப்படுவதற்கான போதிய வாய்ப் பொன்றை அளித்தல் வேண்டும்.

(3)(அ) நிருவாக வழிமுறைகளை விதித்தல் தொடர்பில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையைக் குறித்துரைக்கின்ற விதிகளை மத்திய வங்கி ஆக்குதல் வேண்டும்.

(ஆ) நிருவாக குற்றப்பணங்களின் விடயத்தில், நிருவாக குற்றப்பணங்களின் தொகை ஆளும் சபையினால் விதித்துரைக்கப் படுதல் வேண்டும்.

(இ) இவ்வுட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின்முன்னர் இடப்படுதல் வேண்டும்.

(ஈ) இவ்வுட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதி ஒவ்வொன்றும், அத்தகைய விதி எத்தேதியன்று பாராளுமன்றத்தினால் அங்கீகரிக் கப்படுகின்றதோ அத்தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும்.

(4) நிருவாக வழிமுறைகளை விதிப்பதா மற்றும் அத்தகைய வழிமுறைகளின் அளவு என்பவற்றைத் தீர்மானிப்பதில் மத்திய வங்கி பின்வருவனவற்றைக் கவனத்துட்கொள்ளுதல் வேண் டும்:-

(அ) மீறுகையின் பாரதூரமானதன்மையும் அத்தகைய மீறுகை மீண்டும் மீண்டும் நிகழ்கின்றதாவென்பதும்;

(ஆ) அத்தகைய மீறுகை காரணமாக வைப்பாளர்களுக்கு அல்லது வேறெவரேனுமாளுக்கு ஏதேனும் இழப்பு அல்லது சேதம் விளைவிக்கப்படுகின்றதாவென்பது;

(இ) எந்த ஆளுக்கெதிராகத் தண்டமொன்று விதிக்கப்படவுள்ளதோ அந்த ஆள் அத்தகைய மீறுகையிலிருந்து தகாதமுறையில் நன்மைபெறுகின்றாராவென்பது;

(ஈ) அத்தகைய ஆளின் நிதிசார் மூலவளங்கள்;

(உ) எவையேனும் தணிக்கின்ற காரணிகள்; அத்துடன்

(ஊ) அதன் தற்றுணிபின்படி இயைபானவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய வேறு கருமங்கள்.

(5) ஏதேனும் எழுத்திலான அல்லது வேறு சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது விடுக்கப்பட்ட ஏதேனும் விதியை, கட்டளையை அல்லது பணிப்பை நிறைவேற்றுவதில் அல்லது அதற்கிணங்கியொழுகுவதில் வேறெவரேனுமாளினால் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும்செயல் அல்லது காரியத்தின் விளைவாக அத்தகைய ஆளினால் அடையப்பட்ட அல்லது உறப்பட்ட அல்லது அடையப்பட்டதாக அல்லது உறப்பட்டதாக சார்த்தப்பட்ட ஏதேனும் இழப்பு அல்லது சேதம் தொடர்பில் ஆளெவரும் பொறுப்பாதலாகாது அல்லது ஏதேனும் நீதிமன்றத்திலான ஏதேனும் வழக்குக்கு அல்லது வழக்கு நடவடிக்கைகளுக்கு அமைந்தவராதலாகாது.

(6) இப்பிரிவின் நோக்கத்துக்காக, "நிருவாக வழிமுறைகள்" என்பது, நிருவாக குற்றப்பணங்கள், எழுத்திலான எச்சரிக்கைகள் அல்லது கட்டளைகள், நிதிநிறுவனங்களின் நிருவாகிகளினது இடைநிறுத்துகை மற்றும் பதவிநீக்கம், உரிமங்களை இல்லாதொழித்தல் மற்றும் இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான வேறு வழிமுறைகள் என்பவற்றை உள்ளடக்கும்.

ஒரு வங்கித்தொழில் நிறுவனத்தின் தொழிலை இடைநிறுத்துவதற்கு அல்லது மட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கிக்குள்ள தத்துவம்

**108.** (1) ஏதேனும் வங்கித்தொழில் நிறுவனம் கடனிறுக்க வகையற்றதாகவுள்ளது அல்லது அதன் வைப்பாளர்களின் கோரிக்கைகளை எதிர்கொள்வதற்கு இயலாததாக வரக்கூடியதாகவுள்ளது, அல்லது அது தொழிலில் தொடர்ந்திருத்தலானது அதன் வைப்பாளர்களுக்கு அல்லது கடன்கொடுத்தோருக்கு இழப்பை ஏற்படுத்தக்கூடியதாகவுள்ளது என மத்திய வங்கியின் ஊழியரொருவர் அல்லது மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட தகைமைபெற்ற ஆள், ஏதேனும் வங்கித்தொழில் நிறுவனத்தின் அலுவல்களை நேரடியாக அல்லது எவரேனும் பரிசோதகர் மூலமாகப் பரிசோதனைசெய்தபின்னர் அல்லது வங்கித்தொழில் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தகவலின்மேல் திருப்திப்படுமிடத்து, மத்திய வங்கியின் ஊழியர் அல்லது மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட தகைமைபெற்ற ஆள், மத்திய வங்கிக்குச் சமர்ப்பிப்பதற்காக மத்திய வங்கியின் ஆளுநருக்கு அதற்கிணங்க அறிக்கையொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) மத்திய வங்கியானது, நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் மீளாய்வுசெய்ததன்மேல், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக நடவடிக்கையெடுக்கப்படவேண்டுமென அபிப்பிராயப்படுமிடத்து, மத்திய வங்கி, இலங்கையில் தொழிலை உடனடியாக இடைநிறுத்தும்படி வங்கித்தொழில் நிறுவனத்தைப் பணிக்கின்றதும் வங்கித்தொழில் நிறுவனத்தின் எல்லாப் புத்தகங்களையும், பதிவேடுகளையும், சொத்துக்களையும் பொறுப்பெடுக்கும்படியும் வங்கித்தொழில் நிறுவனத்தினால் தொழில் தொடர்ந்து நடாத்தப்படுவதனைத் தடுப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுக்கும்படியும் மத்திய வங்கியின் ஊழியரொருவரை அல்லது மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட தகைமைபெற்ற ஆளைப் பணிக்கின்றதுமான கட்டளையை ஆக்கலாம்.

(3) அரசியலமைப்பின் 126 ஆம் மற்றும் 140 ஆம் உறுப்புரைகளின் ஏற்பாடுகளுக்கமைய (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின் மீளாய்வை அல்லது இல்லாதொழிப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக அல்லது அத்தகைய கட்டளையின் காரணமாக உறப்பட்ட அல்லது உறப்படக்கூடிய அல்லது உறப்படுவதாகச் சார்த்தப்பட்ட ஏதேனும் இழப்பு அல்லது சேதம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(4) ஏதேனும் வங்கித்தொழில் நிறுவனம் தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் மத்திய வங்கியினால் ஆக்கப்பட்ட கட்டளை யொன்று, அது ஆக்கப்படும் தேதியிலிருந்து ஆறுமாத காலப் பகுதியொன்று முடிவுறுவதன்மேல் பயனில்லாதொழிதல் வேண்டுமென்பதுடன், செயல்முறைக்குகந்தவரை விரைவாகவும் எப்பட்சத்திலும் சொல்லப்பட்ட காலப்பகுதி முடிவுறுமுன்னரும் பின்வருவனவற்றைச் செய்தல் மத்திய வங்கியின் கடமையாதல் வேண்டும்:-

(அ) ஒன்றில் நிபந்தனையின்றியோ அல்லது பொதுமக்கள் நலன்கருதி அல்லது வங்கித்தொழில் நிறுவனத்தின் வைப்பாளர்களினதும் ஏனைய கடன்கொடுத்தோரி னதும் நலன்கருதி மத்திய வங்கி அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக் கமையவோ, தொழிலை மீளத்தொடங்குவதற்கு வங்கித் தொழில் நிறுவனத்துக்கு அனுமதியளிக்கின்ற கட்டளையை ஆக்குதல்; அல்லது

(ஆ) வங்கித்தொழில் நிறுவனத்தை ஒடுக்குவதற்காக அதற்கென ஏற்புடையற்பாலதாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய எழுத்திலான சட்டத்தின்கீழ் தகுதிவாய்ந்த நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யும்படி மத்திய வங்கியின் ஊழியரொருவரை அல்லது மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட தகைமைபெற்ற ஆளைச் செய்வித்தல்; அல்லது

(இ) இலங்கைக்குவெளியே கூட்டிணைக்கப்பட்டதான வங்கித் தொழில் நிறுவனமொன்றின் ஒரு கிளையின் அலுவல் களை ஒடுக்குவதற்கு, தகுதிவாய்ந்த நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யும்படி மத்திய வங்கியின் ஊழிய ரொருவரை அல்லது மத்திய வங்கியினால் அதிகார மளிக்கப்பட்ட தகைமைபெற்ற ஆளைச் செய்வித்தல்.

(5) கட்டளையொன்றிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய ஏதேனும் வங்கித்தொழில் நிறுவனத்தினால் தொழில் மீளத்தொடங்கப்படுவதனை அனுமதிக்

கின்ற அக்கட்டளை (4) ஆம் உட்பிரிவின்கீழ் வங்கித்தொழில் நிறுவனத்தினால் அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது, அக்கட்டளை வலுவிலிருக்கையில் எந்நேரத்திலும், நிபந்தயின்றி வங்கித்தொழில் நிறுவனமானது தொழிலை மீளத் தொடங்வதனை அனுமதிக்கின்ற அல்லது நீதிமன்றம் தீர்மானிக்கக்கூடியவாறான முறையில் மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் அல்லது எல்லா நிபந்தனைகளையும் வேறுபடுத்துகின்ற அல்லது மாற்றுகின்ற கட்டளையொன்றைச் செய்யலாம்; அத்துடன் அத்தகைய ஏதேனும் கட்டளை, (4) ஆம் உட்பிரிவின்கீழ் மத்திய வங்கியினால் ஆக்கப்பட்ட அக்கட்டளையிலுள்ள எது எவ்வாறிருப்பினும், பயனுறுதல் வேண்டும்.

(6) மத்திய வங்கியின் ஊழியரொருவரை அல்லது மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட தகைமைபெற்ற ஆள் அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்துக்கான பிரதிவாதியாகப் பெயர்குறிப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் கேட்பில் மத்திய வங்கியின் சார்பில் கேட்கப்படுவதற்கும் சான்றளிப்பதற் கும் உரித்துடையதாதலும் வேண்டும்.

(7) ஏதேனும் வங்கித்தொழில் நிறுவகத்தை ஒடுக்குவதற்காக (4) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாக மத்திய வங்கியின் ஊழியரொருவரினால் அல்லது மத்திய வங்கியினால் அதிகார மளிக்கப்பட்ட தகைமைபெற்ற ஆளினால் விண்ணப்பமொன்று செய்யப்படுமிடத்து,-

(அ) வங்கித்தொழில் நிறுவனமானது விண்ணப்பம் முடிவுறாதிருக்கும்போது, தொழில் கொண்டுநடாத்தும் படி நீதிமன்றத்தினால் அதிகாரமளிக்கப்பட்டாலொழிய வும் மற்றும் நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நிபந்தனைகள் எவையேனுமிருப் பின் அவற்றுக்கமையவன்றியும், அவ்வாறு செய்தலா காது; அத்துடன்

(ஆ) வங்கித்தொழில் நிறுவனமானது கடனிறுக்கவகையற்ற தென நீதிமன்றம் அவசியமென அது கருதக்கூடிய வாறான அத்தகைய விசாரணையின் பின்னர் அபிப்பிராயப்படின், ஒன்றில் நிபந்தனையின்றியோ

அல்லது பொதுமக்களின் நலன்கருதி அல்லது வங்கித் தொழில் நிறுவனத்தின் வைப்பாளர்களினதும் ஏனைய கடன்கொடுத்தோரினதும் நலன் கருதி நீதிமன்றம் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவோ தொழிலை மீளத்தொடங் கும்படி வங்கித்தொழில் நிறுவனத்துக்கு அனுமதி யளிக்கின்ற கட்டளையொன்றைச் செய்யலாம்.

(8) இப்பிரிவின்கீழ் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான மேன்முறையீடொன்றுக்கு அமைந்ததாதல் வேண்டும் என்பதுடன், குடியியல் வழக்குகளிலான மேன்முறை யீடுகள் தொடர்பாகக் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகள் அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின் விடயத்தில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண் டும்:

ஆயின், எவ்வாறாயினும், (7) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழான கட்டளையொன்று இறுதியானதாகவும் மேன்முறையீட்டுக்கு அமைந்திராததாகவும் இருத்தல் வேண்டும்.

(9) இப்பிரிவின்கீழ் ஒரு தகுதிவாய்ந்த நீதிமன்றத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் ஐயாயிரம் ரூபாப் பெறுமதியைக் கொண்ட ஒரு வழக்காகக் கருதப்படுதல் வேண்டும்.

(10) இப்பிரிவில்,-

"தகுதிவாய்ந்த நீதிமன்றம்" என்பது, ஏதேனும் வங்கித்தொழில் நிறுவனம் தொடர்பாக, அரசியலமைப்பின் 154ரு என்னும் உறுப்புரையினால் தாபிக்கப்பட்டதும் 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கின்றதுமான மேல் நீதிமன்றம் என்று பொருளாகும்.

(11) ஒரு வங்கித்தொழில் நிறுவனத்தின் தொழில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் இடைநிறுத்தப்பட்டுள்ளவிடத்து, மத்திய வங்கியானது-

(அ) அத்தகைய வங்கித் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அவசியமென மத்திய வங்கி கருதக்கூடிய ஏதேனும் செயலை அல்லது காரியத்தை செய்வதற்கான நடவடிக்கையை உடனடியாக எடுக்கும்படி அத்தகைய வங்கித்தொழில் நிறுவனத்தைத் தேவைப்படுத்தலாம்;

(ஆ) அத்தகைய வங்கித்தொழில் நிறுவனத்தில் தொழிலை முறையாக நடாத்துதல் தொடர்பாக அத்தகைய வங்கித் தொழில் நிறுவனத்துக்கு மதியுரையளிப்பதற்கு தகுதியானவரும் தகுந்தவருமான ஆளொருவரை நியமிக்கலாம்;

(இ) அத்தகைய வங்கித்தொழில் நிறுவனத்தின் தொழிலின் கட்டுப்பாட்டை ஏற்கலாம் மற்றும் கொண்டு நடாத்தலாம் அல்லது அவ்வங்கித்தொழில் நிறுவனத்தின் தொழிலை கொண்டுநடாத்துவதனை இன்னோராளுக்கு கையளிக்கலாம்;

(ஈ) அத்தகைய வங்கித்தொழில் நிறுவனத்தின் மூலதனத்தை அதிகரிப்பதன்மூலமும் உரிய பங்குதாரர்களை ஒழுங்கேற்பாடு செய்வதன்மூலமும் அதன் பணிப்பாளர் சபையை மீளமைப்பதன்மூலமும் அதனை மீள ஒழுங்குபடுத்தலாம்; அத்துடன்

(உ) அத்தகைய வங்கித்தொழில் நிறுவனத்தை வேறேதேனும் வங்கித்தொழில் நிறுவனத்துடன் ஒன்றுசேர்ப்பதற்கு, அத்தகைய ஒன்றுசேர்க்கைக்கு அந்த வங்கித்தொழில் நிறுவனம் சம்மதித்தால் அவசியமானவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்யலாம்.

(12)(அ) உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி ஒன்று தொடர்பில் (இதனகத்துப்பின்னர், "வங்கித்தொழில் சட்டம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க,

வங்கித்தொழில் சட்டத்தில் 76க என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் மத்திய வங்கியினால் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து, இப்பிரிவின் (4), (5), (7), (8), (9), (10) மற்றும் (11) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், வங்கித்தொழில் சட்டத்தின் 76க என்னும் பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகள் எவ்வாறிருப்பினும் மற்றும் இவ்வுட்பிரிவின் (ii) ஆம் பந்திக்கமையவும், ஏற்றமாற்றங்களுடன், அத்தகைய வங்கிக்கு அது ஒரு வங்கித் தொழில் நிறுவனமாக இருக்கின்றதென்றாற்போன்று ஏற்புடையன வாதல் வேண்டும்.

(ஆ) இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பிரயோகம்-

(i) உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றின் ஒடுக்குதலை தேவைப்படுத்துமிடத்து மத்திய வங்கியானது, வங்கித்தொழில் சட்டத்தின் பாகம் IX அ என்பதன்கீழ் அத்தகைய வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்குதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் பாகம் VIII இன் ஏற்பாடுகள், இலங்கையினுள் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட வங்கியொன்றின் விடயத்தில், வங்கியின் கட்டாயமான ஒடுக்குதலாக அது இருந்தது என்றாற்போன்று அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கி ஒன்றின் விடயத்தில், வங்கியின் அலுவல்களை கட்டாயமாக ஒடுக்குதல் அல்லது தொழிலை மூடிவிடுதல் என்றாற்போன்று அத்தகைய ஒடுக்குதலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்; அல்லது

(ii) உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றின் தொழில் மீளத் தொடங்கப்படுவதனைத் தேவைப்படுத்துமிடத்து, மத்திய வங்கியானது வங்கித்தொழில் சட்டத்தின் 76ங என்னும் பிரிவின்கீழ் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கலாம்.

(இ) இவ்வுட்பிரிவில் "உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பயிற்சி

**109.** மத்திய வங்கியானது, மத்திய வங்கியின் தொழிற்பாடுகளுக்கு இயைபானவையாகவுள்ள விடயங்களின்மீது தொழில்நுட்ப ஆளணியினரின் பயிற்சியை மேம்படுத்துதலும் அதற்கு அனுசரணையளித்தலும் வேண்டும்; அத்துடன் அந்நோக்கத்துக்காக மத்திய வங்கியானது, எண்பிக்கப்பட்ட திறமையையுடைய மத்திய வங்கியின் ஊழியர்களின் அல்லது மத்திய வங்கியினால் தெரிவுசெய்யப்பட்ட வேறெவரேனும் தகைமைபெற்ற ஆட்களின் இலங்கையிலான அல்லது வெளிநாட்டிலான கற்கைச் செலவுகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

இச்சட்டத்தின் கீழான தவறுகள்

**110.** (1) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்ற அல்லது அதற்கிணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள், இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

(2) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட எந்த விதியின் அல்லது கட்டளையின் மீறுகை அல்லது அதனோடு இணங்கியொழுகத் தவறுகின்றமை குற்றவியல் தடைவிதிப்பை உட்படுத்துகின்றதோ அந்த ஏதேனும் விதியின் அல்லது கட்டளையின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்ற அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

(3) இச்சட்டத்தின்கீழான தவறொன்று கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்போது, தவறுபுரியப்பட்ட நேரத்தில் அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளராக அல்லது அலுவலராகவிருந்த ஒவ்வோராளும், அத்தவறானது அத்தகைய ஆள் அறியாமல் புரியப்பட்டதென அல்லது அத்தகைய ஆள் அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தாரென அத்தகைய ஆள் எண்பித்தாலொழிய, அத்தவறைப் புரிந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

தண்டம்

**111.** இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது, இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது

மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

தவறுகளை இணக்குதல்

**112**. ஆளும் சபையானது, இச்சட்டத்தின்கீழான தவறு எச்சூழ்நிலைகளில் புரியப்பட்டதோ அச்சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய தவறுக்காக இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட அதிக பட்சக் குற்றப்பணத்தின் ஓரரைவாசியை விஞ்சாத பணத் தொகையொன்றுக்காக அத்தகைய தவறை இணக்கலாம்.

கட்டணங்களும் விதிப்பனவுகளும்

**113**. (1) மத்திய வங்கியானது, இச்சட்டத்தின்கீழான தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அது அளிக்கின்ற சேவைகளுக்காகக் கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளைச் சேகரிக்கலாம்.

(2) மத்திய வங்கியானது, அத்தகைய கட்டணங்களை அல்லது விதிப்பனவுகளை அதன் அலுவலகமுறையான இணையத்தளத்தில் வெளியிடுதல் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது, இச்சட்டத்தில் குறிப்பாக ஏற்பாடு செய்யப்பட்டவை தவிர்ந்த ஏதேனும் சேவையை அரசாங்கத்தின் கோரிக்கையின்பேரில் அல்லது அதன்சார்பில் அளிப்பதற்காக அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்துக்காகச் சந்தை வீதங்களில் அதற்கு மீளளிப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

தடை செய்யப்பட்ட செயற்பாடுகள்

**114**. (1) இச்சட்டத்தினால் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் வேறுவகையாக குறிப்பாக அதிகாரமளிக்கப்பட்டதனைத் தவிர, மத்திய வங்கியானது-

(அ) இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறுதவிர, ஏதேனும் கடனை வழங்குதலாகாது அல்லது ஏதேனும் பணவகையான அல்லது நிதிசார் ஈட்டுகையை பெறுதலாகாது;

(ஆ) வியாபாரத்தில் ஈடுபடுதலோ அல்லது ஏதேனும் வர்த்தக, கைத்தொழில் அல்லது வேறு பொறுப்புமுயற்சியில் வேறுவகையாக நேரடியான அக்கறையை, அத்தகைய

அக்கறை, அதன் உரிமைக்கோரிக்கைகளுள் எவற்றையும் கொடுத்துத் தீர்ப்பதில் கொள்ளப்படுமிடத்துத்தவிர, கொண்டிருத்தலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய எல்லா அக்கறையும் இயன்றளவு மிக முந்திய சந்தர்ப்பத்தில் கையுதிர்க்கப்படுதல் வேண்டும்;

(இ) வேறேதேனும் வங்கியின் அல்லது நிதிநிறுவனத்தின் அல்லது ஏதேனும் கம்பெனியின் பங்குகளைக் கொள் வனவுசெய்தலாகாது அல்லது அத்தகைய எவையேனும் பங்குகளின் பிணைப்பொறுப்பின்மேல் கடன்களை அல்லது முற்பணங்களை வழங்குதலாகாது;

(ஈ) அசைவற்ற ஆதனத்தின் அல்லது அவை தொடர்பான உரித்தாவணங்களின் ஈட்டின்மீது அல்லது வேறுவகை யாக அவற்றின் பிணைப்பொறுப்பின்மீது கடன்களை அல்லது முற்பணங்களை வழங்குதலாகாது; அல்லது

(உ) அதன் நிருவாகத்தையும் தொழிற்பாடுகளையும் நடாத்துவதற்கென வளவுகளை ஏற்பாடுசெய்வதற்காக அல்லது அதன் பணிகளைப் புரிவதன் இடைநேர் விளைவான அத்தகைய வேறு தேவைப்பாடுகளுக்காக அவசியமானதென அல்லது உசிதமானதென அது கருதக்கூடியவாறுதவிர, அசைவற்ற சொத்திலான அல்லது அதற்கான ஏதேனும் உரிமையை கொள்வனவு, குத்தகை, வேறுவகையாக கொள்ளுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், மத்திய வங்கியானது-

(அ) சொத்தாண்மைப் பங்கொன்று உட்பட, மத்திய வங்கியின் பணிகளை முறையாக நிறைவேற்றுவதற்கு தேவைப்படு கின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஏதேனும் ஒழுங்கமைப்புக்கு போதியளவில் பிணைப்பொறுப்

பளிக்கப்பட்ட கடன்களை வழங்கலாம் அல்லது அதில் சொத்தாண்மைப் பங்கொன்றை வைத்திருக்கலாம் அல்லது வேறுவகையாகப் பங்குபற்றலாம் அல்லது ஆளும் சபையின் அபிப்பிராயத்தில், இலங்கையிலுள்ள வங்கித்தொழில் மற்றும் நிதிசார் துறையில் மனித வளங்களையும் தொழிநுட்பவியல் அபிவிருத்தியையும் முன்னேற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் அல்லது வசதிகளுள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் ஏற்பாடுசெய்வதற்கும் அமைக்கப்பட்டதான ஏதேனும் கம்பெனியில் வேறுவகையாகப் பங்குபற்றலாம்;

(ஆ) ஆளும் சபையினால் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்க, மத்திய வங்கியின் எவரேனும் ஊழியருக்கு கடன்களை வழங்கலாம்;

(இ) மத்திய வங்கியின் ஊழியர்களினதும் அவர்களில் தங்கி வாழுநர்களினதும் நியமத்தர்களினதும் நன்மைக்காக அல்லது பாதுகாப்புக்காக ஊழியர் ஓய்வூதிய நிதியங்களை அல்லது ஒத்த ஒழுங்கேற்பாடுகளைத் தாபிக்கலாம் என்பதுடன், அத்தகைய நிதியங்களை அல்லது ஒழுங்கேற்பாடுகளை முகாமை செய்யலாம்; அத்துடன்

(ஈ) மத்திய வங்கியின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் ஆதனத்தை குத்தகைக்குக் கொடுக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவில் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் செயற்பாடு, 80 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிக்கையில் மத்திய வங்கியினால் வெளியிடப்படுதல் வேண்டும்.

*இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வேறு எழுத்திலான சட்டத்திலும் மேலோங்கி நிற்றல்*

**115.** நூற்றிப்பத்தொன்பதாம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பயனுறுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க, இச்சட்டத்தினதும் அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு ஏற்படும் பட்சத்தில் மேலோங்கிநிற்றல் வேண்டும்.

**116.** வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும்– *வரி விலக்களிப்பு*

(அ) மத்திய வங்கியானது வருமானவரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) மத்திய வங்கியினால் முறியிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட அல்லது கொள்வனவுசெய்யப்பட்ட எவ்வகையினவையுமான எல்லாப் பண்டங்களும் சுங்கத்தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) இவ்விலக்களிப்பு இல்லாதிருப்பின் மத்திய வங்கி ஏதேனும் சாதனம் தொடர்பில் விதிக்கப்படற்பாலதான தீர்வையைச் செலுத்துவதற்குப் பொறுப்பாகவிருந்திருக்கும் விடயங்களில் மத்திய வங்கியினால் அல்லது அதன் சார்பில் அல்லது அதற்குச் சார்பாக நிறைவேற்றப்பட்ட அத்தகைய சாதனத்தின்மீது முத்திரைத் தீர்வையைச் செலுத்துவதிலிருந்து மத்திய வங்கி விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

**117.** (1) மத்திய வங்கியானது, அதன் உரிமைக்கோரிக்கை வருமதியாகவும் செலுத்தப்படற்பாலதாகவும் வருகின்ற நேரத்தில், அதன் உரிமைக்கோரிக்கைகளுக்கு பிணைப்பொறுப்பளிப்பதற்கு இணையுறுவாகவாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி, சம்பந்தப்பட்ட கடனாளியின் கணக்குக்காக அது வைத்திருக்கின்ற எவையேனும் பணமீதிகள், பிணைப்பொறுப்புக்கள் மற்றும் வேறு சொத்துக்களிலிருந்து அதன் பணிகளை நிறைவேற்றுவதன்மூலம் எழுகின்ற அதன் உரிமைக்கோரிக்கைகளுள் ஒவ்வொன்றையும் கொடுத்துத்தீர்ப்பதற்கு மற்றெல்லா உரிமைக் கோரிக்கைகளுக்குமெதிராக முதலாவது முன்னுரிமையையும் நிபந்தனையற்ற முந்துரிமை ரீதியிலான உரிமையையும் கொண்டிருத்தல் வேண்டும். *முந்துரிமை ரீதியிலான உரிமை*

(2) மத்திய வங்கியானது நட்டஈடு என்றவகையாக பணமீதிகளை ஒதுக்கீடு செய்வதன்மூலமும் வர்த்தகரீதியில் நியாயமாகவுள்ள ஒரு முறையில் தகாத தாமதமின்றி பிணையங்களையும் வேறு சொத்துக்

களையும் விற்பனைசெய்வதன்மூலமும் விற்பனையுடன் இணைந்துள்ள செலவுதொகைகளை அதிலிருந்து கழித்ததன் பின்னர் விற்பனை வரும்படிகளிலிருந்து தனக்கு பணஞ் செலுத்துவதன்மூலமும் மட்டுமே அதன் முந்துரிமை ரீதியிலான உரிமையைப் பிரயோகிக்கலாம்.

(3) மத்திய வங்கி (2) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் முந்துரிமை ரீதியிலான உரிமையைப் பிரயோகிப்பதற்கு ஏதேனும் சட்ட நீதிமன்றத்திலிருந்து அல்லது ஏதேனும் பகிரங்க உருவகத்திலிருந்து நடவடிக்கை எதுவும் தேவைப்படுதலாகாது என்பதுடன், (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க மத்திய வங்கி அதன் முந்துரிமை ரீதியிலான உரிமையை பிரயோகிப்பதனை தாமதிப்பதற்கு வேறு உரிமைக் கோரிக்கை எதுவும் அனுமதிக்கப்படுதலுமாகாது.

தீர்ப்புக்கு முன்னரான நடுக்கட்டலி லிருந்தான விடுபாட்டுரிமை

**118.** (1) இலங்கையில் தாபிக்கப்பட்ட ஏதேனும் சட்ட நீதிமன்றத் தினால் இறுதித் தீர்ப்பொன்று வழங்கப்படுமுன்னர் தங்கம், விசேட மீளப்பெறுதல் உரிமைகள், நாணயம், கடன்கள், வைப்புக்கள் அல்லது பிணையங்கள் மற்றும் அவற்றின் எவையேனும் வரும்படிகள் உட்பட, மத்திய வங்கிக்கெதிராக அல்லது அதன் ஆதனத்துக்கெதிராக நடுக்கட்டல் அல்லது நிறைவேற்றுகை எதுவும் வழங்கப்படுதலாகாது.

(2) மத்திய வங்கியானது, அதன் தற்றுணிபில், அதன் தங்கம், மற்றும் விசேட மீளப்பெறுதல் உரிமைகள் தொடர்பில் தவிர, ஒன்றில் முழுமையாக அல்லது பகுதியளவில், வெளிப்படையாக மற்றும் எழுத்தில் இப்பாதுகாப்பை விட்டுக்கொடுக்கலாம்.

அந்தரங்கத் தன்மை

**119.** (1) மத்திய வங்கியின் ஆளுநராக, ஆளும் சபையினதும் பணக் கொள்கைச் சபையினதும் வேறேவரேனும் உறுப்பினராக, நிதிசார் முறைமை மேல்நோக்கக் குழுவின் உறுப்பினரொருவராக அல்லது மத்திய வங்கியின் ஊழியரொருவராக அல்லது மத்திய வங்கியின் அதிகாரத்தின்கீழ் வேறேதேனும் தன்மையில் சேவையாற்றுகின்ற அல்லது சேவையாற்றியுள்ள ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அத்தகைய ஆளின் தத்துவங்கள், கடமைகள் மற்றும்

பணிகளைப் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் தவிர, அவரது கடமைகளைப் புரிகையில் அவர் பெற்றுக் கொண்டுள்ள ஏதேனும் பகிரங்கமற்ற தகவலை அணுகுவதற்கு அனுமதியளித்தலோ, வெளிவிடுதலோ அல்லது பிரசித்தப் படுத்துதலோ ஆகாது அல்லது அவரது சொந்த ஈட்டுகைக்காக அத்தகைய தகவலைப் பயன்படுத்துதலோ, அல்லது அத்தகைய தகவல் பயன்படுத்தப்படுவதனை அனுமதித்தலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனுமாள், ஆளும் சபையினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கைமுறைகளுக்கிணங்க, மத்திய வங்கிக்கு வெளியேயான பகிரங்கமற்ற தகவலை வெளிவிடுதல்-

(அ) அத்தகைய தகவல் எந்த இயற்கையான அல்லது சட்டப்படியான ஆள் தொடர்பானதோ அந்த இயற்கை யான அல்லது சட்டப்படியான ஆளின் எழுத்திலான சம்மதத்துக்கிணங்கச் செய்யப்படின்;

(ஆ) ஒரு சட்ட நீதிமன்றத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அல்லது இச்சட்டத்தின் வேறெவையேனும் ஏற்பாடுக ளுக்கு அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறே தேனும் எழுத்திலான சட்டத்திற்கு இணங்கியொழுகு வதற்குச் செய்யப்படின்;

(இ) மத்திய வங்கியின் கணக்காய்வை நடாத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய அளவுக்கு மத்திய வங்கியின் வெளிவாரிக் கணக்காய்வாளர்களுக்குச் செய்யப்படின்;

(ஈ) மத்திய வங்கி தொடர்பாக உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஒழுங்குபடுத்தும், மேற்பார்வைசார், அல்லது பணவகையான அதிகாரசபைகள், அல்லது பகிரங்கச் சர்வதேச நிதிநிறுவனங்கள் தமது கடமை களைப் பிரயோகிப்பதில் அவற்றுக்குத் தகவல் வழங்கு வதற்குச் செய்யப்படின்; அல்லது

(உ) எவையேனும் சட்ட வழக்குநடவடிக்கைகளில் மத்திய வங்கியின் நலன்கருதி தேவைப்படின்,

அவ்வாறு வெளிவிடலாம்.

(3) ஆளும் சபையானது, மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட தகவல்களின் வகுப்பாக்கத்தையும் அவற்றை அணுகக்கூடியதன்மையையும் தீர்மானிப்பதற்கு உரித்துடைய தாதல் வேண்டும்.

(4) எவையேனும் சட்டவழக்கு நடவடிக்கைகளில் மத்திய வங்கியின் ஏதேனும் புத்தகத்தின் அல்லது ஆவணத்தின் அல்லது அத்தகைய புத்தகத்திலுள்ள அல்லது ஆவணத்திலுள்ள ஏதேனும் பதிவீட்டின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி காண்பிக்கப்படுமிடத்து, அத்தகைய சான்றுப்படுத்தப்பட்ட பிரதி விடயத்துக்கேற்ப, அத்த கைய புத்தகம், ஆவணம் அல்லது பதிவீடு உள்ளமைக்கான முதற்றோற்றச் சான்றாக பெறப்படுதல் வேண்டுமென்பதுடன் மூலப் புத்தகம், ஆவணம் அல்லது பதிவீடு இப்போது சட்டத்தின்மூலம் ஏற்கத்தக்கதாகவுள்ள ஒவ்வொரு விடயத்திலும் அதே அளவுக்கும், ஆனால் அதற்கு மேலதிகமாக அல்லது வேறுவகையாகவல்ல, அதன்கண் பதியப்பட்ட கருமங்கள், கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கணக்குகள் பற்றிய சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

(5) இப்பிரிவில், "சான்றுப்படுத்தப்பட்ட பிரதி" என்பது, ஏதேனும் புத்தகம், ஆவணம் அல்லது பதிவீடு தொடர்பாக, அத்தகைய புத்தகத்தின், ஆவணத்தின் அல்லது பதிவீட்டின் பிரதி யொன்று என்று பொருளாகும்; அத்தகைய பிரதியின் அடியில்-

(அ) அது, அத்தகைய புத்தகத்தின், ஆவணத்தின் அல்லது பதிவீட்டின் உண்மையாக பிரதியாகவுள்ளதென்றும்;

(ஆ) அத்தகைய புத்தகம் அல்லது ஆவணம் மத்திய வங்கியின் கட்டுக்காப்பில் இன்னமும் உள்ளதென்றும்; அத்துடன்

(இ) அத்தகைய பதிவீடு மத்திய வங்கியின் சாதாரண புத்தகங்களுள் ஒன்றில் அடங்கியுள்ளதென்றும் தொழிலின் வழமையான மற்றும் சாதாரண நெறியின் போது செய்யப்பட்டதென்றும்,

எழுதப்பட்ட சான்றிதழ் ஒன்றுடன் சேர்ந்திருத்தலும் அத்தகைய சான்றிதழ் திகதியிடப்பட்டும் மத்திய வங்கியின் ஆளுநரினால் அந்நோக்கத்துக்காக அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான அத்தகைய அலுவலரின் பெயரும் அலுவலகமுறையான பதவியும் கையொப்பமிடப்பட்டதாகவிருத்தலும் வேண்டும்.

(6) இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுறுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தகவலுக்கான உரிமைச் சட்டத்தினதும் இச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது முரண்பாடு ஏற்படும் பட்சத்தில், மத்திய வங்கியின் ஏதேனும் தகவல் தொடர்பாகத் தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கிநிற்றலும் வேண்டும்.

வழக்கிலிருந்தான பாதுகாப்பு

**120.** மத்திய வங்கியின் ஆளுநர், ஆளும் சபையின் மற்றும் பணக் கொள்கைச் சபையின் ஏனைய உறுப்பினர்கள், மத்திய வங்கியின் எவரேனும் ஊழியர் அல்லது அத்தகைய ஏதேனும் பதவியை முன்னர் வகித்த ஆளொருவர் என்போருக்கெதிராக மத்திய வங்கியின் சார்பில் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதனை, புரிவதனை மற்றும் நிறைவேற்றுவதனைப் பின்பற்றி மற்றும் அவற்றின்போது இச்சட்டத்தின்கீழ் அவரினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக, அவர் நல்லெண்ணத்துடன் செயலாற்றினார் மற்றும் உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும், நியாயமான கவனத்தையும், திறமையையும் பிரயோகித்தாரென அவர் எண்பித்தால், குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடுக்கப்படுதலகாது.

சட்ட வழக்கு நடவடிக்கை களிலான செலவு தொகை களுக்கான நட்டோத்தர வாதம்

**121.** (1) மத்திய வங்கியின் ஆளுநர், ஆளும் சபையினதும், பணக் கொள்கைச் சபையினதும் ஏனைய உறுப்பினர்கள், மத்திய வங்கியின் ஊழியர்கள் என்போருக்கும் அத்துடன் அத்தகைய ஏதேனும் சபையின் உறுப்பினரொருவராக இருந்துள்ள அல்லது மத்திய வங்கியின் ஊழியரொருவராக இருந்துள்ள ஆளொவ்வொரு வருக்கும், அவரது துர்நடத்தை அல்லது வேண்டுமென்ற தவறுகை காரணமாக அமைத்துருவாக்கப்பட்டுள்ளனவென ஆளும் சபை கருதக்கூடியவாறான அத்தகைய இழப்புகளும் செலவுகளும் தவிர்ந்தவையும் இச்சட்டத்தின்கீழ் அவரது தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதில், புரிவதில் அல்லது நிறைவேற்றுவதில் அல்லது அது தொடர்பாக நியமிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் அவரினால் உறப்பட்டவையுமான எல்லா இழப்புக்களுக்காகவும் செலவுகளுக்காகவும் மத்திய வங்கியினால் நட்டோத்தரவாதமளிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக அத்தகைய நட்டோத்தர வாத நன்மையைக் கொண்டுள்ள ஆளொவ்வொருவரும், ஏதேனும் நியதிச்சட்டமுறையான அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட ஏதேனும் விசாரணை அல்லது புலனாய்வு தொடர்பில் அல்லது அத்தகைய ஆளுக்கெதிராகத் தொடுக்கப்பட்ட எவையேனும் சட்ட வழக்குநடவடிக்கைகள் தொடர்பில் சட்ட மதியுரையை நாடுவதற்கு அல்லது சட்டப்படியான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்வ தற்கு உரித்துடையவராதல் வேண்டும். மத்திய வங்கி, அத்தகைய விசாரணை அல்லது புலனாய்வு அல்லது வழக்குநடவடிக்கைகள் தொடர்பில் நியாயமானமுறையில் உறப்படக்கூடிய அத்தகைய செலவுதொகையை, அத்தகைய செலவுதொகை உறப்படுகின்ற போதும், செலுத்துதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆளின்பாலான துர்நடத்தை அல்லது வேண்டுமென்ற தவறுகை காரணமாக மத்திய வங்கியினால் நட்டோத்தரவாதமளிக்கப்படுவதற்கு ஆளொருவர் உரித்துடையவரல்லரெனக் கொள்ளப்படுமிடத்து, மத்திய வங்கியினால் அவ்வாறு உறப்பட்ட மொத்தச் செலவுதொகையைக் கோரிக்கையின்மீது மத்திய வங்கிக்கு மீளச்செலுத்துவதற்கு அவர் உடனடியாகத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு

கோரப்பட்ட தொகை மீளச்செலுத்தப்படும்வரை மத்திய வங்கிக்கு அத்தகைய ஆளிடமிருந்து வருமதியாகவுள்ள தனிசொன்றாக அது அமைதல் வேண்டும்.

**122.** மத்திய வங்கியின் ஆளுநர், ஆளும் சபையினதும் பணக் கொள்கைச் சபையினதும் ஏனைய உறுப்பினர்களும், மத்திய வங்கியின் ஊழியர்களும் (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கத்துக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

உறுப்பினர்களும் ஊழியர்களும் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்

**123.** மத்திய வங்கியானது (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

மத்திய வங்கி ஓர் அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவன மொன்றாகக் கருதப்படுதல்

**124.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய,-

பொருள் கோடல்

"வங்கித்தொழில் நிறுவனம்" என்பது,-

(அ) ஏதேனும் வர்த்தக வங்கி;

(ஆ) கடன்களை, முற்பணங்களை அளிக்கின்ற அல்லது முதலீடுகளைச் செய்கின்ற அல்லது பொதுமக்களிடமிருந்து பணவைப்புக்களை ஏற்றுக்கொள்கின்ற (ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது வேறுவகையாகத் தாபிக்கப்பட்டதாயினுஞ்சரி) அரசாங்கத்தின் சார்பில் செயலாற்றுகின்ற ஏதேனும் முகவராண்மை அல்லது நிறுவனம்; அல்லது

(இ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வங்கித் தொழில் நிறுவனமொன்றாகவுள்ளதென

வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் வெளிப்படுத்தப்பட்ட வேறெவரேனுமாள் அல்லது ஆட்கள் குழு,

என்று பொருளாகும்;

"ஞாபகார்த்த நாணயத்தாள் அல்லது குற்றி" என்பது, எவரேனுமாளை அல்லது விசேட நிகழ்வை நினைவு கூர்வதற்கு வழங்கப்பட்டவொரு நாணயத்தாள் அல்லது குற்றி என்று பொருளாகும்;

"நாணயம்" என்பது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்பட்டு புழக்கத்திலுள்ள எல்லா நாணயமும் என்று பொருளாகும்;

"வியாபாரியாகவுள்ள நேரடிப் பங்குபற்றுநர்" மற்றும் "நேரடிப் பங்குபற்றுநர்" என்பன, (417 ஆம் அத்தியாயமான) உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்திலும் (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்திலும் அவற்றுக்குக் குறித்தளிக்கப்பட்ட முறையான கருத்துக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"வைப்புப் பொறுப்புக்கள்" என்பது, வங்கிகளுக்கிடையேயான அழைப்புப் பணச் சந்தையிலுள்ள உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றல்லாத ஏதேனும் நிறுவனத்தினால் செய்யப்பட்ட கோரிக்கை வைப்புக்கள், விசேட வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், கால வைப்புக்கள், இடுகைகள், ஓய்வூதிய நிதியங்கள், சிறுவர் வைப்புத் திட்டங்கள் மற்றும் வேறு ஒத்த தன்மையினவான திட்டங்கள் என்பனவுட்பட, கடன்பத்திரம் மற்றும் விசேட வைப்புத்திட்டங்களுக்கெதிரான விளிம்புகள், மற்றும்

நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கப்பட்ட அல்லது வைப்புக்களின் விளைவாக அதன் திறத்தவர்களின் சார்பில் வைத்திருக்கப்பட்ட நிதிகள் என்பனவாகவுள்ள ஓர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியின் அப்பொறுப் புக்கள் எல்லாம் என்று பொருளாகும், ஆனால் வங்கிகளுக்கிடையேயான வங்கி வைப்புக்களை உள்ளடக்காது;

"நிதிநிறுவனம்" என்பது,-

(அ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் கருத்துக்குட்பட, ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி;

(ஆ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் கருத்துக்குட்பட, ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி;

(இ) 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித்தொழிற் சட்டத்தின் கருத்துக்குட்பட ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட நிதிக்கம்பெனி;

(ஈ) 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்தின் கருத்துக்குட்பட ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட நிதிக்குத்தகைத் தாபனம்;

(உ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட்ட பணத் தரகுத்தொழில் ஒழுங்குவிதிகளின் கருத்துக் குட்பட எவரேனும் பணத் தரகர்;

(ஊ) (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின் அல்லது 417 ஆம் அத்தியாயமான உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின் கருத்துக் குட்பட எவரேனும் முதனிலை வியாபாரி;

(எ) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கருத்துக்குட்பட எவரேனும் அதிகாரமளிக்கப் பட்ட அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி; அல்லது

(ஏ) அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் மத்திய வங்கிக்குக் குறித்தளிக்கக்கூடியவாறான வேறேதேனும் நிதிநிறுவனம்,

என்று பொருளாகும்;

"நிதிச்சந்தை" என்பது, நிதிசார் சொத்துக்களை உருவாக்கி பரிமாற்றுவதற்கான ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனஞ் சார் கட்டமைப்பு அல்லது அமைப்புமுறை என்று பொருளாகும்;

"நிதிச்சந்தை உட்கட்டமைப்பு" என்பது, கொடுப்பனவுகள், பிணையங்கள், வழிவந்தவை அல்லது வேறு நிதிசார் கொடுக்கல்வாங்கல்களைத் தீர்வுசெய்யும், கொடுத்துத் தீர்க்கும் அல்லது பதியும் நோக்கங்களுக்காக பயன்படுத் தப்பட்ட, முறைமையின் தொழிற்படுத்துநர் உட்பட, பங்குபற்றுகின்ற நிறுவனங்களுள்ளான பல்புடை முறைமையொன்றை உள்ளடக்கும்;

"நிதிசார்துறை அதிகாரசபை" என்பது, ஒரு நிதிசார்துறை பங்குபற்றுநரை ஒழுங்குபடுத்துவதற்காக அல்லது மேற்பார்வை செய்வதற்காகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபை என்று பொருளாகும்;

"நிதிசார்துறை பங்குபற்றுநர்" என்பது,-

(அ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கருத்துக்குட்பட, ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி;

(ஆ) *1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் கருத்துக்குட்பட, ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி;*

(இ) *2011 ஆம் இலக்க 42 ஆம் இலக்க, நிதித்தொழிற் சட்டத்தின் கருத்துக்குட்பட ஏதேனும் உரிமமளிக் கப்பட்ட நிதிக்கம்பெனி;*

(ஈ) *2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்தின் கருத்துக்குட்பட ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட நிதிக்குத்தகைத் தாபனம்;*

(உ) *இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட்ட பணத் தரகுத்தொழில் ஒழுங்குவிதிகளின் கருத்துக் குட்பட எவரேனும் பணத் தரகர்;*

(ஊ) *(420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின் அல்லது 417 ஆம் அத்தியாயமான உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின் கருத்துக் குட்பட எவரேனும் முதனிலை வியாபாரி;*

(எ) *2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கருத்துக்குட்பட எவரேனும் அதிகாரமளிக்கப் பட்ட அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி; அல்லது*

(ஏ) *2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கருத்துக்குட்பட ஏதேனும் காப்புறுதிக் கம்பெனி;*

(ஐ) *2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கருத்துக்குட்பட எவரேனும் காப்புறுதித் தரகர் அல்லது இழப்பு சீராக்குநர்;*

(ஒ) *2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கருத்துக்குட்பட எவரேனும் நிறுவனஞ்சார் முகவர்;*

(ஓ) *2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழுச் சட்டத்தின் கருத்துக்குட்பட ஏதேனும் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனை;*

(ஔ) *2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்துக்குட்பட எவரேனும் பங்குத்தொகுதித் தரகர் அல்லது பங்குத்தொகுதி வியாபாரி;*

(க) *2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்துக்குட்பட ஒரு கூறு நம்பிக்கைப்பொறுப்பைத் தொழிற் படுத்துகின்ற ஏதேனும் முகாமைசெய்யும் கம்பெனி;*

(ங) *2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கருத்துக்குட்பட சந்தை இடையீட்டாளராக தொழில்கொண்டு நடாத்துகின்ற எவரேனும் ஆள்; அல்லது*

(ச) அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் மத்திய வங்கிக்குக் குறித்தளிக்கக்கூடியவாறான வேறேதேனும் நிதிநிறுவனம்,

என்று பொருளாகும்;

"நிதிசார் முறைமை" என்பது, நிதிச்சந்தை உட்கட்டமைப்பின் ஊடாக பண அனுப்புகை மற்றும் நிதிகளைக் கடன் கொடுத்தலும் கடன்பெறுதலும் என்பவற்றில் ஈடுபடுகின்ற பல்வேறுபட்ட நிதிசார் சாதனங்களை கையாளுகின்ற நிதிநிறுவனங்களினதும் சந்தைகளினதும் வலையமைப்பு என்று பொருளாகும்;

"அரசாங்கம்" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் என்று பொருளாகும்;

"இலங்கைக் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு" என்பது, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு என்று பொருளாகும்;

"அமைச்சர்" என்பது, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் என்று பொருளாகும்;

"பணவகையான பொறுப்புக்கள்" என்பது, மத்திய வங்கியில் கிடைக்கக்கூடியனவாகவுள்ள எல்லா வகையினவையுமான பொறுப்புக்களையும் பணவகையான அடிப்படையின் பகுப்பாய்வுசார் பாவனையையும் கருத்திற்கொண்டு, புழக்கத்திலுள்ள நாணயமுட்பட ஒதுக்குப்பணம், மத்திய வங்கியில் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினாலும் அரசாங்க முகவராண்மைகளினாலும் வைத்திருக்கப்பட்ட வைப்புக்கள் மற்றும் காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு பொறுப்புக்கள் என்று பொருளாகும்;

"பண வழங்கல்" என்பது, எல்லா நாணயமும் கோரிக்கை வைப்புக்களும் கால மற்றும் சேமிப்பு வைப்புக்களும் அத்துடன் காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் விதித்துரைக்கப்படக்கூடியவையும் அரசாங்கம் தவிர்ந்த வேறு ஆட்களினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டவையுமான அத்தகைய வேறு நிதிசார் சொத்துக்களும், (வர்த்தக) வங்கிகளும் மத்திய வங்கியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிதிநிறுவனங்களும் அல்லது நிதிநிறுவனங்களின் வகுதிகளும் என்று பொருளாகும்;

"நாணயத்தாள்" என்பது, 1941 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, நாணயக் கட்டளைச்சட்டத்தின்கீழ் ஆணையாளர்கள் சபையினால் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஒரு நாணயத்தாள் உட்பட, மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஒரு நாணயத்தாள் என்று பொருளாகும்;

"ஏனைய நிதிசார் பொறுப்புக்கள்" என்பது, ஒரு நிதிநிறுவனம் தொடர்பாக, நாணயமாற்றுண்டியல்கள், வாக்குறுதிப் பத்திரங்கள், முறிகள், சான்றிதழ்கள், நாணயத்தாள்கள், வர்த்தகப் பத்திரம் அல்லது எந்த வேறு ஒத்த சாதனத்தின்மூலம் பொதுமக்களிடமிருந்து பணம் திரட்டப்படுகின்றதோ அந்த வேறு ஒத்த சாதனம் என்பனவற்றின் வழங்கலின்மூலம், அதன் தொழில் நெறியின்போது, பொதுமக்களிடமிருந்து எவ்வடிவத்திலும் பணத்தை ஏற்றுக்கொள்வதன்மூலம் அத்தகைய நிதிநிறுவனத்தினால் உறப்பட்ட வைப்புப்பொறுப்புக்கள் அல்லாத பொறுப்புக்கள் என்று பொருளாகும்;

"ஆள்" என்பது, அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களத்தினது எவரேனும் அலுவலரையும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன்கீழ் அல்லது வேறுவகை

யாகத் தாபிக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது அமைத்துரு வாக்கப்பட்டதாயினுஞ்சரி கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத எவரேனும் ஆட்கள் குழுவையும் உள்ளடக்கும்;

"விதித்துரைக்கப்பட்ட" என்பது, விதிகளினால் விதித்துரைக் கப்பட்ட என்று பொருளாகும்;

"பகிரங்க அதிகாரசபை" அல்லது "பகிரங்க உருவகம்" என்பது, ஓர் அமைச்சையும் திணைக்களத்தையும் மாகாண அமைச்சையும், மாகாண திணைக்களத்தையும் உள்ளூரதிகார சபையையும் பகிரங்கக் கூட்டுத்தாபனத் தையும் மற்றும் எந்தக் கம்பெனியில் அரசாங்கம் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது ஓர் உள்ளூர் அதிகாரசபை அக்கம்பெனியின் ஐம்பது சதவீதத்திலான அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக் கின்றதோ அந்தக் கம்பெனியையும் உள்ளடக்கும்;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, மானியக்கொடை, கடன் என்றவகையாக அல்லது வேறுவகையாக, அரசாங்கத் தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப் பட்ட நிதிகளை அல்லது மூலதனத்தைக்கொண்டு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்படுகின்ற அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் கூட்டுத்தாபனம் சபை அல்லது வேறு குழு என்று பொருளாகும்;

"பகிரங்கச் சர்வதேச நிதிநிறுவனம்" என்பது, ஆசிய அபிவிருத்தி வங்கி, புனரமைப்புக்கும் அபிவிருத்திக்கு மான சர்வதேச வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பவற்றை உள்ளடக்கும்;

"வதிபவர்" என்பது,-

(அ) இலங்கையில் வதிகின்ற இலங்கைப் பிரசையொருவர்;

(ஆ) கூட்டுமொத்தத்தில் எவையேனும் பன்னிரெண்டு மாதங்களைக்கொண்ட காலப்பகுதியில் நூற்றியெண்பத்திமூன்று நாட்களுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்கு இலங்கையில் இருந்துள்ள தனியாளரொருவர்;

(இ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்று அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் குழுமம் பங்காண்மை அல்லது வேறு ஒழுங்கமைப்பொன்று; அல்லது

(ஈ) ஏதேனும் வெளிநாட்டுச் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்டதும் இலங்கையில் தொழிற்படுகின்றதுமான ஒரு கம்பெனியின் கிளை, துணைநிலைக்கம்பெனி, இணைக்கம்பெனி, விசாலிப்பு, அலுவலகம் அல்லது வேறேதேனும் கூறு நம்பிக்கைப்பொறுப்பு அல்லது வேறு சட்ட ஆளொருவர்;

"பங்குச்சான்றிதழ் தொகுதியற்ற பிணையங்கள்" என்பது, பங்குச்சான்றிதழ் தொகுதியற்ற வடிவத்தில் வழங்கப்பட்ட பிணையங்கள் என்று பொருளாகும்;

"திறைசேரிச் செயலாளர்" என்பது, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் என்று பொருளாகும்;

"பிணையங்கள்" என்பது,-

(அ) பங்குச்சான்றிதழ் தொகுதியற்ற வடிவத்திலாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி, (417 ஆம் அத்தியாயமான) உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களையும்;

(ஆ) பங்குச்சான்றிதழ் தொகுதியற்ற வடிவத்திலாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி, (420 ஆம் அத்தியாயமான) பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி அல்லது பிணையங்களையும்; அத்துடன்

(இ) 59 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நோக்கத்துக்காகத் தவிர, பங்குச்சான்றிதழ் தொகுதியற்ற வடிவத்திலாயினுஞ்சரி அல்லது வேறுவகையாகவாயினுஞ்சரி, மத்திய வங்கியின் ஏதேனும் பிணையத்தையும்,

உள்ளடக்கும்;

"பிணையங்கள் கணக்கு" என்பது, மத்திய வங்கியின் பங்குபற்றுநரொருவருடன் பேணப்பட்டவொரு கணக்கு என்று பொருளாகும்;

"இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு" என்பது, 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு என்று பொருளாகும்;

"கொடுத்துத்தீர்த்தற் கணக்கு" என்பது, இச்சட்டத்தின்கீழ் பங்குபற்றுநரொருவரினால் பேணப்பட்டதும் மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன் முறைமையின் நோக்கங் களுக்காகப் பயன்படுத்தப்பட்டதுமானவொரு கணக்கு என்று பொருளாகும்; அத்துடன்

"விசேட வைப்புக்கள்" என்பது, ஏதேனும் விசேட கணக்கில் வைப்பிலிடப்பட்ட பணங்களிலிருந்து எழுகின்ற வர்த்தக வங்கியொன்றின் அந்த எல்லா வைப்புப் பொறுப்புக் களும் என்று பொருளாகும்;

பாகம் XIX

**நீக்கங்களும் பேணல்களும்**

*(422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தை நீக்குதல்*

**125.** (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

*பதவிக் காலங்களின் தொடர்ச்சி*

**126.** (1) (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்டவரும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முன்னரான நாளன்று பதவிவகிக்கின்றவருமான மத்திய வங்கியின் ஆளுநர் இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியின் ஆளுநராகக் கருதப்படுதலும் தொடர்ந்திருத்தலும் வேண்டுமென்பதுடன் அவரது பதவிக்காலம் முடிவுறும்வரை அத்தகைய பதவியில் தொடர்ந்து சேவையாற்றுதலும் வேண்டும்.

(2) (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நியமிக்கப்பட்ட பணச்சபையின் உறுப்பினர்கள், அச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவரும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முன்னரான நாளன்று பதவிவகிக்கின்றவருமான திறைசேரிச் செயலாளர்தவிர, இச்சட்டத்தின்கீழ் ஆளும் சபையின் உறுப்பினர் களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர்களின் முறையான பதவிகளின்காலம் முடிவுறும்வரை இச்சட்டத்தின்கீழ் ஆளுநர் சபையின் உறுப்பினர்களாகத் தொடர்ந்திருத்தலும் வேண்டும்.

(3) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி மத்திய வங்கியின் ஆளுநராக அல்லது ஆளும் சபையின் உறுப்பினர்களாகத் தொடர்ந்திருக்கும் ஆட்கள் இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் பதவிக்கு மீளநியமிக்கப்படுவதற்கு உரித்துடையோராதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய எவரேனுமாள், (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின்கீழ், மத்திய வங்கியின் ஆளுநராக அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவராக அத்தகைய ஆள் சேவையாற்றிய காலப்பகுதியுட்பட, பன்னிரெண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்குச் சேவையாற்றுதலாகாது.

தற்காலிக முற்பணங்கள்

**127.** (1) இச்சட்டத்தின் 86 ஆம் பிரிவிலுள்ள தடை எவ்வாறிருப்பினும், நிதியாண்டின் முதலாவது மாதத்தினுள் திரட்டு நிதியத்திலிருந்து உறப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கு மத்திய வங்கி புதிய நேரடியாக தற்காலிக முற்பணங்களை அரசாங்கத்துக்கு அளிக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஒவ்வொரு புதிய முற்பணமும், ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் நிலுவையாகவுள்ள அத்தகைய முற்பணங்களின் மொத்தத் தொகையானது, இயைபான காலப்பகுதிக்காக 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின்கீழ் அமைச்சரின் அமைச்சினால் வெளியிடப்பட்ட அரையாண்டு அறிக்கையில் அறிக்கையிடப்பட்டவாறு முற்போந்த நிதியாண்டின் முதலாவது நான்கு மாதங்களின் அரசிறையினது பத்து சதவீதத்தை விஞ்சுதலாகாது.

(2) அத்தகைய புதிய முற்பணங்கள், மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறு நிலவுகின்ற சந்தையுடன் தொடர்புபட்ட வீதங்களிலான வட்டியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) அத்தகைய புதிய முற்பணங்கள், நியமிக்கப்பட்ட தேதியில் அரசாங்கத்துக்கு மத்திய வங்கியின் நிலுவையாகவுள்ள கடனுக்கு மீள்நிதியளிப்பதற்கு அளிக்கப்படலாகாது.

(4) இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், அரசாங்கம் அதன் உடனடி அரசிறைத் தேவைப் பாடுகளுக்கு நிதியளிப்பதற்குச் சட்டத்தினால் ஏற்பாடுகள் செய்யப்படும்வரை பயனுடையனவாதல் வேண்டும்.

*அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பிணைப் பொறுப்புகளை மத்திய வங்கி கொள்வனவு செய்தல்*

**128**. எண்பத்தாறாம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவிலுள்ள தடை எவ்வாறிருப்பினும், மத்திய வங்கி, நியமனத் தேதியிலிருந்து பதினெட்டு காலப்பகுதியினுள், நிலவுகின்ற சந்தையுடன் தொடர்புபட்ட வீதங்களில் வட்டியை ஈட்டுகின்ற, ஆரம்பச் சந்தையில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பிணைப்பொறுப்புகளைக் கொள்வனவு செய்யலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பிணையப்பொறுப்புகள் நியமனத் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியினுள் முதிர்வடைதல் அல்லது மீட்கப்படுதல் வேண்டுமென்பதுடன் கொள்வனவுசெய்யப்பட்ட அத்தகைய பிணைப்பொறுப்புக்களின் மொத்தத் தொகை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் வரையறையின் பத்திலொன்றை விஞ்சுதலுமாகாது.

*அரசாங்கத்துக்கான நிலையுறுதியற்ற கடன்*

**129**. (1) எண்பத்தாறாம் பிரிவின் (1) ஆம், (4) ஆம் உட்பிரிவு களிலுள்ள தடை எவ்வாறிருப்பினும், நியமிக்கப்பட்ட தேதியன் றுள்ளவாறு அரசாங்கத்துக்கான மத்திய வங்கியின் ஏதேனும் நிலுவையாகவுள்ள கடனும் ஆரம்பச் சந்தையின்மீது கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் ஏதேனும் வைத்திருக்கையும் பேணப்படலாம்.

(2) மத்திய வங்கி, அமைச்சரின் கலந்தாலோசனையுடன், நியமிக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறு, அரசாங்கத்துக்கு மத்திய வங்கியின் ஏதேனும் நிலுவையாகவுள்ள கடனையும் ஆரம்பச் சந்தையின்மீது கொள்வனவுசெய்யப்பட்ட எவையேனும் நிலுவையாகவுள்ள பிணைப்பொறுப்புகளும் அத்தகைய தேதியை உடனடுத்துப்பின்வரும் ஓராண்டு காலப்பகுதியின்மேல், மத்திய வங்கியானது இயன்றளவுவரை அதன் பணக் கொள்கையின்கீழ் கைமாற்றத்தகு தனிசுச் சாதனங்கள் விற்பனை செய்யப்பட வேண்டிய குறித்துரைக்கப்பட்ட முதிர்வுக் காலப்பகுதியுடன் அத்தகைய தனிசுச் சாதனங்களாக மாற்றுதல் வேண்டும்.

*மூலதனத்தை மீட்டெடுப்ப தற்குப் பகிர்ந்தளிக்கத் தக்க ஈட்டுகைகளைப் பயன்படுத்துதல்*

**130.** உட்பிரிவுகள் 96 மற்றும் 97 என்பவற்றின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து நியமிக்கப்பட்ட தேதிக்குமுன்னர் மத்திய வங்கியின் மிகப்பிந்திய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகள், அதன் சொத்துக்களின் பெறுமதிகள் அதன் பணவகையான பொறுப்புக்களினதும் செலுத்தப்பட்ட மூலதனத்தினதும் பணத்தொகைக்குக் குறைவாகவுள்ளன வென்றும், அரசாங்கத்தின் நிதிநிலைமைக்கிணங்க, 97 ஆம் பிரிவைப் பின்பற்றி அவசியமான தொகையை நாணயத்தில் அல்லது கைமாற்றத்தகு தனிசுச் சாதனங்களில் மத்திய வங்கிக்குக் கைமாற்றுவதற்கு அது இயலாதுள்ளதென்றும் பிரதிபலித்தால், 96 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியைப் பின்பற்றி எஞ்சியுள்ள பகிர்ந்தளிக்கத்தகு ஈட்டுகைகளைத் திரட்டு நிதியத்துக்குச் செலுத்துவதற்கும் வரவுவைப்பதற்கும் மத்திய வங்கி தேவைப்படுத்தப்படுதலாகாது, ஆனால் அத்தகைய பகிர்தளிக் கத்தகு ஈட்டுகைகள், பதிலாக, அதன் மூலத்தை ஒரு தீங்குவிளை விக்கப்படாத மட்டத்துக்கு மீட்டெடுப்பதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், மத்திய வங்கியின் மூலதனம் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறாண்டு காலப்பகுதி யொன்றின்பின்னர் தீங்குவிளைவிக்கப்பட்டதாகவிருப்பின் அல்லது தீங்குவிளைவிக்கப்பட்டதாகத் தொடர்ந்திருப்பின், 97 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

*உற்பத்தித் திறன்சார் நோக்கங்களுக் காக நிறைவேற்றப் பட்ட கடன்வழங்கு தொழிற்பாடுகள் தொடர்பில் கடன் நிறுவனங்களுக் கான நிலையுறுதியற்ற கடன்*

**131.** நூற்றிப்பதின்நான்காம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் 88அ என்னும் பிரிவைப் பின்பற்றிக் கடன் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் நிலுவையாகவுள்ள கடன் மற்றும் சொல்லப்பட்ட சட்டத்தின் 108 ஆம் அல்லது 108அ என்னும் பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட ஏதேனும் கடன் உத்தரவாதம், உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறான நியதி நிபந்தனைகளுக்கமைய இச்சட்டத்தின்கீழ் பேணப்படுதல் வேண்டும்.

*மத்திய வங்கி அரசாங்கத்தின் முகவராகத் தொடர்ந்து செயலாற்றுதல்*

**132.** (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டம் நீக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், பகிரங்கத் தனிசு முகாமை முகவராண்மை அல்லது அலுவலகம் தொடர்பான இயைபான சட்டம் நடைமுறைக்குவரும் அத்தகைய தேதிவரை, அரசாங்கப் பிணைப்பொறுப்புகளை அரசாங்கத்தின் கணக்குக்காக வழங்குதல் தொடர்பிலும் பகிரங்கத் தனிசு முகாமை தொடர்பிலும் வரையறுக்கப்படவேண்டிய நீக்கப்பட்ட சட்டத்தின் 112 ஆம், 113 ஆம் பிரிவுகளைப் பின்பற்றி மத்திய வங்கி அரசாங்கத்தின் முகவராகத் தொடர்ந்து செயலாற்றுதல் வேண்டும்.

*பணச் சபையின் உரிமைகளும் கடப்பாடுகளும்*

**133.** (1) நியமிக்கப்பட்ட தேதிக்குமுன்னர் (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் சட்டத்தின்கீழ் பணச் சபைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான ஏதேனும் உரிமை அல்லது கடப்பாடு, வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்ட வாறு, இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியினால் ஏற்கப்படுதல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட தேதிக்குமுன்னர் (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் சட்டத்தின்கீழ் பணச் சபையினால் எடுக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட ஏதேனும் நடவடிக்கை, ஒழுங்குவிதி அல்லது முடிபு, வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்பட்டதனைத்தவிர, இச்சட்டத்தின் கீழ் மத்திய வங்கியினால் எடுக்கப்பட்டுள்ளதாக அல்லது வழங்கப்பட்டுள்ளதாக அல்லது செய்யப்பட்டுள்ளதாகக் கருதப் படுதல் வேண்டும்.

*பேணல்கள்*

**134.** வேறேதேனும் சட்டத்திலுள்ள ஏற்பாடு எவ்வாறிருப்பினும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து,-

(அ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று, (இச்சட்டத்தில் "நீக்கப்பட்ட சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின்கீழ் மத்திய வங்கியின் மூலதனம், நியமிக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறு இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியின் மூலதனமாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று, பதவிவகிக்கின்ற, நீக்கப்பட்ட சட்டத்தின்கீழான மத்திய வங்கியின் ஊழியர்கள், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியின் ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஊழியர்கள், நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் மத்திய வங்கியில் அவர்களினால் வகிக்கப்பட்ட உரிய பதவிகளுடன் இணைந்த நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் குறையாத அனுகூலமுடைய நியதிகளினதும் நிபந்தனைகளினதும் மீது, இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியில் தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்;

(இ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட ஞாபகார்த்த நாணயத் தாள்களும் குற்றிகளுமுட்பட எல்லா நாணயத்தாள்களும் குற்றிகளும், நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் அதன் நாணய வழங்குகையின் பாகமாகவுள்ள அதன் சொந்த நாணயத்தாள்களினதும் குற்றிகளினதும் வைத்திருக்கையும் விடயத்துக்கேற்ப, இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்டு வைத்திருக்கப்பட்ட நாணயத்தாள்களையும் குற்றிகளாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் மத்திய வங்கியினால் தாபிக்கப்பட்டவையும் தொழிற்படுத்தப்பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையுமான எல்லாக் கொடுப்பனவு, தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகளும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியினால் தாபிக்கப்பட்டு தொழிற்படுத்தப்பட்ட கொடுப்பனவு, தீர்வு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகளாகக் கருதப்படுதல் வேண்டும்;

(உ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் மத்திய வங்கியினால் அல்லது அதன் அலுவலர்களுள் எவரினாலும் தொடக்கிவைக்கப் பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்குநேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லாப் பரிசோதனைகளும், கணக்காய்வுகளும், நடாத்தப்பட்ட அல்லது நடாத்தப்படுகின்ற விசாரணைகளும் அல்லது புலனாய்வுகளும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து, இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியினால் அல்லது அத்தகைய அலுவலரினால் தொடக்கிவைக்கப்பட்ட விடயத்துக்கேற்ப, பரிசோதனைகளாகவும், கணக்காய்வு களாகவும், விசாரணைகளாகவும் அல்லது புலனாய்வு களாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(ஊ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் மத்திய வங்கியினால், பணச் சபையினால், அல்லது பணச் சபையினால் அதிகார மளிக்கப்பட்ட மத்திய வங்கியின் வேறெவரேனும் அலுவலரினால் செய்துகொள்ளப்பட்டவையும், நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையும் பயனுள்ளவையும், மத்திய வங்கி அல்லது பணச் சபை எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அவற்றுக்கு திறத்தவராகவுள்ளவையும், அல்லது மத்திய வங்கிக்குச் சார்பானவையுமான எல்லா ஒப்பந்தங்களும், உறுதிகளும், முறிகளும், உடன்படிக்கைகளும், உத்தரவாதங்களும், அற்றோணித் தத்துவங்களும், சட்டப்படியான பிரதிநிதித்துவ அளிப்புக்களும், எத்தகைய தன்மையினவையுமான வேறு சாதனங்களும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியினால் செய்துகொள்ளப்பட்டவையும் அல்லது அதற்குச் சார்பாக அளிக்கப்பட்டவையுமான ஒப்பந்தங் களாகவும், உறுதிகளாகவும், முறிகளாகவும், உடன்படிக்கைகளாகவும், உத்தரவாதங்களாகவும், அற்றோணித்தத்துவங்களாகவும், சட்டப்படியான பிரதிநிதித்துவ அளிப்புக்களாகவும் மற்றும் வேறு சாதனங்களாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(எ) இச்சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் குறிப்பாக இடைநிறுத்தப்பட்டாலொழிய அல்லது இல்லாதாக்கப் பட்டாலொழிய, அல்லது மீளப்பெறப்பட்டாலொழிய, நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் மத்திய வங்கியினால் அல்லது பணச் சபையினால் அல்லது பணச் சபையினால் அதிகார மளிக்கப்பட்ட மத்திய வங்கியின் எவரேனும் அலுவலரினால் ஆக்கப்பட்டவையும் அல்லது வழங்கப் பட்டவையும், நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையும் அல்லது பயனுள்ளவையுமான எல்லா உரிமங்களும், பதிவுகளும் விதிகளும், ஒழுங்குவிதிகளும், பணிப்புக்களும், தீர்மானங்களும், கட்டளைகளும், அங்கீகாரங்களும் அல்லது மறுப்புக்களும், அறிவித்தல்களும், சுற்றறிக்கைகளும், தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும் அல்லது வேறெவையேனும் எழுத்திலான தொடர்பாடல்களும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து, இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியினால் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட உரிமங்களாகவும், பதிவுகளாகவும், விதிகளாகவும், ஒழுங்குவிதிகளாகவும், பணிப்புக்களாகவும், தீர்மானங்களாகவும், கட்டளைகளாக வும், அங்கீகாரங்களாகவும், அல்லது மறுப்புக்களாகவும், அறிவித்தல்களாகவும், சுற்றறிக்கைகளாகவும், தொழிற் பாட்டு அறிவுறுத்தல்களாகவும் அல்லது வேறேதேனும் எழுத்திலான தொடர்பாடலாகவும் கருதப்படுதல் வேண்டும்;

(ஏ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் மத்திய வங்கியினால், பணச் சபையினால், அதன் உறுப்பினர்களினால் அல்லது மத்திய வங்கியின் எவரேனும் அலுவலரினால் அல்லது அதற்கு அல்லது அவர்களுக்கு எதிராக ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாட்டின்கீழ் தொடுக்கப் பட்டவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லா விண்ணப் பங்களும், வழக்குகளும், வழக்குநடவடிக்கைகளும் அல்லது எத்தன்மையினவையுமான மேன்முறை

யீடுகளும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின் கீழ் மத்திய வங்கியினால் அல்லது அதன் எவரேனும் அலுவலரினால் அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட விண்ணப்பங்களாகவும், வழக்குகளாகவும், வழக்குநடவடிக்கைகளாகவும் அல்லது மேன்முறையீடுகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்ப துடன் அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தவும்படலாம்;

(ஐ) ஏதேனும் வழக்கில் அல்லது வழக்குநடவடிக்கையில் ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் மத்திய வங்கியின் அல்லது பணச் சபையின் அல்லது மத்திய வங்கியின் எவரேனும் அலுவலரின் சார்பாக அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராகப் பதியப்பட்ட எல்லாத் தீர்ப்புக்களும், தீர்வைகளும் அல்லது கட்டளைகளும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கிக்கு அல்லது மத்திய வங்கியின் அத்தகைய வேறு அலுவல ருக்குச் சார்பாக அல்லது அதற்கு அல்லது அவருக்கு எதிராகப் பதியப்பட்ட தீர்ப்புக்களாக, தீர்வைகளாக அல்லது கட்டளைகளாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஒ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று, நீக்கப்பட்ட சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்தி லான சட்டத்தினது ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குபடுத்தும் தேவைப் பாட்டினது அல்லது வேறுவகையான நோக்கங்களுக்காக மத்திய வங்கியினால் பேணப்பட்ட எல்லா ஒதுக்குகளும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அத்தகைய நோக்கத் துக்காக வைத்திருக்கப்பட்ட மத்திய வங்கியின் ஒதுக்கு களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஓ) நீக்கப்பட்ட சட்டத்தின்கீழானவையும், நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்றுள்ளவையுமான -

(i) (பண மீதிகள், ஒதுக்கு நிதிகள், முதலீடுகள், புலமைச்சொத்து மற்றும் வைப்புக்களுட்பட) மத்திய வங்கியின் எல்லா அசைவுள்ள, அசை வற்ற மற்றும் அருவ, உருவ ஆதனங்களும்;

(ii) *மத்திய வங்கியின் வைப்புக்களும் எதிர்பாராப் பொறுப்புக்களும் உட்பட, எல்லாப் பொறுப்புக்களும்; அத்துடன்*

(iii) *அத்தகைய ஆதனங்களிலும் அத்தகைய பொறுப்புக்களிலும் அவற்றிலிருந்தும் எழுகின்ற எல்லா உரிமைகளும், தத்துவங்களும், சிறப்புரிமைகளும், அதிகாரங்களும், கடப்பாடுகளும், கடமைகளும், அக்கறைகளும்;*

(iv) *மத்திய வங்கி அல்லது மத்திய வங்கியின் ஏதேனும் ஆதனம் தொடர்பான அல்லது அதனோடிணைந்துள்ள எல்லாப் புத்தகங்களும், கணக்குகளும், ஆவணங்களும்,*

*நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியின் ஆதனங்களாகவும், பொறுப்புக்களாகவும், உரிமைகளாகவும், தத்துவங்களாகவும், சிறப்புரிமை களாகவும், அதிகாரங்களாகவும், கடப்பாடுகளாகவும், கடமைகளாகவும், அக்கறைகளாகவும், புத்தகங்களாகவும், கணக்குகளாகவும் ஆவணங்களாகவும் கருதப்படுதல் வேண்டும்;*

(ஔ) *நீக்கப்பட்ட சட்டத்தின்கீழானவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளவையுமான மத்திய வங்கி உரித்துடையதாகவுள்ள அல்லது அதனால் துய்க்கப்படுகின்ற எல்லா விலக்களிப்புக்களும், மீளளிப் புக்களும், இழப்புக்களும், சலுகைகளும், நிவாரணங் களும், வரிகளின், தீர்வைகளின், அறவீடுகளின், நன்மைகளும் அல்லது வேறேதேனும் பணவகையான நன்மையும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கி உரித்துடையதாகவுள்ள அல்லது அதனால் துய்க்கப்படுகின்ற விலக்களிப் புக்களாகவும், மீளளிப்புக்களாகவும், இழப்புக்களாகவும், சலுகைகளாகவும், நிவாரங்களாகவும், வரிகளின்,*

தீர்வைகளின், அறவீடுகளின் நன்மைகளாகவும் அல்லது வேறேதேனும் பணவகையான தன்மையாகவும் கருதப் படுதல் வேண்டும்; அத்துடன்

(க) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து, ஏதேனும் சட்டம் ஒழுங்குவிதி, அறிவிப்பு, ஒப்பந்தம், சாதனம், பதிவேடு, பங்குச் சான்றிதழ், ஆவணம், உறுதி, முறி, உடன்படிக்கை, உத்தரவாதம், அற்றோணித் தத்துவம், சட்டப்படியான பிரதிநிதித்துவத்தின் அளிப்பு மற்றும் எத்தகைய தன்மையினவையுமான வேறு சாதனம் என்பவற்றில் கொடுக்கப்பட்ட, நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் மத்திய வங்கி, பணச் சபை அல்லது மத்திய வங்கியின் எவரேனும் அலுவலர் பற்றிய ஒவ்வொரு குறிப்பீடும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்கு அதன்கீழ் மத்திய வங்கிக்கான அல்லது மத்திய வங்கியின் அத்தகைய எவரேனும் அலுவலருக்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**135.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*